
மண் இதழ் 234

ஜேர்மனி / 2025

கார்த்திகை – மார்கழி / Nove - Dece

Medicine(மருத்துவம்)



Mary E Brukkow - Fred Ramsdell - Shimon Sakaguchi

France USA Japan

Literature(இலக்கியம்)



Läszlo Krasznahorkai

Hungary

Physice பௌதீகவியல் (இயற்பியல்)



John Clarke - Michel Devoret - John M Martinis

USA USA USA

Chemistry (இரசாயனம்)



Omar Mwannes Yaghi

Jordan

Economic (பொருளாதாரம்)



Joel Mokyr - Philippe Aghion - Peter Howitt

USA UK USA

Peace (சமாதானம்



Maria Corina Machado

Venezuela

# நோபல் பரிசு வெற்றியாளர்கள் - 2025

# Nobel Prize List










யேர்மனி – முல்கைம் நகரில் வசிக்கும் எமது வாசகர் திருமதி மீரா நித்தியானந்தன் அவர்களின் நிதி உதவியால் தாயாரின் 5வது ஆண்டு நினைவாக புதுக்குடியிருப்பிலுள்ள ஒளிரும் வாழ்வு இல்லத்தில் வசிப்போருக்கு உணவளித்தல் 13.10.2025

# உள்ளே

- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி

**முகவரி:** V. Sivarajah
Am Windhoevel 18a
47249 Duisburg
Germany

**தொலைபேசி:** 0203/8073898

015254799233

**மின்னஞ்சல்:** v.sivarajah@arcor.de

**வங்கிவிபரம்:** Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX

# ஆசிரியர் பக்கம்...

## அனைவருக்கும் வணககம்!...

தமிழர் பகுதியில் சீரழியும் கலாச்சாரம். அண்மைய காலங்களில் தமிழர்கள் வாழும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெறும் கலாசார சீரழிவுகள், போதைப்பொருள் விற்பனை, களவு, கொள்ளை, காணி அபகரிப்பு, பாலியல் சம்பவங்கள் போன்ற பல குற்றச் செயல்கள், ஈழத் தமிழினத்தை அழிவு பாதைக்கு செல்லும் அவலம் தொடர்பில் சமூக வலைத்தங்களில் பலரும் கவலை வெளியிட்டுள்ளனர்.

போதைபொருள் விற்பனையில் கொடிகட்டி பறக்கும் இளம் குடும்ப தலைவிகள் ஒருபுறமும் , மறுபுறம் போதையாலும் குற்றசெயல்களாகும் கெட்டு சீரழியும் இளம் சமுதாயம் ஒரு புறமுமாக ஈழத்தமிழர் கலாச்சாரம வழி மாறி போய்கொண்டிருக்கின்றது.

போதைபொருள் விற்பனை - கள்ள உறவுகள், ஒருவனுக்கு ஒருத்தி என வாழ்ந்த காலங்கள் மலையேறி கொண்டிருக்கின்றது. குடும்ப வன்முறைகள் கொலைகளில் வந்து முடிகின்றன. சுகபோக வாழ்க்கை மற்றும் பணத்தின் மீதான மோகம் வாழ்க்கையில் அமைதியையும் உண்மையையும் மாற்றி விடுகின்றது.

அந்தவகையில் யாழில் தவில் வித்துவானை நம்பி கணவன் பிள்ளைகளை கைவிட்டு சென்ற குடும்ப பெண் , தகாத உறவால் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்திய நிலையில், முல்லைத்தீவில் 26 வயதான பெண் ஒருவர் நான்கு திருமணங்கள் செய்த சம்பவங்கள் என பல்வேறு கலாச்சார சீரழிவுகள் தமிழர் பகுதிகளில் அரங்கேறி வருகின்றது. அதுமட்டுமல்லாது வவுனியாவில் மனைவியின் தகாத உறவால் கணவன் மனைவியை கொன்று பிள்ளையுடன் பொலிஸாரிடம் சரணடைந்த சம்பவமும் நடந்துள்ளது.

அதேவேளை புலம்பெயர் தேசத்தில் வசிக்கும் எம்மவர்கள் சிலரும் இந்த சம்பவங்களுக்கு துணைபோவதாக தகவல் வெளியாகியுள்ளன. வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணமும் இந்தக் குற்றச் செயல்கள் அதிகரிப்புக்கு முக்கிய காரணம் எனச்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்கு ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் நம் கலாசாரம் இப்படி போகிறதே என தம்மை சீர்திருத்தி வாழ பழகாவிட்டால் அடுத்த சமுதாயத்தை எங்கே கொண்டு செல்லும் என்கின்ற கேள்வியை சமூக மட்டத்தில் எழவைத்துள்ளது. அதிலும் இளவயது குடும்ப பெண்கள் கலாசார சீரழிவுகளை நோக்கி நகர்வது வேதனைக்குரிய விடயம் ஆகும்.

உலகில் ஒப்பற்ற தமிழினமாக போற்றப்பட்ட எம்மினம் இன்று தடம்மாறி தடுமாறி போய்கொண்டிருக்கின்றது. குறிப்பாக யாழ்ப்பாணம், வன்னி பிரதேசங்களில் திட்டமிட்டு பரப்படும் விச செடிகள் படர்வது போல கலாசார சீரழிவுகள் தலை விரித்து ஆடுவது வேதனையை ஏற்படுத்துவதாக

திருகோணமலையில் தமிழர் தாயகத்தில் கடற்கரைப் பிரதேசத்தில் சட்டத்திற்கு முரணாக புத்த பிக்குகளினால் புத்தர் சிலையொன்று நிறுவப்பட்டிருக்கின்றது.அங்குள்ள தமிழ் மக்களின் கடும் எதிர்ப்பின் பின் சட்ட அனுமதியற்ற கட்டுமானம் என்று சொல்லி ஸ்ரீலங்கா பொலீசாரினால் 16.11.2025 அப்புறப்படுத்தப்படுகின்றது.இதன்பிறகு பாராளுமன்றத்தில் அரசாங்கத்தால் புத்தர்சிலையின் பாதுகாப்பு காரணமாக தான் அப்புறப்படுத்தப்பட்டது மீண்டும் நிறுவப்படும் என்ற பின் மீண்டும் அதே இடத்தில் அரசாங்கத்தால் புத்தபிக்குகள் மற்றும் பொலீசாருடன் இணைந்து அதே புத்தர் சிலை நிறுவப்பட்டிருக்கின்றது.

மாற்றம் என்று சொல்லி இனவாதமற்ற புதிய அரசியல் கலாச்சாரம் ஒன்று உருவாகும் என்று நம்பி வாக்கு செலுத்திய தமிழ் மக்கள் இன்று முழுவதுமாக அரசினால் ஏமாற்றப்பட்டிருக்கின்றனர்.இது இன்று நேற்றில்லை 76 வருடகாலமாக இந்த நாட்டில் நடந்தேறியிருக்கின்றது.இச்செயல் எந்த அரசு அதிகாரத்திற்கு வந்தாலும் சிங்கள பேரினவாதப்போக்கு மாறாது என்பதையே உணர்த்துகின்றது.

புத்தர் சிலையை வைத்தது யார்? அமைதியாக தங்கள் அன்றாட வாழ்க்கையை வாழும் தமிழ் மக்களை குழப்பியது யார் ? புத்தர் சிலையை அகற்ற வந்த பொலீசாரின் கன்னத்தில் அறைந்தது யார்? இவர்களுக்கு எதிராக எல்லாம் இந்த நாட்டில் சட்டம் செயற்படாதா? நாட்டின் ஆட்சியாளர்கள் மக்களுக்கான சேவையை ஆற்றுவதைக்காட்டிலும் புத்த பிக்குகளின் பேச்சை வேதவாக்காக கேட்டு நடப்பதையே இனப்பிரச்சினை தொடங்கிய காலகட்டத்திலிருந்து அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

ஏன் இனப்பிரச்சினையின் முக்கியகாரணமே சிங்களபௌத்த மயமாக்கல் தான்.யுத்தத்தின் ஆணிவேரும் இது தான். தொடர்ச்சியாக தமிழர் நிலங்கள் புத்த வழிபாடு என்ற பெயரிலே பௌத்த சிங்களமயமாக்கப்பட்டுக்கொண்டே இருந்துவந்துள்ளது.சிங்கள குடியேற்றங்களால் தமிழர் குடியேற்றப்பரம்பல் மாற்றியமைக்கப்பட்டுக்கொண்டே இருந்து வந்துள்ளது. இதில் இருந்து தமிழ் மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டிய விடயம் என்னவென்றால் யார் ஆட்சிக்கு வந்தாலும் ஒரு விடயம் தவறாமல் நடக்கும் .அது சிங்கள பௌத்தமயமாக்கல்.

தாங்கள் இடது சாரிகள் கம்யூனிச சிந்தாந்தத்தை உள்வாங்கி கொண்டு செயற்படுவதாக தங்களை தாங்களே கூறிக்கொள்ளும் அரசு நாட்டில் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுபான்மையினரான தமிழ்மக்கள் பக்கம் ஏன் நிற்கவில்லை என்று ஒரு கேள்வி எழுகிறது.இன்னும் எவ்வளவு காலத்திற்கு நாங்கள் அடக்குமுறைகளையும் ஆக்கிரமிப்புக்களையும் தாங்கிக்கொள்ள முடியுமென்று தெரியவில்லை.இந்தப்பிரச்சினையில் ஊடகவியலாளர்களும் தாக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பது இலங்கையின் ஜனநாயகத்தை கேள்விக்குறியாக்கும் செயல்.

இது ஏன் இவ்வளவு காலமும் பயங்கரவாத தடைச்சட்டமும் எடுக்கப்படவில்லை அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவில்லை. ஒவ்வொரு பிரச்சினைகளுக்கும் பின்னால் ஒரு அரசியல் அரங்கேற்றம் நிகழ்கின்றது.கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய எதிர்கட்சித்தலைவருக்கு ஆதரவளித்தவர்கள்,மாவீரர் தினத்தை யார் எடுத்து நடாத்துவது என்று தங்களுக்குள் சண்டையிட்டவர்கள். உங்களுக்குள் முழுவதுமாக ஒற்றுமை அடையாவிட்டால் எதையுமே சாதிக்க முடியாது. இறுதியாக எந்தவொரு சிங்களப்பேரினவாத அரசும் தமிழ்மக்களின் பக்கம் நீதியின் பக்கம் நின்றதில்லை. மிகச்சிறந்த அரசியல் தெளிவு பெற்ற நேர்மையான இளைய தமிழ்த்தேசிய அரசியல் கலாச்சாரம் வடகிழக்கில் வரவேண்டும்.அப்போது தான் வெள்ளம் வர முன் அணை கட்ட முடியும். தமிழ்மக்களாக அனைவரும் உங்கள் சிந்தனைகளில் ஒன்றிணையுங்கள்.

## சிறுவர் வட்டம்...




## ஆத்திசூடி...

## சோம்பித் திரியேல்...

சிறுவர்களான உங்களுடைய கடமைகள் என்ன?.. கல்வி கற்பது, பெற்றோர் கூறும் சிறிய பணிகளைச் செய்வது இவைதான் இல்லையா?.. பரீட்சை இன்னும் இரண்டு மாதம் இருக்கின்றது. இப்போதே என்ன படிப்பு?.. பரீட்சைச் சமயத்தில் படித்தால்தான் நினைவில் நிற்கும் என்று கூறிப் படிப்பதை ஒத்தி வைக்கலாமா?.. அதேபோலத்தான் பெற்றோர் கூறும் காரியங்களை இப்போது என்ன அவசரம்? என்று கடமையைச் செய்ய சோம்பலப்பட்டு ஒத்திப்போடக்கூடாது. பிறகு..பிறகு என்று கடமைகளைச் செய்யாமல் வெட்டிப் பொழுதாகக் கழிக்கலாமா?.. இப்படிச் சோம்பித் திரிபவர்களை உற்றாரும் ஊராரும் சோம்பேறி என்று இகழுவார்கள். அதனால்தான் இத்தகைய இகழ்ச்சிக்கு ஆளாகாமல் சோம்பேறியாகத் திரியாதே என்கிறார் ஔவைப்பாட்டி..

## தக்கோன் எனத்திரி...

ஒருவனுக்குப் பெயரும் புகழும் எப்படிக் கிடைக்கிறது?. வார்த்தை தவறாமை, அதிக ஆசை இல்லாமை, நாணயம், நம்பிக்கை ஆகிய குணங்களை உடையோராய் இருந்தால் அவர்களை மக்கள் உயர்ந்தவன் (தக்கோன்) தகுதியுடையவன் என்று பாராட்டுவார்கள். இவர்களைப் பெரியோர் என்றும் பாராட்டுவார்கள். பேராசை இல்லாமல், பிறரை வஞ்சிக்காமல், மற்றவர்கள் நம்பிக்கை வைக்கும்படி நாணயமாக வாழுபவர்களை மக்கள் மதிப்பார்கள். போற்றுவார்கள். இதனால் அவர்களுக்குச் சமூகத்தில் கௌரவம் ஏற்படும். இப்படி மதிப்பு, மரியாதையும் பெற்று யோக்கியனாக வாழ நீ முயற்சிக்க வேண்டும். பெரியவர்கள் உன்னை இவன் தகுதியானவன், உயர்ந்தவன் என்று புகழ்ந்து பாராட்டும்படி வாழு என்கிறார் ஔவைப்பாட்டி...

# நல்நெறிபற்றி........

- வி நந்தகுமாரன் -

## உயர்ந்த உள்ளங்கள் உயர்வடைகின்றன

உலகை வெறுப்புடன் பாராமல் விருப்புடன் பாருங்கள்.
உயர்ந்த எண்ணங்கள் உங்களை உயர்ந்தவர்களாக்குகிறது.
உலக இயக்கத்தில் நமது குறுகிய வாழ்க்கை அடங்குகிறது.
உடல் அழியும்போது கூடவே நான், எனது, என்பதுவும் அழிகிறது.
உலகம் என்ற இயக்கத்தினுள் நமக்கு எல்லாமே விதிக்கப்பட்டுள்ளது.
உண்டு மகிழ்வது மனித மனம், ஊட்டி மகிழ்வது தெய்வ மனம்.
உன் பெற்றோருடைய உபதேசங்கள் உன் வாழ்நாட்களைஉயர்த்தும்.
உயரத் துடிக்கும் உன்னத உள்ளங்களாக உன்னை உண்டாக்கு.
உறுதியாகப் பற்றிக்கொள்ளும் புத்திமதிகள் உன் உயிரைக் காப்பாற்றும்.
உயர்ந்தால் உயர்த்தவும், விழுந்தால் மிதிக்கவும் உலகம் காத்திருக்கிறது.
உரியகாலத்தில்கூறும் உபதேசங்கள் உறுதுணையான பாதுகாப்பைத்தரும்.
உண்மையின் பெறுமதி உணரும் வரை, உனக்குள் உளைச்சல், உறுத்தல் இருக்கும்.
உங்கள் ஆசைகள் அதிகரிக்கும்போது, உலகத்துடன் மோதிக் கொண்டிருக்கிறீர்கள்.
உள்ளம் என்றால் உயர்வானவற்றை சிந்திக்க வேண்டும், சிந்தனையே சிறப்பு.
உன் அறிவின் ஆற்றல், ஆர்வத்தின் அளவைப் பொறுத்தே அமைகிறது.
உலகத்தில் நீ கற்ற கல்வி உலகத்திற்கே சொந்தமாக்கப்பட வேண்டும்.
உண்மையான கல்வியில் தீயகுணங்கள் நுழையாமல் விழிப்பாயிரு.
உடல் மட்டும் வளர்ந்தால் போதாது, கூடவே மூளைப் பக்குவம் வளர வேண்டும்.
உனது நல் நடத்தையைப் பார்த்து தீயவனும்கூட திருந்தி நல்மனம் பெறுவான்.
உண்மைகளுக்கும், யதார்த்தங்களுக்கும் மத்தியில் விழித்திருப்பதே வாழ்க்கை.
உங்கள் உடல் மனம் சுற்றுப்புறச் சூழல்களை சுத்தமாக வைத்திருங்கள்.
உண்மையான உழைப்பில் வரும் ஊதியம் உன் வாழ்க்கையை வளமாக்கும்.
உத்தமனாய் வாழ்பவன் பத்திரமாய் பயமின்றி பாதுகாப்புடன் வாழ்கிறான்.
உண்மையான நண்பனை அவன் செய்கையும்,மனப்பான்மையும்,காட்டித் தரும்.
உனது நேரம் உன்னிடம் உள்ளது, உயர்வும் தாழ்வும் நீயே உண்டாக்குகிறாய்.
உங்களையும் உங்களைச் சுற்றியுள்ள உலகத்தையும் உணர்ந்து கொள்ளுங்கள்.
உதிரம் உள்ளவரை உன் குடும்பத்தைக் காப்பாற்ற உறுதி கொள்வதே திருமணம்.
உலகத்திற்கு சொந்தமானவற்றை உரிமை கொண்டாட நினைப்பது உயிர் பிரியும் வரைதான்.
உனக்கு முன்னாலும் உலகம் உள்ளது, உனக்குப் பின்னாலும், உலகம் உள்ளது.
உன் உடம்பில் இயக்கம் இருக்கும்போதே, இறைவன் இருப்பதை உணர்ந்து கொள்.

# குடும்பம் ஒரு கோவில்...

குடும்பம் என்பது ஒரு தனிநபரின் வாழ்வில் மிக முக்கியமான ஒன்று. ஒரு குடும்பத்தில் அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி, அண்ணா, அக்கா, தம்பி, தங்கை என பல உறவுகள் இருக்கும். குடும்பத்தினர் அனைவரும் அன்பாகவும் அக்கறையாகவும் ஒருவருக்கொருவர் உதவி செய்பவராகவும் ஆதரவாகவும் இருக்க வேண்டும்.


குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாக நிறைய நேரம் செலவிடுதல், ஒன்றாகச் சாப்பிடுதல், ஒன்றாக விளையாடுதல், ஒன்றாக சுற்றுலா செல்லுதல், ஒன்றாகப் பொழுது போக்கு நிகழ்வுகளில் கலந்துகொள்ளுதல் ஒன்றாக வழிபாட்டுத் தலங்களுக்குப் போய்வருதல் போன்ற விடயங்களைச் செய்தால் அக்குடும்பம் மிகவும் அழகாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும்.

”நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்” குடும்பம் நமக்கு அன்பு, ஆதரவு மற்றும் பாதுகாப்பைத் தருகின்றது. நமது அடையாளத்தை வடிவமைக்கின்றது. நமது சமூகத் திறன்களை வளர்க்க உதவுகின்றது. நமக்கு மகிழ்ச்சியையும் மன நிறைவையும் தருகின்றது. குடும்பம் என்பது ஒரு விலைமதிப்பற்ற பரிசு. அதை நாம் எப்போதும் போற்றிப் பாதுகாக்க வேண்டும்!..

..........................................................................................................................

## சிரிப்பு

ஒரு மனிதனுக்கு உணவே மருந்து என்பது போல சிரிப்பும் மருந்தாக விளங்குகின்றது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். அப்படிப்பட்ட சிரிப்பில் சிலரின் வகையைப் பார்ப்போம்...




- இன்பத்தில் சிரிப்பவன் அதிஷ்டசாலி.
- துன்பத்தில் சிரிப்பவன் ஞானி.
- கர்ப்பனையில் சிரிப்பவன் கவிஞன்.
- கண்டவுடன் சிரிப்பவன் காரியவாதி.
- தெரிந்து சிரிப்பவன் நடிகன்.
- தெரியாமல் சிரிப்பவன் ஏமாளி.
- ஓயாமல் சிரிப்பவன் பைத்தியக்காரன்.
- ஓடவிட்டுச் சிரிப்பவன் வஞ்சகன்.
- உட்கார்ந்து சிரிப்பவன் சோம்பேறி.
- உழைப்பில் சிரிப்பவன் உயர்ந்த மனிதன்.





# முல்லாவின் கதை

## புதுப்பானை...

முல்லாவின் வீட்டில் சிறுவன் ஒருவன் வேலை செய்து கொண்டிருந்தான். முல்லா ஒருநாள் புதுப்பானை ஒன்றை வாங்கி வந்தார். பையா! இந்தப் பானையை எடுத்து கொண்டு கிணற்றுக்குப் போய் நிறைய நீர் கொண்டு வா.. எனக் கூறினார்.

பையன் பானையை எடுத்துக் கொண்டு கிணற்றுக்குப் புறப்பட்டான். முல்லா சற்று தூரம் சென்ற பையனைக் கூப்பிட்டார். பையன் திரும்பி வந்து, " என்ன எஜமானே " என்று கேட்டான். இந்தப் பானை புத்தம் புதியது. அதிகப் பணம் கொடுத்து வாங்கியிருக்கிறேன். இதை நீ அஜாக்கிரதையாகக் கையாண்டு உடைத்தாயானால் அடி கொடுப்பேன் என்று கூறிய முல்லா பையன் முதுகில் ஓங்கி அறைந்தார்.

பையன் திடுக்கிட்டுத் திரும்பி, " எஜமானே, பானையை உடைத்தால்தானே அடி கொடுப்பேன் என்று கூறினீர்கள். நான் பானையை உடைக்கவில்லையே என்னை எதற்காக அடித்தீர்கள்? " என்று கேட்டான்.

அதற்கு முல்லா, " பையா! பானையை நீ உடைத்து விட்ட பிறகு உன்னை அடித்து என்ன பயன் உடைந்து போன பானை திரும்பியா வரும்? அதற்காகத்தான் எச்சரிக்கை அடியாக முன்னதாகவே அடித்தேன். இந்த அடியை நினைவில் வைத்தக் கொண்டு நீ பானை விஷயத்தில் மிகவும் கவனமாக இருப்பாய் அல்லவா?" என்று பதிலளித்தார்.

# நகுலின் தகவல்கள் - 13

## ஆசிரியர் தினம்...

ஆசிரியர் தினமானது நம் ஆசிரியர்களுக்னு நன்றி கூறும் ஒரு நல்நாள். ஒவ்வொரு நாடுகளிலும் வெவ்வேறு நாட்களில் ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகின்றது. ஆசிரியர்களின் நிலை குறித்து 1966ம் ஆண்டு அக்டோபர் 5ம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் கல்விமேம்பாட்டு நிறுவனமான யுனஸ்கோ பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு பரிந்துரையின் கையெழுத்திட்ட நாளை நினைவு கூறும் வகையில் கடைப்பிடிக்கப்பட்டு வருவதே சர்வதேச ஆசிரியர் தினம்.

இலங்கையில் அக்டோபர் 6ம் திகதி ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகின்றது. இலங்கையின் அரசியலமைப்பில் ஆசிரியர் சேவை ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள் 1994 அக்டோபர் 6ம் திகதி. இத்தினத்தை நினைவுகூறும் வகையில் இலங்கை ஆசிரியர்நாள் கொண்டாடப்படுகின்றது. இந்தியாவில் செப்டெம்பர் மாதம் 5ம் திகதி ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகின்றது. இந்தியக்குடியரசுத் தலைவராக இருந்த இராதாகிருஷ:ணரின் நினைவாக அவரின் பிறந்த நாளன்று இந்தியாவில் ஆசிரியர் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. ஆசிரியர்கள் தம்சேவை மூலம் நல்லதொரு சமூகத்தை கட்டியெழுப்புகின்றனர். ஆசிரியர்கள் எங்களுக்குப் பல நல்லகதைகளையும் சொல்லித்தந்து எங்களை நல்வழிப்படுத்துவார்கள்!..

**செல்வன் நகுல் துரையரங்கன்**
**எசன் - தமிழ்க் கலாச்சாரா பாடசாலை.**

## எனது நடனம்!..

பாவம் ராகம் தாளம்
இனணந்த நடனம்.
நிருத்தம் நிருத்தியம் நாட்டியம்
கொண்ட நடனம்.
ஆனந்த கூத்தனைப் பதியாகக்
கொண்ட நடனம்.
பலவித அசைவு நிலைகள்
அமைந்த நடனம்
நூற்றாண்டுகளாக வளர்ச்சி
அடையும் இந் நடனம்
எம் பரத நடனம்.

**அனுஸ்கா ராகவன் -எசன் -**

**தமிழ்க் கலாச்சாரா பாடசாலை.**

## மாம்பழம்!..

குண்டுக்குண்டு மாம்பழம்
கறுத்தக் கொழும்பான் மாம்பழம்
வண்டு குடைந்த மாம்பழம்
வாசம் உள்ள மாம்பழம்!...

உச்சி மரத்துக் கிளையிலே
ஊஞ்சல் ஆடும் மாம்பழம்
பச்சை மஞ்சள் நிறத்திலே
இச்சை ஊட்டும் மாம்பழம்!..

காயில் உண்ணப் புளித்திடும்
கனிந்த பின்னர் இனித்திடும்
மாய மான மாம்பழம்
மதுர முள்ள மாம்பழம்!..

# பிறந்தான் பாரினிலே!..



அகிலத்தின் பனித் துளிகள் நீராட
அன்னை மரியாள் தாலாட்ட
ஆடிடும் வைக்கோல் தொட்டிலிலே
ஆனந்தமாய் வந்துதித்தான் யேசுமகன்..

இதயத்தில் இருளைப் போக்கிடவே
இன்றைய நன்நாளில் அவதரித்தான்
ஈடில்லா அமைதி வாழ்வை இன்று
ஈட்டித் தந்துள்ளான் தேவபாலன்..

உயிர்களிடத்தில் கருணை சொரியவும்
உண்மை வாழ்வின் நன்மை காட்டவும்
ஊட்டினான்உணர்வுகளைதேவமைந்தன்
எந்நாளும் அவன் புகழ் பாடிடுவோம்...

எங்கும் பாலனின் சமாதானம் பாரீர்
எதிலும் பாலனின் அன்பைப் பாரீர்
ஏற்றிடும்தீபத்தில் அவன்ஒளி காண்பீர்
ஏழையின்சிரிப்பில் அவனைக் காண்பீர்..

ஐயன்இரட்சகன் அருளால் இன்றுநாம்
ஐயமின்றி வாழ்வில் சாந்தி கண்டோம்
ஒருவர் மற்றவரைப் புரிந்துகொண்டால்
ஒரு துன்பமில்லை என அறிந்தோம்...

ஒருதாய் மக்களாய் வாழ்ந்திடுவோம்
ஓருயிரிலும் அன்பைப் கொண்டிடுவோம்
ஒற்றுமையே பலமெனக் கண்டிடுவோம்
பிறந்தானே யேசு பிரான் பூவுலகில்...

# பிழையின்றித் தமிழ்!...

1- "வாழ்த்துக்கள்" என்பது தவறு "வாழ்த்துகள்" என்பதே சரி "க்" வரக்கூடாது.

2- "வாழ்க வளமுடன்" என்பது தவறு "வாழ்க வளத்துடன்" என்பதே சரி.

3- "நிகழும் மங்களகரமான ஆண்டு" என்று அழைப்பிதழில் அச்சிடுவது தவறு "மங்கலமான" என்பதே சரி.

4- "மங்கள இசை" என்றால் ஒப்பாரி அதாவது கடைசிப் பயணத்தின் போது இசைப்பது"மங்கல இசை " என்றால் தொடக்கம் என்பதே சரி

5- பலர் ஒரு நிகழ்வு ஆரம்பிக்கும்போது "துவக்கம்" என்று கூறுவார்கள் அது தவறு "தொடக்கம்" என்பதே சரி.

# பழமொழிகளும் அதன் விளக்கமும்....

1- **ஆழம் அறியாமல் காலை விடாதே...**
எந்த ஒரு செயலையும் அதன் தன்மையை ஆராயாமல் அதைச் செய்ய முற்படக்கூடாது.

2- **ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு..**
எதையும் கணக்கோடு செலவு செய்.

3- **ஆனைக்கும் அடி சறுக்கும்..**
திறமைசாலியும் சில வேளைகளில் தவறுசெய்வது இயல்பு.

4- **இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை..**
தோற்றத்தைக் கண்டு ஏமாறிப் போகாதே

## சில தாவரப்பெயர்கள்....

| | | |
|---|---|---|
| 01- | வாழை | - கன்று, குட்டி, தண்டு |
| 02- | தென்னை | - பிள்ளை, குரும்பை |
| 03- | மா | - கன்று |
| 04- | சோளம் | - தட்டு |
| 05- | தாழை | - மடல் |
| 06- | வாழை | - இலை |
| 07- | வேம்பு | - தழை |
| 08- | மூங்கில் | - இலை |
| 09- | கமுகம் | - கூந்தல் |
| 10- | முருங்கை | - கீரை |
| 11- | தென்னை | - குரும்பை |
| 12- | பனை | - குரும்பை, ஓலை |
| 13- | நெல் | - தாள், மணி |
| 14- | கீரை | - தண்டு |
| 15- | கொய்யா | - பிஞ்சு |
| 16- | தினை | - தாள் |
| 17- | கத்தரி | - பிஞ்சு |
| 18- | பலா | - இலை |
| 19- | வெங்காயம் | - தாள் |
| 20- | கேழ்வரகு | - தட்டை |

## திருப்ப வராதவை...

1- தவறவிட்ட - கல்வி
2- இழந்துவிட்ட - இளமை
3- பேசிவிட்ட - வார்த்தை
4- கடந்துவிட்ட - நேரம்
5- உடலைவிட்ட - உயிர்

## அறிந்தும் அறியாததும்... ஆட்டம் போடுவான்!...

- படித்தவன் அமைதியாக இருப்பான் அரைகுறையாகப் படித்தவன் ஆட்டம் போடுவான்.

- புத்தகம் அமைதியாக இருக்கும் அதைப் படித்தவன் ஆட்டம் போடுவான்.

- போத்தல் அமைதியாக இருக்கும் குடித்தவன் ஆட்டம் போடுவான்.

- பிணம் அமைதியாக் கிடக்கும். அதைத்தூக்கிச் செல்பவன் ஆட்டம் போடுவான்.

- பணம் அமைதியாகக் கிடக்கும் அதைவைத்திருப்பவன் ஆட்டம் போடுவான்.

## ஓரெழுத்துச் சொற்கள்..

01- ஆ - பசு
02- ஈ - கொடு
03- ஊ - இறைச்சி
04- ஏ - அம்பு
05- ஐ - தலைவன்
06- ஓ - மதகுநீர் தாங்கும்பலகை
07- கா - சோலை
08- கூ - பூமி
09- கை - ஒழுக்கம்
10- கோ -அரசன்
11- சா - இறத்தல்
12- சீ - இகழ்ச்சி
13- சே - உயர்வு
14- சோ - மதில்
15- தா - கொடு
16- தீ - நெருப்பு
17- தூ - தூய்மை
18- தே - கடவுள்
19- தை - மாதம்
20- நா - நாவு

## ஒலி வேறுபாடறிதல்

01- அலை -கடல்அலை, அலைந்துதிரிதல்
அளை -தயிர், பிசை, புற்று
அழை -கூப்பிடுதல், அழைத்தல்

02- இலை -முற்றிய தளிர்
இளை -மெலிந்து போதல்
இழை -செய், நூலிழை

03- உலை -நீர் உலை, வருந்து
உளை -பிடரிமயிர், சேறு
உழை -உழைத்தல்,மான்,பக்கம்

04- ஒலி - ஓசை
ஒளி - வெளிச்சம், பதுங்கிக்கொள்
ஒழி - அழித்துவிடு, நீக்குதல்

05- அலகு - பறவையின் மூக்கு
அளகு - பெண்பறவை, காட்டுக்கோழி
அழகு - வனப்பு, அலங்காரம்

## சில உயிரினங்களின் ஒலிச்சத்தங்கள்

01- நாய் - குரைக்கும்
02- நரி - ஊளையிடும்
03- யானை - பிளிறும்
04- குதிரை - கனைக்கும்
05- கழுதை - கத்தும்
06- புலி - உறுமும்
07- பன்றி - உறுமும்
08- சிங்கம் - கர்ஜிக்கும்
09- பசு - கதறும்
10- எருது - எக்காளமிடும்
11- ஆடு - கத்தும்
12- குரங்கு - அலம்பும்
13- பூனை - சீறும்
14- கரடி - கத்தும்
15- குருவி - கீச்சிடும்
16- வாத்து - கத்தும்
17- சேவல் - கூவும்
18- புறா - குறுகுறுக்கும்
19- வானம்பாடி - பாடும்
20- வண்டு - முரலும், இரையும்
21- எலி - கீச்சிடும்
22- பாம்பு - சீறும்
23- பல்லி - சொல்லும்
24- தவளை - கத்தும்

## சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 52

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | 2 | | 5 | 7 | | 8 | |
| | | | | | | | | 3 |
| | | | 8 | | 2 | | | |
| 8 | | | | 6 | | | | 2 |
| | 6 | | | 1 | 3 | | | |
| | | 7 | | | | 5 | | |
| | 3 | | | | 4 | | 2 | |
| | 7 | | | 2 | 5 | | | 1 |
| | | 5 | | | | 4 | | |

## சிறுவர் குறுக்கெழுத்துப் போடி 145
## ( கார்த்திகை-மார்கழி 2025 )

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இவ
01-04 கிறிஸ்த்தவர்களின் பெருநாள்.
09-10 மீன்பிடி உபகரணம் இது.
வ-இ
07-05 நம் நாட்டில் ஒரு பழமரம்.
14-13 பறவை இனம் இது.
கீ-மே
15-11 நம் நாட்டில் இதிலும் படுத்து உறங்குவார்கள்.
16-04 அகிம்சை போதித்த பெருமான்.
மே-கீ
01-13 ஔவையார் அருளிய நூல்களில் ஒன்று.
07-11 செல்லப் பிராணி இது.

முயற்சித்துப் பாருங்கள். விடை தெரியாவிடின் பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்.

# கணனிச் சொற்கள் சில....

## 15 Common Acronyms

01- Wi-Fi - Wireless Fidelity

02- PIN - Personal Identification Number

03- CEO - Chief Executive Officer

04- DIY - Do It Yourself

05- FAQ - Frequently Asked Questions

06- GPS - Clobal Positioning System

07- ATM - Automated Teller Machine

08- USB- Universal Serial Bus

09- ID - Identification

10- HR - Human Resources

11- IT - Information Technology

12- SMS - Short Message Service

13- VIP - Very Important Person

14- PDF - Portable Document Format

15- HTTP - Hyper Text Transfer Protocol

01- OCR - எழுத்துணரி
02- LED - ஒளிர்விமுனை
03- 3D - முத்திரட்சி
04- 2D - இருதிரட்சி
05- Projector - ஒளிவீச்சி
06- printer - அச்சுப்பொறி
07- Scanner - வருடி
08- Smart Phone - திறன்பேசி
09- Sincard - செறிவட்டை
10- Charger - மின்னூக்கி
11- Digital - எண்மின்
12- Cyber - மின்வெளி
13- Router - திசைவி
14- Selfie - தம்படம்,சுயஉரு
15- Thumbnail - சிறுபடம்
16- Meme - போன்மி
17- Print Screen - திரைப்பிடிப்பு
18- Inkjet மைவீச்சு
19- Laser சீரொளி
20- Computer கணனி

## பிறசொல் - தமிழ்

01- அதிகாரி - அலுவலர்

02- அதிபர் - தலைவர்

03- அந்நியர் - அயலார்

04- அபிஷேகம்- குடமுழுக்கு

05- அபூர்வம் - புதுமை

06- அர்த்தம் - பொருள்

07- அலங்காரம்- ஒப்பனை

08- அவசரம் - விரைவு

09- அனுமதி - இசைவு

10- ஆபத்து - இடர்

11- ஆரம்பம் - தொடக்கம்

12- ஆராதனை - வழிபாடு

13- இருதயம் - நெஞ்சு

14- உத்தரவு - கட்டளை

15- உபயோகம் - பயன்

16- உற்சாகம் - ஊக்கம்

17- கவனம் - கருத்து

# Tablet கணினிகள்...

சிலேட்டில் எழுதியகாலம்போய் Tablet கணினியில் எழுதும் காலம் வந்துவிட்டது.கணினியைப் பயன்னடுத்தும் பாவனையாளர்கள் அனேகமா னோர் இன்று இந்த Tablet கணினிகளைப் பயன்படத்தத் தொடங்கியுள்ளார்கள். இதனால் இன்று Tablet அல்லது Tablet PC எனப்படும் கணினிகளின் பயன்பாடு அதிகரித்துக் கொண்டு வருகின்றது. யாரைப் பார்த்தாலும் Tablet கணினி களையே இன்று கொள்வனவு செய்வதில் அக்கறை கொண்டுள்ளார்கள். இதனால் இவ்வகையான கணினிகள் பிரபல்யமடைந்து வருவதனை நாம் அவதானிக்க முடிகின்றது.

இப்படியான கணினிகளைக் கொள்வனவு செய்பவர்களுக்காக இங்கே சில தகவல்களையும் தரவுகளையும் தருகின்றேன் இவற்றைப் பயன்படுத்தி ஒரு தரமான Tablet ஐ கொள்வனவு செய்து பயன்படுத்திக் கொள்ளுங்கள். முதலில் இந்தத் Tablet கணினி என்றால் என்ன என்பதனை அறிந்து கொள்ளுங்கள்.

இந்தத் Tablet கணினிகளைப் பலர் பல பெயர் கொண்டு அழைக்கின்றார்கள். அப்படி அழைத்தாலும் பொதுவாக பலர் இந்தக் கணி-னியை கைக்கணினி (Tablet) என்றே அழைக்கின்றார்கள். எனவே நீங்களும் இதனைக் கைக்கணினி என்றே அழைத்துக் கொள்ளுங்கள் எனெனில் இது கையில் இலகுவாக எடுத்துச் செல்லக்கூடிய ஒன்றாக இருப்பதனால் இதனைக் கைக் கணினி என்று அழைக்கின்றார்கள்.

இந்தக் கைக்கணினியானது மிகவும் துல்லியமான தொழில்நுட்பத்திறன் கொண்ட ஒன்றாகும். இதனை பல நிறுவனங்கள் இன்று உற்பத்தி செய்து சந்தையில் விற்பனைக்கு விட்டுள்ளன. இந்த கைக்கணினியானது MOS (Mobile Operating System) என்னும் ஒருவகை இயக்கும் மென்பொருளின் உதவியுடன் தொழிற்படுகின்றமையால் இதனைக் கைக்குள் வைத்து பயன்படுத்த முடிகின்றது.

இந்தக் கை கணினிகள் அனைத்தும் Touch (தொடுத-திரை) பயன்படுத்தும் தொழில்நுட்பம் புகுத்தப்பட்டுள்ளதால் ஒரு கைத்தொலைபேசியைப் போல நாம் இதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இந்தக் கைக்கணினிகளை நாம் கைத்தொலைபேசியாகவும் பயன்படுத்தலாம். அதாவது உங்கள் சிம்காட்டை இந்தக் கைத்தொலைபேசிக்குள் செலுத்தி இதனை கைத்தொலைபேசியாகவும் கையாளலாம். இன்று புதிய தலை முறைகள் பல வெளிவந்தள்ளது.

இதில் Wlan, Bluetooth போன்ற தொழில்நுட்பம் புகுத்தப்பட்டிருப்பதால் இணையத்தளங்களுக்கு மிகவும் விரைவாகச் செல்ல முடிகின்றது. இந்தத்

தொழில்நுட்ப முறையின் அளவுகளைப் பொறுத்து வேகம் அதிகரிக்கின்றுது. வேக அதிகரிப்பினையும் அளவுகளையும் பொறுத்து இதன் விலை நிர்ணயிக்கப்படுகின்றது. மாணவர்களுக்கு இந்தக் கைக்கணினி மிகவும் பயன்பாடுள்ள ஒன்றாக அமைந்துள்ளது. இதனை எப்பகுதியிலும் வைத்துப் பயன்படுத்த இந்த Wlan தொழில்நுட்பமானது மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது. இதில் கமராவும் உள்ளதால் பயன் உள்ள ஒன்றாகவுள்ளது.

இந்தக் கைக்கணினிகளில் முக்கியமாக Windows RT, Android போன்ற Operating System பதியப்பட்டுள்ளது. இக் கைக் கணியை வாங்கியதும் நீங்கள் விரும்பிய Operating System த்தைப் பதிவுசெய்து பயன்படுத்தலாம் என்றாலும் நீங்கள் பதிவு செய்த ஒன்றை வாங்கிப் பயன்படுத்துவது மிக மிக நன்மை தரும் உதாணமாக Android 4,0 என்கின்ற Operating System பதிவு செய்த கைக்கணினிகளை வாங்குவது நல்லதாகும். இங்கே ஒரு உதாரணம் பார்க்கவும்.

இந்த உதாரணத்தில் காட்டப்பட்டுள்ள விபரங்களை வைத்து நீங்கள் ஒரு சிறந்த கைக்கணினியைக் கொள்வனவு செய்து கொள்ளலாம்..

Artikelmerkmale

| | |
|---|---|
| Artikelzustand: Neu | - Produktart: Tablet |
| Bildschirmgröße: 25,7 cm (10,1 Zoll) | - Marke: GF |
| Farbe: Schwarz | - Herstellernummer: |
| Auflösung: 1024 x 600 | - Speicherkapazität: 128 GB |
| Internetanschluss: WLAN | - Herstellergarantie: 2 Jahre |
| Hardware Anschluss: HDMI, USB | - Betriebssystem: Android |

Funktionen: Tablet PC, Datei-Browsing, E-Mail, Farbbildschirm, Integrierte Frontkamera, Integrierte Rückkamera, Media-Player, MP3-Player, Touchscreen, Videorecorder, Webbrowse




**தி.லம்பேட** - Frankfurt - Germany

**கணினிக் கல்வி இதழ் ஆசிரியர்**

Email - alxlambrtt@aol.com

# புதிர்போட்டி...




புதிர்களை கண்டுபிடிப்பது என்பது நம்மில் பலருக்கும் மிகவும் பிடித்தமான, சுவாரஸ்மான ஒன்றாகும். ஆர்வத்தை தூண்டும் புதிர்களும், சில சமயங்களில் முட்டாள்களாக்கும் புதிர்களும் கூட உண்டு.

அந்த வகையில் நமது சிந்தனைக்கு வேலை கொடுக்கும் புதிர் ஒன்றை இங்கே பார்ப்போமா. நீங்கள் பார்க்கும் இந்த படத்தில் மூன்று வட்டங்கள் இருப்பது போலத் தெரியும்.அதாவது புகைப்படத்தின் நடுவில் 3 வட்டங்கள் ஒன்றோடு ஒன்று ஒட்டியுள்ளன. இதில் வெளியான இந்த புதிரில் மொத்தம் எத்தனை வட்டங்கள் உள்ளன என்பதை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும்.

பக்கங்களைப் புரட்டினால் விடை கிடைக்கும்....

---

## உலகில் அதிகமொழிகள் பேசப்படும் நாடுகள்...

| | | | |
|---|---|---|---|
| 01- | பபுநியுகினியா | - 840 | - 850 |
| 02- | இந்தோனிஷியா | - 707 | - 720 |
| 03- | நைஜீரியா | - 525 | - 530 |
| 04- | இந்தியா | - 520 | - 525 |
| 05- | அமெரிக்கா | - 430 | - 450 |
| 06- | அவுஸ்திரேலியா | - 250 | - 320 |
| 07- | சீனா | - 290 | - 305 |
| 08- | மெக்ஸிகோ | - 291 | - 300 |
| 09- | கமரோன் | - 277 | - 280 |
| 10- | பிரேசில் | - 238 | - 245 |

## உலகில் தமிழ்பேசுவோர் அதிகமாக வாழும் நாடுகள்

| | | |
|---|---|---|
| 01- | இந்தியா | - 6.98.10.000 பேர் |
| 02- | இலங்கை | - 37.36.000 |
| 03- | மலேசியா | - 23.27.000 |
| 04- | மியன்மார் | - 10.00.000 |
| 05- | அமெரிக்கா | - 3.40.000 |
| 06- | தெ.ஆபிரிக்கா | - 2.50.000 |
| 07- | கனடா | - 2.37.900 |
| 08- | சிங்கப்பூர் | - 1.98.500 |
| 09- | பிரான்ஸ் | - 1.25.000 |
| 10- | பிரித்தானியா | - 1.24.000 |

## கூகுள் தேடு பொறி... தகவல் உலகை மாற்றிய புரட்சி...


1998 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், இரண்டு இளம் ஆராய்ச்சியாளர்களான லாரி பேஜ் மற்றும் செர்கே பிரின் ஸ்டான்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் மாணவராக இருந்தபோது உருவாக்கியதே கூகுள் தேடுபொறி. ஆரம்பத்தில் “BackRub” என்று பெயரிடப்பட்டிருந்தாலும், பின்னர் “Googol” என்ற கணிதச் சொற்றொடரிலிருந்து “Google” என மாற்றப்பட்டது. இணையத்தின் ஆரம்ப காலங்களில், தகவலைத் தேடுவது சிரமமாக இருந்தது. பல தேடுபொறிகள் இருந்தாலும், அவற்றில் பெறப்படும் தகவல்கள் தரவரிசையின்றி குழப்பமாகக் காணப்பட்டன. கூகுள் மட்டும், தகவல்களை ச்சரியான வரிசைப்படுத்தும் “PageRank” முறையை கொண்டு வந்தது. அதுவே உலகம் முழுவதும் இணையப் பயனர்களுக்கு ஒரு புரட்சியை ஏற்படுத்தியது.இன்று கூகுள் என்பது தேடுபொறியைத் தாண்டி, மின்னஞ்சல் (Gmail)வரைபடம் (Google Maps) யூடியூப், ஆண்ட்ராய்டு முறைமை, செயற்கை நுண்ணறிவு போன்ற பல துறைகளில் விரிந்து நிற்கிறது. உலகில் தினமும் கோடிக்கணக்கான மக்கள் தங்கள் முதல் கேள்வியை கூகுளிடம் கேட்கின்றனர்.கூகுள் உருவாக்கிய இந்த டிஜிட்டல் புரட்சி, கல்வி, ஆராய்ச்சி, வணிகம், அறிவியல், பொழுதுபோக்கு என அனைத்துத் துறைகளையும் மாற்றியது. தகவல் அனைவருக்கும் எளிதில் கிடைக்கக் கூடியதாகியது.1998ல் ஒரு சிறிய அறைமட்டும் இருந்த கனவு, இன்று உலகத்தின் அறிவுக் கதவாக மாறியுள்ளது. படித்தேன் பகிர்ந்து கொள்கிறேன்------ **கலை - மலேசியா**

## குமரகுருபரர்........

குமரகுருபரர் பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு சிறந்த தமிழ் சைவப் புலவர். சிறு வயதிலிருந்தே அவர் தெய்வ பக்தியிலும் கவிதை திறமை யிலும் சிறந்தவர். அவரின் குரு சொல்லிச் சைவ மதத்தைப் பரப்புவதற்காக அவர் வட இந்தியாவின் வாரணாசி நகரத்திற்குப் பயணம் செய்தார். அங்கு சென்றபோது மக்கள் அனைவரும் ஹிந்துஸ்தானி மொழி பேசுவதை அவர் கண்டார். ஆனால் குமரகுருபரருக்கு அந்த மொழி தெரியவில்லை பேரரசரைச் சந்திக்க வேண்டியிருந்ததால், அவர் ஞானத்திற்கும் பேச்சுத் திறனுக்கும் தெய்வமான சரஸ்வதி தேவியிடம் பிரார்த்தனை செய்தார். மிகுந்த பக்தியுடன் அவர் ”சகலகலாவல்லி மாலை” என்ற பாடலைப் பா-டினார். அந்த பாடலில் சரஸ்வதி தேவியைப் புகழ்ந்து, புதிய மொழியைப் பேசும் திறன் தரச் சொன்னார். தேவிக்கு அவரது பக்தி மிகவும் பிடித்தது. அதனால் , சரஸ்வதி தேவி அவருக்கு ஹிந்துஸ்தானி மொழியைப் பேசும் திறனை அளித்தாள். பின்னர் அவர் பேரரசரின் அரண்மனைக்குச் சென்றார். அங்கு அவர் இனிமையாகவும் அறிவுடன் பேசினார்.பேரரசர் ஆச்சரியப்பட்டு, குமரகுருபரரை பாராட்டி , சைவ மதத்தைப் பரப்ப வாரணாசியில் நிலம் கொடுத்தார் . இந்தக் கதையின் கருத்தைப் புரிந்து , சரஸ்வதி தெய்வத்தைப் போற்றுவதற்காக ”சகலகலாவல்லி மாலைப்” பாடலை பாடுகிறோம்.

**செல்வி நித்தியா ரவீந்திரன் - எசன் – தமிழ்க் கலாச்சாரா பாடசாலை.**

# குறளும் பொருளும்...



## நட்பு....

781 - செயற்கரிய யாவுள நட்பி னதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு.

782 - நிறைநீர நீரவர் கேண்மை நிறைமதிப்
பின்னீர் பேதையார் நட்பு.

783 - நவிறொறு நூனயம் போலும் பயிறொர்றும்
பண்புடை யாளர் தொடர்பு.

784 - நகுதற் பொருட்டன்று நட்டன் மகுதிகண்
மேற்சென் றிடிதற் பொருட்டு.

785 - புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதா
னட்பாங் கிழமை தரும்.

786 - முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு.

787 - அழிவி னவைநீக்கி யாறுய்த் தழிவின்க
ணல்ல லுழப்பதா நட்பு.

788 - உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
யிடுக்கண் களைவதா நட்பு.

789 - நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி
யொல்லும்வா யூன்று நிலை.

790 - இளைய ரிவரெமக் கின்னம்யா மென்று
புனையினும் புல்லென்னு நட்பு.

# குறளும் பொருளும்...

## வினையிடை உதவும் நட்பு...

781- நட்பைப் போன்று உதவி செய்வதற்கு வேறு எவை உள்ளன?.. அதுபோலப் பகைவரின் தீமை புகாதிருக்கும் காவல் வேறு எவை உள்ளன.

782- அறிவுடையார் நட்பு பிறை வளரும் தன்மையானது. அறிவிலார் நட்பு முழுமதி தேய்ந்து மறையும் தன்மையானது.

783- கற்குந்தோறும் இன்பந்தரும் நூலைப் போன்றது. பழகப் பழக இன்பந்தருவது நற்பண்புடையவர் நட்பு.

784- நட்புக் கொள்வது சிரித்து மகிழ்வதற்கு மட்டும் அன்று நண்பர் தவறு செய்யும்போது இடித்துக் கூறுவதற்கும் ஆகும்.

785- ஒருவரிடம் நட்புக் கொள்வதற்குச் சேர்ந்து பழகவேண்டியதில்லை. இருவரின் உள்ளங்களும் ஒன்றும் உணர்ச்சியே நட்பின் உரிமையை உண்டாக்கும்.

786- ஒருவரைக் கண்டவுடன் மலர்ந்த முகத்துடன் சிரிப்பது நட்பன்று. நெஞ்சத்துள் அன்புடன் சிரிப்பதே நட்பாகும்.

787- நண்பனின் துன்பத்தை நீக்கி நல்வழியில் நடத்தி அவனுக்கு அழிவு வந்த காலத்தில் உடனிருந்து துன்பப்படுவதே நட்பாகும்.

788- உடை நெகிழக் கை உடனே சென்று உதவுவது போன்று நண்பனுக்குத் துன்பம் வந்தபொழுதே களைவது நட்பாகும்.

789- நட்பின் சிறப்பு நிலை எது என்றால், மாறுபாடு கொள்ளாமல் முடியும் பொழுதெல்லாம் நண்பனுக்கு உதவும் நிலையே ஆகும்..

790- இவர் எமக்கு இத்தன்மையவர் யாம் இவர்க்கு இத்தன்மையவர். என்று வேறுபாடு இல்லாமல் சொன்னாலும் நட்பு அற்பமாகும்.

# காசிஆனந்தனின் சிந்தனைகள்...




## புடம்..



காட்டில் இருந்த மூங்கில் ஒருநாள் கத்தியால் வெட்டப்பட்டது. நெருப்புக்கம்பி தன்னைத் துளைத்த போது "ஐயோ உடல் புண்ணாகிறதே" என்று கதறி அழுதது. "கொஞ்சம் பொறுமையாக இரு" என்று மூங்கிலைப் பார்த்து ஆறுதல் சொன்னது காற்று. மூங்கில் புல்லாங்குழல் ஆனது.. மேடையில்... உலகம் மயங்கும் இசையை அள்ளிப் பொழிந்து கொண்டிருந்த புல்லாங்குழலைப் பார்த்து மேனி சிலிர்த்தது காற்று. அது சொன்னது..

**" புண்பட்டவன் பண்பட்டவன் "**

## தேவை..



புல் மேய்துகொண்டிருந்தது மாடு. மரத்தில் இருந்த குருவிக்குஞ்சு தாயைக் கேட்டது. "ஏனம்மா மாட்டுக்கு நம்மைப்போல சிறகு இல்லை" தாய்க்குருவி சிரித்தது. "மாட்டுக்கு நம்மைப்போல சிறகு தேவையில்லை" என்றது தாய். தாய்க்குருவி சொன்னது..

**"வானத்தில் புல் முளைத்தால் மாட்டுக்குச் சிறகு முளைக்கும்'**

# குறுக்கெழுத்துப்போட்டி - 208
## (கார்த்திகை-மார்கழி 2025)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ
01-06 தமிழர் திருநாள் ஒன்று.
15-18 ஆசியாவின் பணக்கார நாடு.
23-26 தமிழர் கலைகளில் ஒன்று.
38-41 பிச்சை எடுப்பதை இப்படியும் அழைக்கலாம்.
வ-இ
11-08 இலங்கை வடபகுதியில் ஓர் ஊர்.
28-26 உறுப்புக்களில் ஒரு பகுதி.
35-31 மாதங்களில் ஒன்று.
49-45 பிராமணர்களின் இன்னொரு பெயர்.
கீ.மே
20-06 அரச துறைகளில் முக்கியமானது ஒன்று.
28-07 கிறிஸ்த்தவர்களின் பெருநாள்.
43-22 சிலரின் இந்தக் குணம் அழிவைத் தருகின்றது.
44-30 நம் நாட்டுப் பழ மரம்.
49-35 வீட்டில் ஒரு பெரியவர்.
மே-கீ
01-22 பலசாலி என்று அழைக்கலாம்.
05-26 நம் நாட்டில் இது பாவனைப் பொருள்.
09-30 இது போக்குவரத்துச் சாதனம்.
17-45 இந்தக் கவிஞனின் கவிகள் என்றும் நிலைத்து நிற்கும்.

**(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)**

## மாவீரர் பிரார்த்தனை...

எம் தேசம் காக்க
தீக்குளித்த தியாகங்களே!
உயிரையே துச்சமா மதித்து
உடல் அழித்து உயிர் கொடுத்த
உத்தமர்களே!
எம் மகத்தான மாண்புமிகு
தெய்வங்களே! மாவீரர்களே!
இரு கரம் கூப்பி
இதயத்தில் நிறுத்தி
வணங்குகிறோம்.
உங்கள் கனவுகள் நிறைவேறப்
பிரார்த்திக்கிறோம்.

ஆசாபாசங்களைத் துறந்து
உடல் பொருள் ஆவி
அனைத்தையும்
எம் மண்ணுக்காய் அர்ப்பணித்த
ஈகைகளை எண்ணி எண்ணி
எம் நெஞ்சு விம்ம விம்ம
விழி நீர் சிந்துகிறது.
வணங்குகின்றோம்.
சுடரில் சுடராகிச்
சுடர்விடும் உங்களை
வணங்கும் தருணத்தில்
விடுதலைதான் எம் மூச்சு என
வீராப்பாய் பேசியோரை
வீதியிலும் காணவில்லையே.
விடுலைக் களத்தில் நின்ற
வீர மறவர்கள் நாம் என்றோரும்
திசை மாறித் திக்குக்கொன்றாய்
பல பல. அணிகளாய் சிதைந்து
சிதறிக் கிடக்கின்றனர்.

மாவீரரே!உங்கள் ஆன்மாக்கள்
இவர்களை இனஙகண்டு
உள்வாங்கிப் பிரார்த்திக்
கின்றோம்!..

**மணியம் - டோட்முண்ட் - யேர்மனி**

## புத்தாண்டு...2026....

இனிய புத்தாண்டே வருக இன்பமாய் வருக

இனிய புது மலரே புதுமைகள் பல படைத்திடவும்

இதயமெலாம் மகிழ்வுடன் பூத்துக் குலுங்கிடவும்

இல்லமெலாம் சிறப்போடு பொலிவுறும் புத்தாண்டு!..

இல்லறம் ஓங்கி நல்லறம் பெருகிடவும்

இன்னல்கள் போக்கி இடர்கள் நீக்கிடவும்

இருள் அகற்றி வாழ்வில் ஒளி ஏற்றிடவும்

இணைந்தே கொண்டாடும் இனிய புத்தாண்டு!...

இன்பமாய் கூடி அன்பாய் வாழ்ந்திடவும்

இவ்வுலகில் சமாதானம் அமைதி நிலைக்கட்டும்

இனிய புத்தாண்டு தினம் இனிதே சிறப்புற

இதயம் கனிந்து நல்வாழ்த்துக்கள் கூறும் புத்தாண்டு!..

இல்லங்கள் தோறும் புதுப்பொலிவு பெற்று

இணைந்து மக்கள் கொண்டாடும் புத்தாண்டே

இடர்கள்கள் போக்கி வாழ்வு ஒளி பெற்றிடவே

இன்பமாய் மலர்ந்து இதயங்கள

போற்றும் புத்தாண்டு!...

**- இராஜேஸ்வரி சிவராசா -**

## பசுமை.....

பசு மை இருசொல் விளிப்பு......
"பா" சுமை கொண்ட கணிப்பு....
பசுமை பாருக்குள் பசுமை புரட்சி....
புரட்டிப்போடும் வல்லுனர்
புகட்டும் மந்திரிகள்....
எட்டியதும் கிட்டியதும்
எண்ணற்ற துன்பங்களே....
எழுச்சியில் வீழ்ச்சி கிளர்ச்சியில்
தொய்வு.....தேயிலையின் நுகர்வு
தேசத்தில் புகழ்ச்சி....பசுமையான
காட்சியாக
வரலாற்று சரிதம்.....
தேட்டத்தில் வாட்டம் தேகத்தில்
வாட்டம்....
வாரிய துளிர்களில்
கூரிய ஆய்வு....
குவித்த குவியல்
குன்றிடா வருவாய்.....
மலையகம் மண்ணகம்
மாற்றிடமுடியா
பசுமை....
குன்றிடா குவலயத்தில்
குற்றுயிராக
புரட்சி....
காலம்காலமாக
கதைபல சொல்லும் மலையகமே.....
உம்வேள்வியில் தோல்விக்கு
வார்த்தையில்லை.....
துவளும் நீவீர் துள்ளியெழும்
காலம் தூரத்தில்
இல்லையென்போம்.....
உங்கள் உள்ளத்தின் பசுமையின்
சுகந்தம் உலகாளும்....

**ராணி சம்பந்தன்**

## காலம்.....

யாருக்காகவும் காத்திருக்காது
சுழன்று வருவது காலம்
வெயிற்காலம் முடிய மழைக்காலம்
சூறாவளி கடும் வெள்ளப் பெருக்கு
பல அனர்த்தங்களை தந்து
உயிர்களை காவு
கொள்ளும் காலம் கஸ்டகாலம்
கடும் வெயிலினால் காட்டுத் தீ
பரவும் இடங்களில் சில காலம்
பயிர்ச் செய்கைக்கு
காத்திருக்கும்விவசாயி
வேளாண்மைக்கு ஏற்ற காலம்
காலங்கள மாறி குளிருடன்
இன்னும் சில காலம் பனிக்காலம்
கண்ணாடி பனியில்
சறுக்கி விழுந்து எழும்ப
சில காலம்
யோசித்து நடந்து திரிய
பயிற்சிக்காலம்
இதய வேதனையை
ஆற்றும் இடைவெளிக்காலம்
நாளாந்தம் ஆக்கங்கள் வடித்து
மகிழ்வுற்று இன்புற்று
அறிவு பெருக்கும் காலம்
நீங்கள் மண்ணுக்கு கவிதை
கேட்க நான் கற்பனையில்
எழுதி அனுப்புவது
இன்றைய காலம்

**ஜெயா நடேசன்**

# மாவீரம் மரணிக்காது--



உரமான உறுதியின் பிறப்பிடம்
திடமான வீரத்தின் இருப்பிடம்
ஈழத்தின் இன்னல்கள் விலகிடும்
காலத்தின் கருவாய் மிடுக்கிடும்

எத்தனை கோரம் விளைந்தது
இடரிலே எம்மினம் தவித்தது
வீரர்கள் உயிரே காத்தது
விலைமதிப்பற்ற தியாகமேநிகழ்ந்தது

மாவீரர் கல்லறைத் தூபியில்
மரணத்தின் வலிகள் எரிந்தது
பனித்த கண்களின் நிஜத்தில்
ஈழத்தின் எல்லையே நிலைத்தது

வேட்கையில் வென்றுயர் சரிதம்
வேள்வியில் வீரர்கள் தியாகம்
எங்குமே அவலத்தின் சுவடு
ஆகோர தாண்டவ அழிவு
விடுதலைத் தியாகமே விதையானது

உயிர்களின் கொடையே உயிர்ப்பானது
வலிகளே தினம் தினம் வலுவானது
மாவீரர் தியாகம் மகத்தானது
மண்மீட்கஉயிர்க்கொடைவிதைப்பானது

மரணிக்காத வீரத்தின் உயிர்நாடியே
என்னாளும்உம் தீபம் ஒளியாகுமே
எம் மண்மீட்க மறவர்
உயிர் கொடையாகுமே!

**வசந்தா ஜெகதீசன்**

## தீபாவளி!..

ஒளி ஏற்றும்
நேரம் வரும் முன்பே
உள்ளம் ஏற்கெனவே
ஒளிர்கின்றது

நட்பின்
தீபம் ஏற்றியதால்
இருள் என்றே
இல்லையே இனி!

சிரிப்பு
பட்டாசாய் பரவட்டும்
அன்பு இனிப்பாய்
உருவாகட்டும்

முன்னோர்
தீபம் போல் நம் பாசம்
மணமாய் என்றும்
நிலைக்கட்டும்!

**கலை- மலேசியா**

---

## அடிமைகள்...

வெள்ளையர் காலத்திலும்
சிங்களவர் காலத்திலும்
நாங்கள் அடிமைகள்தான்
மலையக அடிமைகள்?...

## விடிவு

அரை வயிற்றுடனும்
அட்டைக்கடியுடனும்
கொழுந்து பறிக்கும் எங்கள்
விடிவு எங்கே?...எப்போ?...

**- சிவா -**

## மகத்துவமிக்க வீரர்கள்..

**சத்யா பிரான்சிஸ் -மலேசியா**

பாலஸ்தீன மக்களின்
பசி பட்டினிக்குப்
போராட்டம் நடத்தி
நாடு திரும்பிய
மாவீரர்களுக்கு
மாபெரும் விழா..
பத்திரிக்கைகள்
தலைப்புச் செய்தி!
உயிரைப் பணயம் வைத்து
போராடிய வீரர்களுக்குத்
தொலைத் தொடர்பு
பல்லூடக அமைச்சு
புதிய கைப்பேசிகளை
வழங்கியது
பாராட்டுக்குரியது..
இஸ்ரேல் ராணுவத்தின்
கெடுபிடியில் சித்திரவதை
அனுபவித்த தியாகிகளுக்கு
இது நிச்சயம் போதாது!
உலக சாதனை படைத்த
மாபெரும் வீரர்களுக்கு
அரசாங்கம்
மாதாந்திர மானியம்
வழங்க வேண்டும்..
இஸ்ரேல் நாட்டுக் கொடுமையை
உலகுக்கு அறிவித்த
அவர்களுக்குப் புதிய
சொகுசு அடுக்குமாடி வீடுகள்
பரிசளிக்க வேண்டும்..
உயிருக்கு அஞ்சாமல்
கடலில் நெடும் பயணம்
மேற்கொண்டவர்களுக்குப்
பதுரக புரோட்டன் வீரா கார்
தரப்பட வேண்டும்..
பாலஸ்தீன் கொடி
நாடெங்கும் பரவிட
காரணமானவர்களுக்குத்
தங்கப் பதக்கம்
மிக உயரிய
டத்தோ ஸ்ரீ, டான்ஸ்ரீ,துன் பட்டம்
வழங்க வேண்டும்..
வாக்களித்த
பொது மக்களின் ஆசையை
உள்ளங்கை நெல்லிக்கனியாக
நாட்டுப் பிரதமர் நிறைவேற்றுவார்
என்ற நம்பிக்கை உண்டு!

## பூமியின் புன்னகை பூக்களே!..

புன்னகை பூக்களிவர்கள் யாரெவரோ
புதுக்கவிதை பாடவந்த சிட்டுக்களோ
கன்னங்கள் சிந்திடும் காவியங்கள்-அவை
கனிவான செவ்விதழ் ஓவியங்கள்

வானத்து தேவதைகள் இவர்களன்றோ
வாடாத மல்லிகை மலர்களன்றோ
கானமது இவர்களின் வார்த்தையன்றோ
காதுகளில் தேன் வந்து பாயுதன்றோ

ஞாலத்தில் இவர்களில்லா இல்லங்கள்
வனாந்திரமாய் காட்சிதரும் உள்ளங்கள்
காலமெல்லாம் இவர்களே சொர்க்கமாய்
கையணைத்து மடிதவழ்ந்து மகிழ்விப்பார்

சோகமதை தொலைத்திட சேலைவனமாய்
சங்கமமாவது மழலைச் செல்வங்களே
மோகனமாய் மலர்ந்திட்ட மழலைகளே
பூமியதில் பூக்கின்ற புன்னகைப்பூக்களே

**கலைவாணி.ஏகானந்தராஜா**
**யேர்மனி**

# தாரமாய் வந்தவள் !

**- இரா சம்பந்தன் -**

அன்பா லென்னை யாள்கின்ற பெண்ணே !

உன்பால் யானும் ஈர்ப்பினைக் கொண்டேன் .

கண்ணில் கவர்ந்திடும் காந்த மதுவும் ,

பண்ணாய் மொழிந்திடும் பைங்கிளி மொழியும் !

முல்லை யெனவே மலர்ந்திடும் புன்னகை

இல்லை யெனவே இடையதன் மெலிவும்

கிள்ளை மொழியாள் கீழ்வான் ஒளியாள் !

அள்ளி யணைத்திட அருகினில் வருவாள் .

தாலி பெற்றே தாரமா யானவள் ,

கேலி செய்திடக் கெஞ்சியே நாணுவாள் !

வாழ்வினி லென்றும் வழித்துணை யாகியே

ஆள்பவள் தன்னா லனைத்திலும் மேன்மை .

நேர்வழி யதனில் நித்தமும் நடந்தே

சீர்பெறும் வாழ்வை செகத்தினில் பெற்றாள் .

வாழ்நாள் முழுமையும் வஞ்சியோ(டு) இன்பமே

ஆழ்கடல் போலவே ஆழமா யுள்ளமே!..

.....................................................................

## சக்தி.....

சத்துக்கள் பல உறிஞ்சி
சொத்துச் சேர்த்த சக்தி
முத்துப் போல் வலிமையானது

இயற்கையில் சூரியக்கதிர்
தெறிச்சுக் கிடைத்த உயிர்ச்
சத்தால் தோல் திடகாத்திரமானது

இலைவகை, மரக்கறி,பழம்,
தானியமெனப் பயிரில் பத்து
ஆக்கி நோய் எதிர்ப்புச் சக்தி
உருவானது

செயற்கையில் நன்மை தீமை
கருவாகி மின்சார சக்தியாக
யுக்திகள் ஆனது

மாந்தரைச் சித்தராக்கி சுய
அறிவைக் கூட்டும் அன்பின்
சக்தி ஆனது

இவற்றை அடக்கிப் பதிபக்தி
தரும் ஆதி பராசக்தியும்
ஆண்டவனில் ஓர் பாதி ஆனதே!... .

**ராணி சம்பந்தர் - ஜேர்மனி**

# மாவீரர்!...

மண்தாகம் கொண்டெழுந்த மறவர் தீரம்
மரணத்தை வென்றிட்டே திகழ்ந்த யாகம்
கண்ணாகக் காத்திட்டார் மொழியை நாளும்
கலையாத கனவாகிச் சுமந்த நேசம்!
எண்ணாத பொழுதினிலே உதிர்ந்த கோலம்
எந்நாளும் எம்நெஞ்சில் நிலைத்த ஈரம்!
விண்ணாக உயர்திட்ட மறவர் வீரம்
விநயமாய் தொழுதிட்டே பணியும் காலம்!




மூச்சாகக் கொண்டீரே மண்ணின் காதல்
முடிவுரையே காணாது உங்கள் ஈகம்!
வீச்சாகச் சுழன்றிட்ட களத்தில் நின்றும்
வீழவில்லை விடுதலையின் தணியாத் தாகம்!
பூச்சாண்டி காட்டிநின்ற புத்தர் கூட்டம்
புரண்டோடி மறைந்ததெல்லாம் புதையா தென்றும்!
பேச்சாகிப் புகழ்ந்திடுதே உலக மெல்லாம்
பெரும்படையைக் கலங்கடித்த மறவர் என்றே!



மாந்தரினம் வாழும்வரை மறவா தும்மை
மாவீரர் கல்லறைகள் கதைகள் சொல்லும்!
காந்தளது மலர்வாகிக் காத்தே நிற்கும்
காவலரின் பேழைகளை வணக்கம் செய்யும்
ஏந்திவந்தே நெய்விளைக்கை ஏற்றி வைப்போம்

எங்களுக்காய் வீழ்ந்தவரை
இறைஞ்சல் செய்வோம்!
தீந்தமிழில் பண்ணிசைத்து வணக்கம் செய்வோம்
திங்களது கார்த்திகையில் உமக்காய் எங்கும்

பாடுகின்றோம் புதுப்பரணி உமக்காய் நாங்கள்
பதியமிட்டோம் விதையான உங்கள் நாமம்
வாடுகின்றோம் உங்களது நினைவைத் தாங்கி
வரலாறாய் நிலைத்தவரே மறவா தீழம்!
ஏடுகளில் எழுத்தாகி என்றும் வாழ்வீர்
எங்களது இலக்கியமாய் இசைக்கும் கீதம்!
தேடுகின்றோம் உறங்குகின்ற பேழை
தன்னில தேசத்தின் காவலரே எழுந்து வாரும்!



**கீத்தா பரமானந்தன்**

# இலவசக் கல்வி...

- ப.பசுபதிராசா -

கல்வி என்பது மனிதருக்குக் கற்பகதருவை விட உன்னதம்
அனைவருக்கும் பொதுவென அள்ளித் தருபவன் இதயம் சந்நிதானம்
அவன் எவனாக இருப்பினும் இடம்தேடி வணங்குவது நன் நலம்
இரவைக் கடந்து போகும் நாள்களில் தனியே வசந்தம் வசீகரம்..

உயர்ந்தவனுக்கே கல்வி உரிமை என்ற ஆணவப் போலிவேசம்
அயராது கண்விழித்துக் கால்பரப்பிக் கிடந்த துயரமான நேரம்
முட்டாள்கள் என்ற இழிவை மனதால் மன்றாடிச் சுமந்த ஏழை
பட்டபாட்டைக் கெட்ட கேட்டைக் கேட்டவன் தட்டினான் தோழை..

அவன்தான் இலவசக்கல்வியின் தந்தை குகணாளன் கன்னங்கரா
ஏழைகள் இதயம் உலகம் உள்ளவரை சொல்லும் நன்றி நயாகரா
இறைவனே இவன் செயலைப் பார்த்து இன்பம் இது என நயன்தாரா
எங்கே நன்மை பிறந்த போதும் நமக்கே நன்மை நலந்தானா...

நுகர்பவன் யாரெனத் தெரியாது வீசுவதே மல்லிகை நறுமணம்
அணிபவன் எவனென அறியாது ஜொலிப்பதே முத்தின் பெறுமானம்
உண்பவன் இவன் எனப்புரியாது விளைவதே மரத்தின் மகத்துவம்
இயற்கையின் பாகுபாட்டைச் சரிசெய்வதே அறிவின் விசித்திரம்...

ஒரு மனிதன் துணிந்தால்தான் உலகில் உன்னதம் பிறக்கும்
சாகசம் புரிவதால்தான் சம்பவங்கள் வரலாற்றுக் கதவைத் திறக்கும்
இயல்பு ஒருவனைத்தான் முதலில் கைபிடித்துக் கூட்டிவரும்
அறிவைத் தந்த உறவைக்கொண்டு அவனுக்கே வாகை சூடும்...

ஏழைகளின் கையில் புத்தகப்பூக்கள் மல்லுக்கட்டி மலர்ந்தன
நாளைகள் எல்லாம் நடைபாதையில் நர்த்தனம் கொட்டின
விடிகாலைக் குயில்கள் விரைந்து பூபாளம் இசைத்தன
கிழக்கு வானில் கதிரவன் தோன்றி நல்ல கல்விக்கு அழைத்தான்...

## மேகமே பொழிந்திடு.!...

நீரென்ற தேரின்றி நிலமேது
நீளுகின்ற உயிர்களுக்கு வாழ்வேது
வேர்விட்ட பயிர்களின் விளைவின்றி
விரிந்திட்ட புவியினில் உயிரிராது
பார் என்ற கோளில் முப்பங்காயாகப்
பரவிவரும் உவர்நீரால் தாகம்தீராது

காரோடு கூதிரெனும் காலமேது
கணித்திட ஆண்டுக்கு வயதுமேது
ஊருலகு எனும்சொல் உதிப்பதற்கு
உச்சரிக்கும் நாக்கினில் ஈரமெது
மார்போடு சுரக்கின்ற அமுதமாக
மழலையின் ஊணுக்கு மாற்றேது

எர்கொண்டு பசியாற்ற நிலமிருக்கு
எழுந்துவரும் கடல்நிறைய ஊப்பிருக்கு
வேர்விட்டு பயிர்செய்து உணவளிக்க
வேகுகின்ற பசியாற்ற வழி இருக்கா
தூர்வார வேண்டியதொரு துயரத்திலே
துவழ்கின்ற மானிடத்திற்கு எதுவிருக்கு

பாரினிலே மூன்றிலிரு பங்காயான
பருகிடாத நீரினாலே பயன்தானேது
பேர்சொல்லும் உடலுக்கு பேச்சிருக்கு
பெருகிவரும் வெம்மைக்கு முடிவிருக்கா
மார்கழிபோல் வேறு ஒரு மாதமேது
மண்ணிலே நீரின்றி மகிழ்வேயிராது

**-அம்பலவன்புவனேந்திரன்..**

## பசுமை.....

பசு மை இருசொல் விளிப்பு......
"பா" சுமை கொண்ட கணிப்பு....
பசுமை பாருக்குள் பசுமை புரட்சி....
புரட்டிப்போடும் வல்லுனர்
புகட்டும் மந்திரிகள்....
எட்டியதும் கிட்டியதும்
எண்ணற்ற துன்பங்களே....
எழுச்சியில் வீழ்ச்சி
கிளர்ச்சியில் தொய்வு.....
தேயிலையின் நுகர்வு
தேசத்தில் புகழ்ச்சி....
பசுமையான காட்சியாக
வரலாற்று சரிதம்.....
தேட்டத்தில் வாட்டம்
தேகத்தில் வாட்டம்....
வாரிய துளிர்களில்
கூரிய ஆய்வு.... குவித்த குவியல்
குன்றிடா வருவாய்.....
மலையகம் மண்ணகம்
மாற்றிடமுடியாபசுமை....
குன்றிடா குவலயத்தில்
குற்றுயிராக புரட்சி....காலம்காலமாக
கதைபல சொல்லும்
மலையகமே.....
உம்வேள்வியில் தோல்விக்கு
வார்த்தையில்லை.....
துவளும் நீவீர் துள்ளியெழும்
காலம் தூரத்தில்
இல்லையென்போம்.....
உங்கள் உள்ளத்தின்
பசுமையின் சுகந்தம்
உலகாளும்....

**- சர்வேஸ்வரி கதிரித்தம்பி -**

# இதழ்:233- மண் சஞ்சிகை அட்டைப்படக் கவிதை:




உன்னையே தாயாக உலகம் அழைக்கு முன்
தன்னையே ஈய்ந்த தயாபரியே அன்னையென
அகிலத்தின் உதடுகளில் அட்சரமாய் அமர்ந்தவளே
சகிப்புக்கு நீயே சாட்சி

தென்னையென உயர்ந்து தியாகத்தைத் தெளித்தாயே
முன்னை யெமதுவினைப் பயனால் -அன்னையாகி
கள்ளத்தை களைந்த கருணையின் திருவடிவே
உள்ளத்திலே என்றும் உறை

நின்னையே நினைந்து நீளுகின்ற பொழுதெல்லாம்
இன்னுமிங்கு மனிதம் இளமையாகுதே -அன்னையே
இப்புவியின் இடர்களிலுன் இரக்கத்தை நினைத்துச்
செப்புதே நின்றன் செயல்

பொன்னும் பொருளுமிந்த பூதலுத்தில் நிலைக்காதென
மென்னன்பை விதைத்தாயே மேதினியில் -அன்னையின்
பரிவோடும் பன்மடங்கு பாசத்தால் அரவணைத்ததால்
உரிமையில் தொழுகிறோம் உமை.

**-அம்பலவன்புவனேந்திரன்..**

# பெருமையோடு வாழும் தமிழர் பண்பாடு- 2025ஆம் ஆண்டின் வண்ணங்கள்.....

செல்வி சாமினா சிவதாசன் (எசன்)

அன்று ஓர் அற்புதமான மாலைப்பொழுது. வெளியே இருண்டு குளிர்காற்று வீசிக்கொண்டிருந்தது. வீதிகள் வெறிச்சோடிப் போய் இருந்தன. ஆனால் வீடுகளில் விளக்குகள் ஒளிர்ந்து கொண்டிருந்தன. இவ்வருட நத்தார் பண்டிகை முடிந்து சில நாட்கள் கடந்துவிட்டன. இன்னும் சில மணி நேரங்களில் இந்த ஆண்டும் முடிவுக்கு வருகின்றது. உயர்ச்சிகளும், தாழ்வுகளும், சிரிப்புகளும், சோகங்களும் நிறைந்த ஓர் ஆண்டு முடிவுக்கு வரவுள்ளது. மாயாவுக்கும் இந்த ஆண்டு கடினமாக இருந்தது. சிரிப்புகள், கண்ணீர்கள், நம்பிக்கைகள், ஏமாற்றங்கள் அனைத்தையும் அவள் அனுபவத்தாள். இருப்பனும் அவள் தனது மனதில் ஓர் உறுதியுடன் இருந்தாள்:

”எப்படி இருந்தாலும் இந்த ஆண்டை அழகாக முடிக்க வேண்டும்!” இந்த நோக்குடன் மாயா தனது நண்பர்களைத: தனது வீட்டுக்கு அழைத்தாள். அனைவரும் சேர்ந்து இந்த ஆண்டை அன்போடு வழியனுப்ப, புதிய ஆண்டான 2026யை நம்பிக்கையோடு வரவேற்க வேண்டும் என்று முடிவு செய்தாள். இதனை ஏற்றுக்கொண்டு மெல்ல மெல்ல நண்பர்கள் ஒருவருக்குப் பின் ஒருவராக வந்து சேர்ந்தார்கள். வீட்டுக்குள் நுழைந்ததும் அனைவரும் ஒன்றாக அமர்ந்தார்கள். அங்கே மாயா அன்போடு தயாரித்திருந்த தமிழர்களுடைய பாரம்பரிய உணவுகள் மேசையில் இருந்து வீடு முழுவதிலும் மிகவும் சுவையான வாசனைகள் வீசன. தமிழருடைய தேசிய உணவான பிட்டும், உருளைக்கிழங்குக் கறியும், வடையும், சைவக் கேக்கும் மேசையில் இருந்தன. அனைவரும் சாப்பிடத் தொடங்கினார்கள்.

சாப்பிடும் போது அவர்கள் ரசித்துக் கதைத்துக் கடந்த நாட்களில் நடந்தவற்றை பற்றிப் பகிர்ந்தனர். யாரோ சிறு நகைச்சுவை கதையைச் சொல்ல, மற்றவர்கள் சிரித்துக் கைகளைத் தட்டினார்கள். சில நேரங்களில், சிரிப்பில் கண்களில் ஆனந்தக்கண்ணீர் வடிந்தன. சில நேரங்களில், அமைதியாகவும் இருந்தனர். அந்த அமைதியான தருணத்தில் மாயா மெதுவாகப் பேசத்தொடங்கினாள்: ” உங்கள் கதைகள் மிகவும் சிறப்பாக இருக்கின்றன. ஆனால் எனக்கு ஒரு வேண்டுகோள்.

இந்த ஆண்டு எங்கள் அனைவருக்கும் எளிதானதல்ல. எத்தனை உயர்வுகளும், தாழ்வுகளும் வந்தன. ஆனாலும் இன்று இவ்வாண்டின் இறுதி இரவு. இன்னும் சில மணி நேரங்களில் 2025 முடிவடைந்து 2026 பிறக்கப்போகின்றது. அதனால் நாம் ஒரு சிறப்பான விடயம் செய்வோம். 2025ஆம் ஆண்டு நடந்த கவலை களை மறந்து, நம் வாழ்வில் நடைபெற்ற அழகான தருணங்களை மட்டும் நினைவுபடுத்திக்கொள்வோம்.

"அவளின் வார்த்தைகள் அனைவரின் மனதையும் தொட்டது. அறையில் சில நொடிகள் அமைதி நிலவியது. ஒவ்வொருவரும் தங்கள் நினைவுகளில் மூழ்கினார்கள். சில நமிடங்களில் மாயா பேசத் தொடங்கினாள்: " இந்த வருடம் எனக்குக் கிடைத்த மிகப்பெரிய பரிசு என் பெற்றோர் என்னை எங்கள் தாய்நாடான இலங்கைக்கு அழைத்துச் சென்றது தான். அங்கே என் உறவினர்களைக் கண்டேன். என் சொந்த ஊரில் நடந்து செல்லும் போது, என் பெற்றோர் எனக்குக் கூறிய கதைகளும் நினைவில் வந்தன. குறிப்பாக எங்கள் ஊரின் சிறிய கோயில்களையும், பசுமையான தோட்டங்களை மறக்க முடியாது . எங்கு பார்த்தாலும் வாழைத்தோட்டங்களும், தென்னந்தோட்டங்களும் வேறு பழத்தோட்டங்களும் இருந்தன. கிராமத்தின் வாசம், கடற்கரையின் காற்று என்னால் மறக்க முடியாத நினைவுகள். அப்போது நான் உணர்ந்தேன்.

நான் எங்கு வாழ்ந்தாலும் என் வேர் என் தாய்நாட்டின் மண்ணில்தான். சில நொடிகள் அவர்கள் அமைதியாக அமர்ந்து மாயாவின் நினைவுகளை பகிர்ந்துகொண்டார்கள். பின்னர் ரகு மெதுவாகப் பேசத்தொடங்கினான்: " எனக்கு இவ்வருடம் என் மனதில் ஆழமாக பதிந்த அனுபவம் மண் சஞ்சிகையின் 35வது ஆண்டு விழா. அங்கே எத்தைனையோ எழுத்தாளர்கள் ஒன்று கூடியருந்தார்கள். இளம் தலைமுறையிலிருந்து மூத்தவர்கள் வரை, ஒவ்வொருவரின் குரலும், ஒவ்வொருவரின் படைப்புகளும் எங்கள் மொழியின் வலிமையையும், அழகையும் வெளிப்படுத்தின. வெளிநாட்டில் வாழ்ந்தாலும் எங்கள் மொழியும் பண்பாடும் இவ்வளவு உயரோடு இருக்கிறது என்பதை நினைக்கப் பெருமையாக இருக்கன்றது.

இவ்விழா நமக்கு நம் சமூகத்தின் வலிமையையும், எங்கள் கலாச்சாரத்தின் நிலைத்தன்மையையும் காட்டிய ஓர் அழகான நிகழ்வு. ரகுவரன் வார்த்தைகள் முடிந்ததும், அறையில் சில நொடிகள் அமைதி நிலவியது. மாயா கூறினாள் "அது உண்மைதான்". அந்தச் சூழலில் கவிதா உரையாடலைத் தொடங்கினாள். "எனக்கு மறக்க முடியாத அனுபவங்கள் என்று யோசிக்கும் போது முதலில் என் மனதில் வரும் ஒரு விடயம் கோவில் திருவிழாக்கள். அதுவும் குறிப்பாக அன்றைய அம்மன் தேர்த்திருவிழாவை என்னால் மறக்கமுடியாது. ஆயிரக்கணக்கான மக்கள் பல நாடுகளில் இருந்து வந்து ஒன்றாகச் சேர்ந்து பக்தியுடன் தேவாரங்கள் பாடியும், கலை நிகழ்ச்சிகளையும் நடத்தியிருந்தார்கள். அந்நாளில் இங்கு நம் மதம் எவ்வளவு சிறப்பாக வேரூன்றியுள்ளது என்பதை என் கண்களால் பார்த்தேன்."

கவிதாவின் வார்த்தைகள் அறை முழுவதிலும் பக்தியான உணர்ச்சியைப் பரப்பின. தலையைச் சுத்திக்கொண்டு கூறினான்: "அது உண்மை... கோவில் மணியோசை கேட்கும் போது நம்முடைய சமயத்தை மறக்க முடியாது என்பதை உணர்வேன்". அடுத்து விஜய் புன்னகையுடன் உரையாடலைத் தொடர்ந்தான். "எனக்கு மிகவும் பெருமையாக இருந்த அனுபவம் Dortmund நகரில் நடைபெற்ற தமிழர் தெருவிழா. அந்நாளில் அந்த தெரு விழா. ஒரு "குட்டி யாழ்ப்பாணம்" போல தோன்றியது. அங்கு நிறையப் பாரம்பரிய உணவுக் கடைகள் இருந்தன. அனைத்தும் என்

மனதில் பசியைத் தூண்டின. அத்துடன் பழங்கள், காய்கறிகள், ஆடை-கள், அலங்காரப் பொருட்கள், நம் ஊரச் செடிகள் மற்றும் தமிழ் நூல்கள் போன்றவற்றை அங்கே காண முடிந்தது. மேலும் அவ்விழாவின் சிறப்பு அம்சம் மேடை நிகழ்ச்சிகள். இளம் கலைஞர்களும், மூத்தவர்களும் இணைந்து ஆடிப்பாடிச் சிறப்பித்தார்கள். அவர்களின் திறமைகளும், ஆர்வங்களும் எங்கள் கலாச்சாரத்தின் ஒற்றுமையையும், பெருமையையும் வெளிப்படுத்தன.

அந்தத் தருணத்தில் நான் நினைத்தேன் " நாம் எங்குவாழ்ந்தாலும், எங்கள் பண்பாடு எங்களை உயிரோடு வைத்திருக்கும். அங்கு நான் ஒரு தமிழன் என்பதை நன்றாகப் புரிந்து, அதில் பெருமை அடைந்தேன். விஜயன் வார்த்தைகளை கேட்ட அனைவரும் புன்சிரிப்புடன் தலையசைத்தனர். அப்பொழுது நேரம் மெதுவாகப் பன்னிரண்டு மணியை நோக்கிச் சென்றது.

வெளியில் மக்கள் வீதிகளில் சென்று, ஒன்றாகச் சேர்ந்து சிரித்துப் பேசிக்கொண்டு, பட்டாசுகள் ஏற்றத் தயாராகிக் கொண்டிருந்தனர். பன்னிரண்டு மணி அடைந்தது.வானத்தில் பட்டாசுகள் வெடித்து, சிவப்பு, பச்சை, நீலம், மஞ்சள் எனப் பல நிறங்களில் ஒளிகள் பரவின. அந்தக் கணத்தில் மாயா கூறினாள்:"பாருங்க, வானம் எவ்வளவு அழகாக இருக்கிறது! ஆனாலும், ஏன் இத்தனை பணத்தைப் பட்டாசுகளுக்காகச் செலவு செய்ய வேண்டும்? ஏன் சுற்றுச்சூழலை மாசுபடுத்த வேண்டும்?

நம்மிடையே பரிமாறப்படும் சிரிப்பு, அன்பு, நட்பு அதுவே உண்மையான பட்டாசு. நண்பர்களுடனும் குடும்பத்துடனும் இணைந்து செலவி டும் தருணங்களே உண்மையான பொக்கிஷங்கள். இப்பொழுது 2025-ஐ நன்றி உணர்வுடன் வழி அனுப்ப, 2026-ஐ பெருமை-யுடனும் நம்பிக்கையுடனும் வரேவற்போம்." அந்த நொடியில் அனைவரும் கைகளை ஒன்றாகப் பிடித்து, "இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!" என்று கூறனார்கள்.கவிதா கூறனாள்: "இன்று எனக்கு நன்றாக புரிந்தது " நாம் எங்கிருந்தாலும், எங்கள் பாரம்பரியமும் பண்பாடும் எங்களின் உயிர்.

இதனை நாம் பெருமையோடு காக்க வேண்டும் அடுத்த தலைமுறைக்கு அன்போடு கொண்டு செல்வோம்." அனைவருக்கும் 2026ஆம் ஆண்டு புதிய நம்பிக்கையுடன், மிகவும் அற்புதமாக ஆரம்பமானது. மண் சஞ்சிகை குடும்பத்தினருக்கும் மற்றும் அனைத்து வாசகர்களுக்கும் என் இனிய ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். இந்தப் புத்தாண்டு உங்கள் அனைவருடைய வாழ்வில் மகிழ்ச்சி, செழிப்பு, அமைதி மற்றும் ஆரோக்கியம் நிறைந்ததாக அமைய இறைவனை வேண்டுகின்றேன்.



# முதலடி எடுத்த முடி!...

(சிறுகதை)

எழுத்தா(ணி)ளினி,

- மங்கை அரசி -

ஒரு நிமிடம் கண்களை மூடினாள் கவிதா பிரம்மாண்ட ஒளி யில் விரிந்தது ஓர் வாழ்க்கை. ஆம் கவிதா, பேருக்கு ஏற்றாற் போல் இவள் ஒரு பேரழகி. ஐந்து வரிக-ளில் கவிதை போன்று, கவிதாவ ன் வாழ்விலும் தந்தையும், நான்கு அண்ணன்களும், என்று ஐந்து ஆண்கள் இருக்கும் வீட்டில் ஒரே, ஒரே ஒரு செல்லக் குழந்தையாக, குறும்பும், சேட்டையும், சிரிப்பும், மகிழ்ச்சியும், துள்ளல் நடையும், அமர்க்களமும் என்று, என்றும் ஆனந்தமாக வளர்ந்து வருகின்றாள், இந்த நங்கை கவிதா.

கவிதா நினைத்தால், நினைத்தது நடக்கும். கேட்டது கிடைக்கும் என்று சொர்க்கமான வாழ்க்கையை, சர்வ சாதாரண-மாக வாழ்ந்து கொண்டுவந்தாள். இருபதாவது வயது பிறந்தநாள் கொண்டாட்டம், கவிதா கேட்ட விலை உயர்ந்த மோட்டார் சைக்கிள் கூட தந்தை உடனடியாக வாங்கிக் கொடுத்தார். அத்தோடு கவிதாவிடம் தந்தை சொன்னார்: ”உனக்கு இன்னொரு சர்ப்ரைஸூம் இருக்கு”, உன் திருமண வாழ்க்கை ஆரம்பிக்கப் போகின்றது, உனக்கான மாப்பிளையைப் பார்த்து விட்டேன், சந்தோசம் தானே?” என்று கேட்க. ”இல்லையப்பா, என் படிப்பு இன்னும் முடியவில்லையே! நான் படிக்கப் போகின்றேன், நாட்டிற்கு பல நன்மை செய்யப் போகின்றேன்.” என்று சொல்ல

இன்றுவரை பிரம்மாண்டமாக விரிந்திருந்த அவளின் இறக்கைகள், இரும்பு சங்கிலிகளால் கட்டியதைப் போன்று, உடனடியாக தந்தையின் குரலில் ஏற்பட்ட மாற்றம் அவளுக்கு உணர்வை ஏற்படுத்தியது. ”என்ன படிக்கப் போறியோ? பொம்பள பிள்ளைக்கு 20 வயதுக்குள் திருமணம் செய்யாவிட்டால், காலம் கடந்து போய்விடும். அதன் பின் திருமணம் என்பது எட்டாக்கனியாக மாறிவிடும். அதனால் சொல்வதைக் கேள்! படித்தது போதும், அந்த பாரத்தை இறக்கி வை! உனக்கு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கிறன். சந்தோசமாக இரு!” என்றபோது.

இதுவரை கேட்காத ஒரு அதிகார தோரணை கவிதாவின் காதில் வந்து விழுந்தது. இதை சற்றும் எதிர்பாராத கவிதா கண்களில் நீரோடு, தன் நான்கு அண்ணன்களிடமும், ஒவ்வொருவராக, ஓடிச் சென்று அப்பா சொன்னது பிழை, நான் படிக்கப் போகின்றேன், என்று அழுதாள்.

சகோதரர்களும்: ”இல்லை, நீ படித்தது போதும். பக்கத்து வீட்டைப் பார், எதிர் வீட்டைப் பார், உறவினர்களைப் பார், பெண்கள் யாராவது இவ்வளவு படித்திருக்கின்றார்களா? அல்லது படித்த பெண்கள் அதன் மூலமாக ஏதாவது பயனடைகின்றார்களா? ஆகவே உன் வாழ்க்கையை சந்தோஷ மாக அமைத்துக்கொள்!” என்று அவர்களும் தந்தை பக்கம் நின்று கவிதாவை கண்டித்தார்கள்.

இதை சற்றும் எதிர்பாராத கவிதா, புகைப்படத்தில் புழுதி-யோடு வாழ்ந்து கொண்டிருந்த தாயின் ம(அ)டியில் சாய்ந்து அழு-தாள். ”18 வருடமாக என்னோடு பேசாமல் மகிழ்ச்சியாக இருந்தாயே மகளே, இன்று என் துணை உனக்குத் தேவைப்படுகின்றதா?” என்று தாயின் குரல் கவிதாவின் காதில் பலமாக கேட்டது. ”அம்மா அம்மா” என்று அழு-தாள். தாய் சொன்னாள்: ”உனக்கு எது பிடிக்கின்றதோ அதை செய்! இன்று நீ எடுக்கும் முடிவு உன்னுடையதாக இல்லாவிட்டால், என்றும் உன் முடிவு உனக்கானது அல்ல!” என்று சொல்ல கண்ணீரைத் துடைத்து விட்டு, வே-கமாக எழுந்து அப்பாவிடம் சென்று உடனடியாக சொன்னாள்.

”இல்லை அப்பா, எனக்கு என்று இலட்சியங்கள் இருக்கின்றது, நானும் ஒரு மனிசி தானே? எனக்கு என் வாழ்வை முடிவெடுக்கும் முழு மையான உரிமை இருக்கிறது தானே? நான் படிக்கப் போகிறேன்.” என்று உறுதியாகச் சொன்னாள். படிக்கப் போகின்றேன் என்று சொல்லி முடிவதற்கு முன்னாலேயே கவி தாவின் கன்னத்தில் பளார்!.. என்று அடி விழுந்தது. ஒரே ஒரு அடிதான் இன்றுவரை நோகும் வண்ணம் இறுகக் கூடக் கட்டிப்பிடிக்காத தந்தை, இறுகிய மனதோடு அடித்த அந்த முதல் அடி, கவிதாவை இரண்டு சுழல் சுழற்றி, மூலையில் கொண்டு சென்று போட்டது.

அந்த முதல் அடி, அவளுக்கு பல அறிவுரைகளை கூறியது. வீட்டில் செல்லமாக வளர்க்கும் கோழி, வீட்டில் செல்லமாக வளர்க்கும் ஆடு, மாடு போன்று தான் பெண்களுமா? நாங்கள் எங்கள் முடிவை, இன்னொருவர் எடுக்க எவ்வாறு விட முடியும் என்று, கொஞ்சம் கூட சிந்திக்காத வண்ணம் செல்லம் கொடுத்து அன்பால் கட்டி, வைத்து அதன் பின் விருந்தினர்கள் வரும்பொழுது பரிந்துணவு கொடுப்பது போன்று, தம் கனவை வேட்டையாடி விடுகின்றது இந்த உலகம். என்று பல சிந்தனைகள் அந்த கவிதாவ-ின் அடிமனதில் விழுந்தது.

விழுந்தது முதல் அடி, எழுந்தாள் உடனடியாக, தன் தலை முடியை சரி செய்து கொண்டாள். நின்றாள் நிமிர்ந்து, தந்தையை நேர்கொண்டு பார்த்தாள்: ”Mr. திருநாவுக்கரசு, இப்போது நான் வெளியில் செல்கின்றேன், இன்னொரு அடி என்மேல் பட்டால், நான் போலீஸோடு வெளியில் செல்ல வேண்டி வரும், நீங்கள் பொலிஸோடு உள்ளே செல்ல வேண்டி வரும். முடிவை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். உங்களோடு சேர்ந்து சந்தோஷமாக என் வாழ்க்கையின் இலட்சியத்தை அடைவோம் என்று நினைத்தேன். ஆனால் நீங்கள் ஒருவரும் இல்லாமல் கஷ்டப்பட்டு தான் என் வாழ்க்கையின் இலட்சியத்தை நான் அடைய வேண்டும் என்றால், அதற்கும் நான் தயார்.” என்று வீறு கொண்டு எழுந்தாள் கவிதா.

ஆணவக் கொலை செய்ய முயன்ற ஒரு தந்தைக்கு தீர்ப்பு எழுதுவதற்கு, இன்று நீதி-பதியாக இருக்கும் கவிதா, 29 வருடங்களுக்கு முன்பாக தனக்கு நடந்த இவற்றை யோசித்துப் பார்த்து, தீர்ப்பை எழுதினாள். அந்தத் தந்தையின் மகளை தானே தத்தும் எடுத்தாள்.....

# இயேசுவின் பிறப்பும் வளர்ப்பும்....

- ஜெயா நடேசன் -





தாவீது அரசரின் வழி மரபில் மெசியா வருவார் என்று இறைவாக்கினர்கள் முன்னறிவித்ததால் இவர் மண்ணை ஆழும் மன்னனாகப் பிறப்பார் என்றே பலரும் எதிர்பார்த்தார்கள்.ஆனால் இவரின் வருகை வேறுபட்டதாய் அமைந்தது. இவர் கன்னி மரியாவின் வயிற்றில் தூய ஆவியரால் அற்புதமாய் கருவாகி அனைவரின் எதிர்பார்ப்புக்கும் மாறாக தாழ்மை நிறைந்த எளிய குழந்தையாக எருசலேமிலுள்ள பெத்லேகம் என்ற மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார்.

இவரின் பிறப்பை அறிந்த இடையர்களும் கஸ்பார்,வெலிச்வோர், பல்ச்சார் என்ற கீழைத்தேய மூன்று ஞானிகளும் மாட்டுத் தொழுவம் சென்று சந்தித்து சாஸ்டாங்கமாக விழுந்து வணங்கினார்கள். யூதரின் அரசன் என்பதை ஞானிகள் வழியாக அறிந்த ஏரோது கலங்கினான்.தனக்கு சவாலாக இருக்கும் ஒருவர் எவ்வாறு அரசராகலாம் என்று வீறு கொண்டு எழுந்தான் குழந்தையைக் கொல்ல செய்ய எருசலேமின் எல்லாத் திசையிலும் வீர்ர்களை அனுப்பினான்.

இக்குழந்தையின் பொருட்டு எருசலேமிலும் சுற்றுப் புறங்களிலும் உள்ள இரண்டு வயதிற்குட்பட்ட ஆண் குழந்தைகள் எல்லோரையும் இவர்கள் கொன்று குவித்தார்கள் தாய்க்கு இவர் தலைப்பிள்ளை என்பதால் மோசேயின் சட்டப்படி இவரின் பெற்றோரான யோசேப்பு குழந்தையையும் தாயையும் கூட்டிக்கொண்டு இரவொடு இரவாக எகிப்துக்கு ஓடினார்.

சில காலம் கழித்து ஏரோதன் உடல் அழுகி இறந்தான்.இதை கேள்விப் பட்ட யோசேப்பு மரியாவையும் சிறுவர் இயேசுவையும் கலிலேயாவிற்கு கூட்டி வந்து நாசரேத்து என்ற ஊரில் குடியிருந்தார்.இந்த 2025ம் ஆண்டு இயேசுவின் பிறப்பானது எல்லோர் உள்ளங்களிலும் இல்லங்களிலும் மகழ்வின் இருப்பிடமாயும் அமைதியின் பிறப்பாக அமைய வாழ்த்துகின்றேன்.அத்தோடு உலகில் சமாதானம் ஏற்படவும் எமது உறவுகள் மகிழ்வான இயேசுவின் பிறப்பை கொண்டாடி மகிழவும் வேண்டி நிற்கிறேன்.எல்லோருக்கும் எமது நத்தார் நல் வாழ்த்துக்கள்!...





# சர்க்கரை நோய் இருக்கா? இதைச் சாப்பிடுங்க.. இனி கவலையே பட வேண்டாம்..

சர்க்கரை நோய் உள்ள பலருக்கும் எந்த மாதிரியான உணவுகளை அடிக்கடி சாப்பிட வேண்டும் என்பது தெரிவதில்லை.சர்க்கரை நோயாளிகள் அதிக கார்போஹைட்ரேட், உயர் கலோரிகள் மற்றும் ஸ்டார்ச் அதிகம் உள்ள காய்கறிகளைத் தவிர்க்க வேண்டும்.

இப்போது சர்க்கரை நோயாளிகள் எந்த காய்கறிகளை சாப்பிடுவது நல்லது என்பதைக் காண்போம். எந்த காய்கறிகளை சாப்பிடுவது நல்லது?

**ப்ராக்கோலி:-** ப்ராக்கோலியில் நார்ச்சத்து அதிகமாகவும், கலோரிகள் குறைவாகவும் உள்ளது. இது இரத்த சர்க்கரை அளவை சீராக்க உதவுகிறது. நீரிழிவு நோயாளியாக இருந்தால் துளியும் அச்சம் இன்றி இதனை தினமும் உணவில் சேர்த்து கொள்ளலாம்.

**கேரட்:** கேரட்டில் பீட்டா கரோட்டீன் என்னும் ஆன்டி-ஆக்ஸி டன்ட் உள்ளது. இது உடலில் இன்சுலின் அளவைக் குறைக்க உதவுகிறது. அதோடு, இதில் உள்ள வைட்டமின் ஏ நோயெதிர்ப்பு மண்டலத்தின் செயல்பாட்டை மேம்படுத்துகிறது.

**பீன்ஸ்:** பீன்ஸ் சர்க்கரை நோயாளிகளுக்கு ஏற்ற மற்றொரு ஆரோக்கியமான காய்கறி. இதில் இரும்புச்சத்து, கால்சியம், பொட்டாசியம், வைட்டமின் ஏ, ஃ போலேட் மற்றும் மக்னீசியம் அதிகம் உள்ளது. பீன்ஸில் நார்ச்சத்து மற்றும் புரோட்டீனைத் தவிர, கிளைசீமிக் இன்டெக்ஸ் அளவும் குறைவு.

**முட்டைக்கோவா:** சர்க்கரை நோயாளிகளின் உணவில் சேர்க்க வேண்டிய மற்றொரு காய்கறி முட்டைக்கோஸ். இதில் வைட்டமின் ஏ, வைட்டமின் கே, மாங்கனீசு, நார்ச்சத்து மற்றும் வைட்டமின் பி6 போன்றவை அதிகம் உள்ளது. மேலும் முட்டைக்கோஸ் இரத்த சர்க்கரை அளவைக் குறைக்க உதவுகிறது மற்றும் கணையம் சரியாக செயல்படுவதை உறுதி செய்கிறது.

**வெண்டைக்காய்:** வெண்டைக்காய் இரத்த சர்க்கரை அளவைக் குறைக்க பெரிதும் உதவி புரியும். வெண்டைக்காயை வெட்டும் போது அதிலிருந்து வெளிவரும் கூழ் திரவம் இரத்த குளுக்கோஸ் அளவை சீராக்க உதவுகிறது. அதுவும் வெண்டைக்காயை இரண்டாக வெட்டி ஒரு டம்ளர் நீரில் ஊற வைத்து, காலையில் எழுந்து குடித்து வர சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தலாம்.

**கத்திரிக்காய்:** கத்திரிக்காய் ஒரு கார்போஹைட்ரேட் மற்றும் கலோரி குறைவான சர்க்கரை நோயாளிகளுக்கு ஏற்ற காய்கறி. இந்தக் காயை அதிகம் உணவில் சேர்த்து வந்தால், இன்சுலின் உற்பத்தியை சீராக்கி இரத்த சர்க்கரை அளவு அதிகரிப்பதைத் தடுக்கும்.

**சுரைக்காய்:** சுரைக்காய் சர்க்கரை நோயாளிகளுக்கு ஏற்ற காய்கறி. அதுவும் சுரைக்காய் ஜூஸை காலையில் எழுந்ததும் குடித்தால் சர்க்கரை நோயை சரியாக நிர்வகிக்கலாம். சுரைக்காயில் நார்ச்சத்து மற்றும் நீர்ச்சத்து அதிகம் இருப்பதால், இது இரத்த சர்க்கரை அளவைக் குறைக்க வழிவகை செய்கிறது.

---

## ஒவ்வாமை... Allergy (அலர்ஜி)

இன்று உலகில் ஒவ்வாமை நோய் அதிகரித்துவருவதாக உலக சுகாதார நிறுவனம் கூறுகின்றது.. அப்படியானால் இந்த நோய் ஆண்-பெண் இருபாலருக்கும் என்ன காரணத்தால் பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்பதைப் பார்ப்போம்...
இந்த நோயானது வயது வேறுபாடு இல்லாமல் அனைவரையும் பீடிக்கும் நோயாகும். எனவே கீழ்க்குறிப்பிடும் விடயங்களில் கவனமெடுத்தால். இந்த நோயைக் குறைக்கலாம் அல்லது இல்லாது ஒழிக்கலாம்...

| | பெண் - | ஆண் |
|---|---|---|
| 01- அசுத்தக்காற்றால், மகரந்தத்தால் | 27% | 23% |
| 02- வீட்டுப்பூச்சிகள், கிருமிகளால் | 14 | 09 |
| 03- கடலைவகை,பால்,முட்டை,சோயா,சர்க்கரை | 14 | 06 |
| 04- பாவிக்கும் வைத்திய மருந்து வகைகளால் | 15 | 05 |
| 05- வீட்டு மிருகங்கள் +ஏனைய சில மிருகங்களால் | 10 | 07 |
| 06- சில பூச்சி இனங்களின் கடியால் | 09 | 05 |
| 07- சூரிய ஒளியால் + கடும்வெப்பத்தால் | 08 | 02 |
| 08- முகப்பூச்சு போற்றவையால் | 05 | 03 |
| 09- சில இரசாயனப் பொருட்களால் | 05 | 02 |
| 10- வேறு சில காரணங்களால் | 07 | 03 |



# பச்சை மிளகாய் சாப்பிடுவதன் நன்மைகள்

நாம் உணவுகளில் பச்சை மிளகாயை காரத்திற்காக மட்டுமே பயன்படுத்தி வருகிறோம். ஆனால் அதை சாப்பிடுவதால் ஏராளமான சத்துக்கள் மற்றும் ஆரோக்கிய நன்மைகள் அடங்கியுள்ளன.

## தொற்றுகளில் இருந்து பாதுகாக்கும்

பச்சை மிளகாயில் விட்டமின் சி மற்றும் பீட்டா கரோட்டீன் போன்ற ஆன்டி ஆக்சிடன்டுகள் நிறைந்திருக்கின்றன, இது நாள்பட்ட தொற்று நோய்களிலிருந்து காப்பதுடன் வயதாவதை தடுக்கிறது. விட்டமின் சி நிறைந்திருப்பதால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது, பக்டீரியா, வைரஸ் போன்ற தொற்றுகளிலிருந்து நம்மை பாதுகாக்கும்.

கண்களின் ஆரோக்கியத்துக்கு அவசியமான விட்டமின் ஏ நிறைந்திருக்கிறது, பச்சை மிளகாயை உணவில் சேர்த்து கொள்வதால் கண் ஆரோக்கியம் மேம்படும்.வெறும் வயிற்றில் இந்த இலை இரண்டு சாப்பிடுங்க - நோய் எதிர்பு சக்தி அதிகமாகும்

## கொழுப்பை குறைக்கும்

பச்சை மிளகாயில் உள்ள Capsaicin கொழுப்பின் அளவை குறைப்பதால் இதய ஆரோக்கியம் பாதுகாக்கப்படும், குறிப்பாக ரத்த அழுத்தத்தையும் சீராக்குகிறது. மேலும் Capsaicin வலி நிவாரணியாகும், நாள்பட்ட வலிநிலைகளை நிர்வகிப்பதில் சிறந்ததாகும், இரத்த நாளங்களை விரிவுபடுத்துவதன் மூலம் உடலில் சரியான ரத்த ஓட்டம் இருக்கும், இதனால் உடலின் பல்வேறுபட்ட திசுக்களுக்கு சரியான அளவில் ஆக்சிஜன் மற்றும் ஊட்டச்சத்துக்களும் கிடைக்கப்பெறும்.

# நான்தான்!... மதவடி மயிலன்!...

நான்தான் மதவடியான் மீண்டும் வந்திருக்கிறன்வணக்கம்!... வணக்கம்!... எல்லாரும் சுகம் என்று நினைக்கிறன்.. இனிகோடை காலத்தில்பலபேர் தாய் நாட்டுக்குப் போய்வந்திருப்பியள், சிலர் இப்போதும் போய்க் கொண்டுதான் இருப்பியள் என எண்ணுகின்றான் இந்த மயிலன். அங்கு போன பலர் கண்ட தெல்லாததையும்திண்டு கொழுத்து நிறைகூடியும்வந்திருப் பீர்கள் முன்கூட்டியேஅவதானம் செலுத்தாவிட்டால், சொல்வழி கேட்கா விட்டால் பிறசர், சீனி வருத்தம் கொலஸ்ரோல் என டாக்குத்தர் மாரிடம் மாறி..மாறிச் செல்ல வேண்டியதுதானே...

ஊருக்குச் சென்று அங்கு பந்தா காட்டி, தண்ணியடித்து கூழும் கும்மாளமும் அடித்தவர்கள் தமது பிள்ளைகளுக்குச் சாமத்தியச் சடங்கு கலியாணம் என தமது சாதி, சமயம் பார்த்துச் செய்து வைத்தவர்கள்,10.20.30, 40, 50, 60, 70, 80 எனப்பிறந்தநாள் கொண்டாடியவர்கள் பல ரகத்தினர் செய்த அட்டகாசங்களோ கண் கொண்டு பார்க்க முடியாது. அந்தளவுக்குக் கொண்டாட்டங்கள் களைகட்டியது என ஊருக்குப் போய்வந்த எனது நண்பன் சொன்னான் பாருகோ..

நம்மட நாட்டில பொருளாதாரப் பிரச்சனையால் பெரும் நெருக்கடி. இதனால் நாட்டைவிட்டுத் தப்பி வெளிநாடுகளுக்கு எப்ப ஓடலாம் என்று பல்லாயிரக் கணக்கானோர் படாத பாடுபடுகுதுகள் பாருங்கோ.. வேலை வெட்டி ஒன்றும் இல்லாமல் வெளிநாடுகளில் இருந்து வரும் பணங்களை நல்லாய் அனுபவிக்கும் கூட்டத்தினர் மிக அதிகம் பேர்.



அது அப்படி இருக்கையில் கடும் வெப்பம் முடிய இப்போ கடும் மழையாம் நாடு முழுவதும் ஒரே அல்லோம்தான் மழை, வறுமையால் பெருந்தொகையான நமது உறவுகள் பெரும் துயரப் படுகிறார்கள் என்பது உண்மையாகும். அரசாங்கமும் பல தொண்டு நிறு வனங்களும் நல்ல பணிகளைச் செய்கிறார்கள். இவர்களை வாழ்த்த வேணும் பாருங்கோ.

இதில் என்ன செய்தி என்றால் நிவாரணத்தைக் காட்டி நம்மட ஆட்கள் பல மோசடிகளிலும் ஈடுபடுவது வெட்கக் கேடான விடயமாகும். ஏழைமக்களுக்குக் கொடுக்கும் நிவாரண உதவிகளிலும் மோசடி செய்கிறார்கள் என தகவல் இருக்குது பாருங்கோ.

அடுத்தது எழுபது வருடங்களுக்கு மேற்பட்ட கள்ளரையும் கொள்ளைக்காரரையும் லஞ்சக்காரரையும் பிடித்து மறியலில் அடைப்பதே புதிய அரசாங்கத்தின் வேலையாகிவிட்டது பாருங்கோ.. அந்தளவுக்கு நாடு சீரழிந்து கிடக்கிறது . புதிய அரசாங்கம் வந்து ஒருவருடம்கூட ஆகவில்லை எல்லாத்தையும் தா என்பவர்களும் அரசாங்கம் ஒன்றும் செய்யவில்லை என்பதும் கேள்வி கேட்பதும் சுலபமாகிவிட்டது. ஆனால் இந்தக் கள்ளரைப் பிடித்து அடைப்பது எவ்வளவு கடினம்பாருங்கோ..

சரி..சரி..இனி விசயத்துக்கு வாறன்... நம் சொந்த நாட்டில் நடை பெறும் செய்திகளால் காதும் வெடிக்குது. பொறுக்கவும் முடியாமல் கிடக்குது. பல..பல..விபத்துகள், போதை மருந்துப் பாவனைகள், கொலை, கொள்ளை, ஆட்கடத்தல் எனப் பட்டியல் நீண்டு செல்கின்றதுதான் கவலை இந்த மயிலனுக்கு.

நாட்டில நடக்கிற சங்கதிகளைப் பார்த்தால் தலைசுத்தும். பணம், காணி, கடத்தல், போதைக்குக் காசு, போதை விற்பனை அது இது என்று கட்டுக்கடங்காத கொள்ளைகளும் கொலைகளும் கூடிவிட்டன. அதுவும் சொந்தங்கள் குடும்பங்களிலும் பெரிய குளறுபடிகள்தான். தாய், தகப்பனை ஏமாற்றும் பிள்ளைகள், சகோதரங்களுக்கிடையே ஏமாற்றும் கதைகள், ஊர் ஊறவுகளிடம் சுத்துமாத்தும் அபகரிப்பும் கொள்ளையும், சொத்துக் குவிப்பும் அமளியாகத்தான் நடக்குது பாருங்கோ..

தான் நேரில் பார்த்த சம்பவம் ஒன்றை எனது நண்பன் சொன்னான்.. ஒரு குடும்பத்தில 7 பிள்ளைகள் இதில் 5 ஆண்களும் 5 கண்டத்தில். 2 பெண்கள் ஊரோடுதான். தகப்பனும் வயதேறிய காலத்தில் ஒருவரும் பார்க்காத காரணத்தால் தற்கொலை செய்துவிட்டாராம். தாயோ வயது போன காலத்தில் இரண்டு பெண்பிள்ளைகளும் தன்னைப் பார்க்காத காரணத்தால் அவர்களோடு இருக்க விருப்பமில்லாமல் தனிக்குடித்தனம்.

காரணம் இந்த இருபெண் பிள்ளைகளும் சரியான காசு பிடுங்கி களாம். வெளிநாடுகளில் இருக்கும் சகோதரர்களிடம் அம்மாவுக்கு, அப்பா வுக்கு என்று சொல்லிச் சொல்லி கன காலமாக லட்சக்கணக்கில் காசுகளை வேண்டி இருவரும் நல்ல வீடு கட்டிப் போட்டினம். இரண்டு பேரின் கணவன்மாரும் நல்ல உழைப்பு, நல்ல வருமானம். தாங்களும் சீட்டு, தோட்டம், தென்னை, பனை வருமானம் உச்சம்தான்.. அப்படி வருவாய்வர வெளிநாடுகளிலிருந்து சும்மா வாற காசை ஏன்விடுவான் என்று வறுகல்தான். பணத்துக்கு முன் பாசமென்ன. அம்மா என்ன.. அப்பா என்ன என்ற நிலைதான் பாருங்கோ...

இப்ப அம்மாவும் நோய் வாய்ப்பட்டு ஆஸ்பத்திரியில. இந்த இரண்டு பெண் பிள்ளைகளும் ஆஸ் பத்திரியில் நின்று மாறி.. மாறிப் பார்ப்பதில்லையாம் சம்பள த்துக்கு ஆட்களைப் பிடித்து பார்க்க வைக்கிறார்களாம். அதிலும் வெளிநாட்டிலிருந்து சகோதரர்கள் அனுப்பும் பணத் தைச் சுருட்டி சிறுதொகையை அந்த இரவுக் காவலாளிக்குக் கொடுக்கிறார்களாம். தாங்கள் இரவு.. இரவாக சின்னத்திரையும் சினிமாவும் போதாக் குறைக்கு ஆடம்பர நிகழ்ச்சிகளுக்கும் இரவு இரவுவாகத் திரிகிறார்களாம்.

பத்துமாதம் சுமந்து பகலிரவாய் நித்திரையின்றிக் காவல்புரிந்து ஆசையுடன் பெற்று வளர்த்து ஆளாக்கி மணம்முடித்து நல்லாய் வாழவைத்த தெய்வங் களுக்குப் பிள்ளைகள் செய்யும் வேலை இதுதானா?... இதுகள் பிள்ளைகள் தானா?..இவர்கள் செய்வதைத்தான் நாளை தமது பிள்ளைகள் கட்டாயம் செய்வார்கள் என்பதை ஏன் யோசிக்கினமில்லை

சரி வீட்டில்தான் ஊழல் என்றால் இப்ப ஆஸ்பத்திரிகளிலும் ஏனைய அரச தாபனங்களிலும் ஊழல் மலிந்துவிட்டதாம். அப்ப ஆஸ்பத்திரியில் தமது தாயாரை இரவுக்காவலும் உதவிக்கும் ஒரு பெண்ணை அமர்த்தினால் அங்கேயும் ஊழல்தான்.

அதாவது ஒரு பெண்ணைப் பார்ப்பதற்கு ஒரு பெண் நின்றால்தானே நல்லது. அப்படியாக ஒழுங்குபண்ணிய பெண்ணோ பெரிய கில்லாடி. ஒரு நாளைக்கு ஒரு பெண்ணைப் பார்ப்பதாக ஒரு இரவுக்கு 2.000 - 3000 ரேட் பேசி வேண்டிவிட்டு வேறு நாலு ஐந்துபேரிடமும் உங்கள் உறவைப் பார்க்கிறேன் என்று அவர்களிடமும் பணத்தைக் கறந்து ஒரு இரவில் 4000 - 5000 உழைக்கிறார்கள். நல்லாய் உழைக்கட்டும் வெளிநாட்டுப் பணம்தானே. அண்ணைகுடி..தம்பி குடி என்ற கணக்கிலதான் போகுது பாருங்கோவன்..

எல்லாம் பாருங்கோ இந்த வெளிநாட்டுக் காசால வந்த வினை என்றுதான் சொல்லவேணும்.. இப்ப கனபேர் ஆஸ்பத்திரிப் பக்கம் போவதில்லையாம்.. வெளி நாடுகளிலிருந்து பிள்ளைகள் அனுப்பும் பணத்தில் அவர்கள் என்ன வென்றால் பிறைவேட் ஆஸ்பத்திக்குத்தான் செல்கிறார்களாம். எல்லாம் காசுமெத்தினால் என்னவெல்லாம் நடக்குது அங்கே..

இனிப் பிறைவேட் ஆஸ் பத்திரிகளுக்கு எக்கச் சக்கமான வருமானம். அரச ஆஸ்ப த்திரிகளில் இல்லா அத்தனை கருவிகளும் மருந்துகளும் தனியார் ஆஸ்பத் திரிகளில் கிடக்குதாம். டாக்குத்தர் மாரும் இரண்டு இடத்திலும் வேலை. சம்பளம் கிமபளம் என லட்சம்..லட்சமாக உழைக்க பிறைவேட் ஆஸ்பத்திரிக்கும் கோடி..கோடியாக பணம் அள்ளிக் கொட்டுதாம். எல்லாத்துக்கும் இந்தப் பவுண்டும் டொலரும், யூரோவும்தான் காரணம் என்றுதான் இந்த மயிலன் சொல்லுவான்.

இப்ப பாருங்கோ நம்நாட்டில பெரிய பிரச்சனை, ஊழல், போதை, களவு, கொள்ளை, அபகரிப்பு எனப் பட்டியல் நீட்டலாம். அரசாங்கம் எத்தனை கடும் நடவடிக்கை எடுத்தாலும் இந்தக் களவாணிக் கூட்டங்களை ஒழிக்க முடியாது போலத்தான் கிடக்குது. மிக நீண்ட காலம் இந்தச் செயல்களில் ஈடுபட்டவர்களை உடனே திருத்துவதென்றால் எந்தக் கொம்பனாலும் ஏலாது போலத்தான் கிடக்கிறது.

அப்ப என்ன செய்கிறது. வெளி நாடுகளிலிருந்து பணம் அனுப்புபவர்கள் அளவோடு அனுப்ப வேண்டும். அங்கு செய்யப்படும் செலவுகள்மீது கவனமெடுக்க வேண்டும். அடுத்தது சமூகத்துக்குத் தீங்கிளைக்கும் குற்றவாளிகள்மீது அரசு தண்டனை கடுமையாக்க வேண்டும். இல்லையேல் நாம் வாழும் தாயக சமூகம் தலை எடுக்காது. மேலும் அழிவுகளும் சமூகச் சீரழிவுகளும்தான் மிஞ்சும் என்பதை எல்லோரும் கருத்திற் கோள்ளுங்கோ!.. அப்ப போட்டு வாறன்.. அடுத்த முறையும் ஒரு விசயத்தோட இந்த மயிலன் வருவான்...எல்லாரும் நல்லாயிருங்கோ!...எல்லாருக்கும் நத்தார்-புதுவருட வாழ்த்துகள்!...

## சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | |
|---|---|---|---|
| ந | த் | தா | ர் |
| ல் | வ | நா | த |
| வ | லை | ய் | த் |
| ழி | கோ | பா | பு |

## குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தை | ப் | பொ | ங் | க | ல் | ர் |
| ரி | க | ந | பூ | ட | வ | தா |
| ய | ப் | பா | ன் | க | கா | த் |
| ம் | ப | ர | த | ம் | க | ந |
| வ | ல் | தி | டா | ட் | ர | பு |
| ண | வ | யா | ச | க | ம் | ப் |
| ஆ | நா | ர் | ண | த | ந் | அ |

## சுடோக்கோ போட்டி முடிவு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 4 | 2 | 1 | 5 | 7 | 6 | 8 | 9 |
| 7 | 8 | 1 | 4 | 9 | 6 | 2 | 5 | 3 |
| 5 | 9 | 6 | 8 | 3 | 2 | 7 | 1 | 4 |
| 8 | 5 | 3 | 7 | 6 | 9 | 1 | 4 | 2 |
| 2 | 6 | 4 | 5 | 1 | 3 | 9 | 7 | 8 |
| 9 | 1 | 7 | 2 | 4 | 8 | 5 | 3 | 6 |
| 1 | 3 | 9 | 6 | 7 | 4 | 8 | 2 | 5 |
| 4 | 7 | 8 | 9 | 2 | 5 | 3 | 6 | 1 |
| 6 | 2 | 5 | 3 | 8 | 1 | 4 | 9 | 7 |

# மனம் நொந்து போயுள்ள ஆசிரிய சமுதாயம் சார்பாக....!!!







மாணவன் தவறு செய்தால் அடிக்கக் கூடாது, திட்டவும் கூடாது, மனம் புண்படும் படி பேசவும் கூடாது...
எனில்...
படிக்குமாறு அறிவுறுத்தக் கூடாது, ஒழுக்கத்தை வலியுறுத்தக் கூடாது, இது எதுவுமே மாணவனுக்கு பிடிக்காது, மாணவன் மனம் புண்படும்..

எனில் ஆசிரியரின்( பெற்றோரின் ) வேலை தான் என்ன...?

பண்படுத்துவது என்பது புண்படுத்துதல் அல்ல...

கற்களை சேதப்படுத்தக் கூடாது என்று சொன்னால் - இங்கு சிற்பங்கள் எப்படி கிடைக்கும்...?

நிலங்களை சேதப்படுத்தக் கூடாது என்று சொன்னால் - இங்கு விளைச்சல் எப்படி கிடைக்கும்...?

தங்கத்தை நெருப்பில் இடாதே என்று சொன்னால் - தங்க ஆபரணங்கள் எப்படி கிடைக்கும்...? புரிதல் வேண்டும்...

பண்படுத்துவது என்பது - புண்படுத்துவது அல்ல என்ற புரிதல்
மாணவர்களுக்கு மட்டுமல்ல - மற்றவர்களுக்கும் வேண்டும்...!

ஒரு பச்சிளம் குழந்தைக்கு ஊசி போடுகிறார் மருத்துவர்...
குழந்தைக்கு வலிக்கும் இது தவறு என்று அவரிடம் சொன்னால் குழந்தை நலமுடன் வாழ்வது எப்படி...?

ஒரு வீட்டில் குழந்தையின் கைகளை தந்தை பிடிக்க, கால்களை மாமா பிடிக்க.. தலையை அசைக்காமல் பாட்டி அழுத்தி பிடிக்க, குழந்தைக்கு பிடிக்காத கசப்பு மருந்தை தாய் தருகிறாள்...

குழந்தையின் மீது செலுத்தப்படும் எவ்வளவு மோசமான வன்முறை இது... அவர்களுக்கான தண்டனை என்ன...?

குழந்தையின் நலன்கள் இரண்டு.. உடல் நலன்... உள்ள நலன்...

உடல் நலனுக்காக இயங்கும் மருத்துவத்துறையின் கைகளை...
"ஊசி குழந்தைக்கு வலிக்கும், மருந்து குழந்தைக்கு கசக்கும், அறுவை சிகிச்சை அதை விட வலிக்கும்... எனவே எல்லாவற்றையும் தவிர்த்து குழந்தைக்கு மனம் நோகாமல் அறிவுரை மட்டும் கூறி அனுப்புங்கள்" என்று சொல்வீர்களா...?

மருத்துவ துறையின் கைகள் கட்டப்பட்டால், உடல் நலன் ஒழிந்தது என்று அர்த்தம்...
புரிதல் வேண்டும்...

அதே போல...
உள்ள நலனுக்கானது தான் - கல்விக்கூடங்கள்...
அது கூடாது, இது கூடாது என்று இங்கே கற்பிப்பவரின் கையும், சுய சிந்தனை உணர்வும் கட்டப்பட்டுவிட்டன...

விளைவு - நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

ஒரு கல்விக்கூடம் மூடப்பட்டால் - அது நூறு சிறைச்சாலைகள் திறப்பதற்கு சமம்.

மூடும் அளவிற்கு அதிக சிரமம் வேண்டாம்...
ஆசிரியரின் உடலும், உள்ளமும், கைகளும் கட்டப்பட்டாலே போதும்...
மாணவன் ஆசிரியரால் திருத்தப்படாவிட்டால்,காவலர்களின் அடியால் திருந்த வேண்டும் அல்லது சிறைச்சாலைக்குத்தான் செல்ல வேண்டும்.

சிந்தியுங்கள் பெற்றோர்களே...!

மனம் நொந்து போயுள்ள ஆசிரிய சமுதாயம் சார்பாக.
குறிப்பு: சமுதாய வளர்ச்சிக்காக பெரும் சேவையாற்றிக் கொண்டிருக்கும், மாணவர்களை தன் பிள்ளைகள் போல் நினைத்து கற்பிப்பதுடன், அவர்களை சிறந்த முறையில் வழிநடாத்தி, அவர்களை ஓர் உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்ற இலட்சியத்திற்காக தனது வாழ்வையே அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் நல்லுள்ளம் கொண்ட ஒவ்வொரு ஆசிரியன் ஆசிரியைகளுக்கும் இப்பதிவு சமர்ப்பணம்.!..

# சுகாதாரக் குறிப்புகள்...

**மொழிபெயர்ப்பு......**




**செல்வி சாமினா சிவதாசன்**
Essen - Germany

ஜேர்மனியில் ஒவ்வொரு ஆண்டும் புதிதாக 3000 மக்களுக்கு அழற்சி கொண்ட குடல் நோயான “கோலிட்டிஸ் அல்சேராசா“ (Colitis ulcerosa) ஏற்படுகின்றது .“ரெய்ஸ் டார்ம்ஸிண்ட்ரோம்“ (Reizdarmsyndrom) என்னும் நோயில் அழற்சி இல்லை.
3000 Menschen in Deutschland erkranken jedes Jahr neu an der entzündlichen colitis ulcerosa. Beim Reizdarmsyndrom liegt keine Entzündung vor. Mal ist von Durchfall, mal von Verstopfung geprägt, mal geht es hin und her. 25 Prozent der deutschen Hausärzte

பிறக்கும் ஆண் குழந்தைகளில் 90% குழந்தைகள் வீங்கிய மார்பு முலையுடன் பிறக்கின்றனர். ஆனால் அது பின்னர் இயல்பாகேவ குறைந்து விடுகின்றது
Bis zu 90 Prozent der neugeborenen Jungen kommen mit geschwollen Brustwarzen zur Welt, die sich aber wieder zurückbilden

ஜேர்மனியில் சுமார் 150 000 மக்கள் ”ஸ்டோமா” எனப்படும் செயற்கை குடல்வெளியேற்றத்துடன் வாழ்கின்றார்கள். அவர்களில் சுமார் 70% பேருக்கு காரணம் புற்றுநோயாகும் சிலருக்குக் கடுமையான அழற்சியே காரணமாக உள்ளது
150 000 Menschen in Deutschland leben mit einem Stoma, einem künstlichen Dar mausgang. Bei rund 70 Prozent von ihnen ist Krebs die Ursache, bei einigen eine schwere Entzündung

புற்றுநோயாகும் சிலருக்குக் கடுமையான அழற்சியே காரணமாக உள்ளது ஜேர்மனிய புற்றுநோய் ஆய்வு மையத்தின் மதிப்பீட்டின்படி, குடல்ப் புற்றுநோய்ச் சம்பவங்களில் சுமார் 75% வரை முன்னெச்சரிக்கை காலேனாஸ்கோப் மூலம் ஆரம்பத்திலேயே கண்டறியப்படவோ அல்லது தவிர்க்கப்படவோ முடியும். ஆரம்ப நிலைகளை கண்டறிய மலச்சோதனைகளும் உதவுகின்றன
75 Prozent der Darmkrebsfälle können durch Vorsorgekoloskopie früh erkannt oder verhindert werden, ergibt eine aktuelle Auswertung aus dem Deutschen Krebsforsc hungszentrum. Auch Stuhltests helfen, frühe Stadien zu entdecken
ஜேர்மனிய மக்கள்தொகையில் சுமார் 54% பேர் நிரந்தர நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
Ca 54 Prozent der deutschen Bevölkerung sind von einer chronischen Erkrankung betroffen

நீண்டகால கோவிட் சிகிச்சைக்காக ஒரு அபெரிசல் (Apherese) அமர்வு சுமார் 1,300 முதல் 2,300 யூரோ வரை செலவாகிறது.

1300 bis 2300 Euro kostet eine Apherese Sitzung zur Behandlung von Long Covid.

ஒரு நாளைக்கு 60 கிராம் (Haselnüsse) ஹாஸல் பருப்பு சாப்படுவதால் கொலஸ்ரோல் சீரான அளவில் இருக்கும்.
60 Gramm Haselnüsse am Tag halten das Chlolesterin in gesunder Balance

ஜேர்மனியில் 50 முதல் 60 வயது உடையவர்களில் 35% பேர் இதுவரை ஒருபோதும் கேட்டல் பரிசோதைன செய்து கொள்ளவில்லை.
35% der 50 bis 60-jährigen in Deutschland haben noch nie einen Hörtest gemacht

2024 ஆம் ஆண்டு ஜேர்மனிய மருந்தகங்கள் மொத்தம் 1389 மில்லியன் மருந்துகளை வழங்கின.அவற்றில் 58,2% பரிந்துரைக்கப்பட்ட மருந்துகள் ஆகும்.1389 Millionen Packungen Arzneimittel haben deutsche Apotheken 2024 abgegeben. 58,2% davon waren rezeptpflichtig

சமீபகால கணக்குகளின் படி 2022 ஆம் ஆண்டு ஜேர்மனியில் 25450 மக்கள் கறுப்புத் தோல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டனர். இந்நோய் ஏற்படும் போது பெண்களின் சராசரி வயது 63 ஆகவும், ஆண்களின் சராசரி வயது 69 ஆகவும் இருந்தது.

25450 Menschen erkrankten aktuellen Zahlen zufolge 2022 an schwarzem Hautkrebs- Frauen im Mittel mit 63, Männer mit 69 Jahren. Der größte Risikofaktor ist UV Strahlungen.

18 முதல் 29 வயதுள்ளவர்களில், பெண்களில் 39.8% பேரும் ஆண்களில் 28.1% பேரும் நிரந்தர நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர் 80 வயதுக்கு மேற்பட்டவர்களில் பெண்களில் 74.7% பேரும் ஆண்களில் 71% பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

Chronisch Erkrankte in den verschiedenen Bevölkerungsgruppen.18 bis 29 Jahre



Frauen 39,8% und Männer 28,1% Über 80 jährige Frauen 74,7% und Männer 71%

1. படிக்கட்டுகளில் இறங்கும் போது, ஒரு முழங்கால் தனது உடல் எடையின் நான்கு மடங்கு சுமையைத் தாங்குகிறது.2. ஜேர்மனியரில் ஒவ்வொரு ஆண்டும் 100000 பேரில் 200 பேருக்குப் புதிய முழங்கால் மூட்டு பொருத்தப்படுகிறது.3. ஒரு முழங்காலில் அதிக பட்சம் 3.5 மில்லி லீற்றர் மூட்டுத் திரவம் உள்ளது. 4. ஒரு மனிதன் வாழ்நாள் முழுவதும் சுமார் 146 மில்லியன் முறை முழங்காலை மடக்குகின்றான்.

Gesundes Knie

1. 4 Mal das Körpergewicht tragen, die Knie beim treppenabgehen. 2. 200 von 100 000 Deutschen erhalten pro Jahr ein neues Kniegelenk.3. 3,5ml Gelenkflüssigkeit befindet sich maximal im Knie. 4. 146 Mio. Mal beugt sich das Beim im Laufe des Lebens........

# இலங்கையின் சனத்தொகை... (2024 முடிவின் கணிப்பீடு)
Population of Srilanka

இலங்கையின் தற்போதய (2024 முடிய) மக்கள் தொகையை இலங்கை அரச புள்ளிவிபரத் திணைக்களம் 31.10.2025 வெயளியிட்டுள்ளது. பத்து வருடங்களுக்கு ஒரு தடவை இந்த மதிப்பீடை செய்வது வழக்கமாகும். அதன்படி கடந்த 2012ம் ஆண்டு புள்ளிவிபரம் எடுக்கப்பட்டதன் பின்பு 2024ல் எடுக்கப்பட்ட முடிவுகளே தற்போது வெளிவந்துள்ளன.

கிராமம், நகரம், பெருந்தோட்டம், கிராமிய பெருந்தோட்டம் என நான்கு பிரிவுளில் கணக்கெடுக்கப்பட்டது. அதன்படி நாட்டின் மொத்தச் சனத்தொகை ( 2 கோடிக்கு மேலாகும் ) 2.17.81.800 ஆகும். இறுதியாக 2012ஆண்டில் எடுக்கப்பட்ட கணக்கின்படி பார்த்தால் இந்தப் பத்து வருடங்களில் இலங்கையின் சனத்தொகை (14 லட்சத்துக்மேல்) 14.22.361 பேர் கூடியிருக்கின்றது.

25 மாவட்டங்களிலும் எடுக்கப்பட்ட கணக்கின்படி மொத்த ஆண்களின் தொகையை விட பெண்களின் தொகை 7.57.112 பேர்.அதிகரித்திருக்கின்றது மொத்த சனத்தொகையில் 48.3 வீதம் ஆண்களும் 51.7 வீதம் பெண்களும் காணப்படுகிறார்கள்.

இலங்கையில் வாழும் இனங்களின் அடிப்படையில் நோக்கினால்... சிங்களவர்கள் 74.1% இலங்கைத் தமிழர்கள் 12.3% இஸ்லாமியர்கள் 10.5% இந்தியத் தமிழர்கள் 2.7% பறங்கியர், மலாயர், வேடர், ஏனைய இனத்தவர் 0.4% மாகக் காணப்படுகிறார்கள்.

சமயங்களின் படி நோக்கினால் பௌத்தர்கள் 69.8% இந்துக்கள் 12.6% இஸ்லாமியர் 10.7% கத்தோலிக்கர் 5.6% எனைய கிறிஸ்த்தவர் 1.1% ஏனைய சமயத்தவர் 0.2 வீதமாகக் காணப்படுகிறார்கள்.

சனத்தொகை வளர்ச்சி வீதத்தில் இஸ்லாமியர்களின் தொகை அதிகரித்துக் காணப்படுகின்றது. இஸ்லாமியர்கள் 1.5% தமிழர்கள் 1.3% சிங்களவர்கள் 0.4% ஏனைய சமூகங்களின் வளர்ச்சி வீதம் குறைந்தே காணப்படுகின்றது. இலங்கையிலுள்ள 25 மாவட்டங்களிலும் கூடிய சனத்தொகை கொண்டதாக கம்பஹா மாவட்டத்தில் 24.36.142 (24 லட்சம்) பேரும் குறைந்த மக்கள் தொகைகொண்ட மாவட்டமாக (1 லட்சம்) முல்லைத்தீவு மாவட்டத்தில் 1.22.619 பேருமாகக் காணப்படுகிறார்கள்

## 2012ம் ஆண்டில்....வடக்கு, கிழக்கு மாகாணங்களின் சனத்தொகை...

### வடமாகாணம்..

| மாவட்டம் | மொ.சனத்தொகை | ஆண்கள் | பெண்கள் | ஆண்% | பெண்% |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 5.83.882 | 2.74.173 | 3.09.709 | 47.0 | 53.0 |
| மன்னார் | 99.570 | 50.053 | 49.517 | 50.3 | 49.7 |
| வவுனியா | 1.72.115 | 84.715 | 87.400 | 49.2 | 50.8 |
| முல்லைத்தீவு | 92.238 | 40.036 | 46.202 | 49.9 | 50.1 |
| கிளிநொச்சி | 1.13.510 | 55.783 | 57.729 | 49.1 | 50.9 |

### கிழக்கு மாகாணம்..

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மட்டக்களப்பு | 5.26.567 | 2.50.676 | 2.75.891 | 47.6 | 52.4 |
| அம்பாறை | 6.49.402 | 3.14.352 | 3.35.050 | 48.4 | 51.6 |
| திருகோணமலை | 3.79.541 | 1.87.472 | 1.92.069 | 49.4 | 50.6 |

## 2024 ம் ஆண்டில்....வடக்கு, கிழக்கு மாகாணங்களின் சனத்தொகை...

### வடமாகாணம்..

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 5.94.751 | 2.81.553 | 3.13.198 | 47.3 | 52.7 |
| மன்னார் | 1.23.756 | 61.047 | 62.709 | 49.3 | 50.7 |
| வவுனியா | 1.72.312 | 82.831 | 89481 | 48.1 | 51.9 |
| முல்லைத்தீவு | 1.22.619 | 59.718 | 62.901 | 48.7 | 51.3 |
| கிளிநொச்சி | 1.36.710 | 66.124 | 70.586 | 48.4 | 51.6 |

### கிழக்கு மாகாணம்..

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மட்டக்கள் | 5.95.918 | 2.78.885 | 3.17.033 | 46.8 | 53.2 |
| அம்பாறை | 7.44.551 | 3.54.018 | 3.90.553 | 47.5 | 52.5 |
| திருகோணமலை | 4.42.745 | 2.17.704 | 2.25.041 | 49.2 | 50.8 |

- வடகிழக்கிலுள்ள 7 மாவட்டங்களில் மக்கள் கூடிய இடங்களைப்பார்த்தால் 1வது அம்பாறை, 2வது மட்டக்களப்பு, 3வது யாழ்ப்பாணம்.

-வடக்கு மாகாணத்தில் ஆண்கள் தொகை கூடிய மாவட்டமாக மன்னாரும் பெண்கள் தொகை கூடிய மாவட்டமாக யாழ்பாணம்.

- வடமாகாணத்தில் யாழ்ப்பாணத்தைவிட ஏனைய நான்கு மாவட்டங்களிலும் சனத்தொகை கணிசமான தொகை கூடியுள்ளது.

இருப்பினும் யுத்தசூழ்நிலை, புலம்பெயர்வு, இடம்பெயர்வு, பிறப்புவீதம் குறைவு போன்ற காரணங்களால் சனத்தொகை வளர்ச்சி காணாது எனத்தெரியவந்துள்ளது.

# மனதுக்கு இன்பம் தருவது சுற்றுலா!...

**(பயணக்கட்டுரை)** **திருமதி கலைவாணி ஏகானந்தராசா**

சென்ற இதழ் தொடர்ச்சி........





## தாயகம் செல்ல தயங்குது மனம் (பயண அனுபவம்)

நல்லை கந்தன் திருவிழாவைக் கண்டு களிக்க வேண்டும் என்ற ஆவலில் கடைசி திருவிழா நேரத்தில் யாழ்ப்பாணம் சென்றடைந்தோம். கார்த்திகை திருவிழா அன்று கோவில் வாசலுக்கே செல்ல முடியவில்லை. பல்லாயிரக்கணக்கான மக்கள் கூட்டம். உள்நாட்டவர் மட்டுமா? எங்கு திரும்பினாலும் வெளிநாட்டவர்கள். புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்வோரும் வேற்று மொழி பேசும் வெளிநாட்டவரும் நிறைய காணப்பட்டனர். இதைவிட எமது நாட்டு பெரும்பாண்மை இனத்தவரும் (சிங்களவர்) இஸ்லாம் இனத்தவரும்கூட கணிசமான அளவில் காணப்பட்டணர்.

சுவாமி வெளியே வந்தபோது எட்டி எட்டி பார்த்தேன் ஆயிரக்கணக்கான கைத்தொலைபேசிகள் தான் தெரிந்தன. என் முன்னால் நின்றவரின் தொலைபேசியில் தான் சுவாமி தரிசனம் கிடைத்தது. யேர்மனியில் வீட்டில் இருந்தபடி எத்தனை அழகாக பெரிய திரையில் பக்கத்தில் நின்று பார்ப்பதுபோல் தொலைக்காட்சியில் திருவிழாவை கண்டு கழித்தோம். இத்தனை ஆண்டுகளின் பின் மக்கள் கூட்டத்தில் நெரிவது மிக கஷ்டமாக இருந்தது.

மிகுதி திருவிழாக்களை வீட்டில் தொலைக்காட்சியில் பார்த்தோம். திருவிழாக் காலத்தில் தற்காலிகமாக நிறுவிய கடைகள் திருவிழா முடிந்து ஒருவாரமாக பரபரப்பான சனக்கூட்டமாகவே காணப்பட்டது. அங்கே வாகன நெரிசல் அதிகமாக இருந்தது. காரணம் தென் இலங்கையிலிருந்து வந்த பஸ்களின் தொகையும் அதில் பயணித்து வந்தவர்களும் தான்.



shutterstock.com · 1539362834




யாழ்ப்பாணத்துக்கு பொருட்கள் கொள்வனவு செய்யச் சென்றோம் யாழ்பாண மக்களுக்கு பொருளாதார கஷ்டமே இருப்பதாக தெரியவில்லை. நகைக் கடை முதல் சாப்பாட்டுக்கடை புடவைக்கடை என்று எங்கு பார்த்தாலும் சன நெருக்கம்தான். யாழ்ப்பாணத் தெருக்களில் எங்கு பார்த்தாலும் ஊதுபத்தி சட்டைப்பின் பூச்சிஉருண்டை என்று எதையாவது எடுத்து வரும் எம்மினத்துச் சிறுவர்களதும் பெரியவர்களதும் தொல்லை பெரும் தொல்லை. பொருட்களை பெற்றுக்கொண்டு பணத்தை கொடுத்தாலும் போகமாட்டார்கள். 5 கிலோ அரிசி வாங்கித்தாருங்கள் குழந்தைக்கு பால்மா வாங்கித்தாருங்கள் என்று துரத்திக்கொண்டு வருவார்கள்.

அதுவும் அதனை வாங்கிக் கொடுப்பதானால் அவர்கள் சொல்லும் கடையில் தான் வாங்கிக் கொடுக்கவேண்டும். ஏன் அப்படி என்று சிந்தித்தேன். வேண்டிக்கொடுத்த கடைக்காரரிடமே கேட்டு உண்மை அறிந்து அதிர்ந்து போனேன். நாம் மூவாயிரம் ரூபாவுக்கு வாங்கிக் கொடுக்கும் அரி சியை அதே கடையில் திருப்பிக்கொடுத்து இரண்டாயிரம் ரூபாவை பெற்றுக் கொள்வார்களாம். இப்படியான புதிய மோசடியை கண்டு மிக கவலையும் கோபமும் ஏற்பட்டது.

யாழ்ப்பாணத்தில் ஒரு பிரபல்யமான கடையில் சாப்பிட்டு வெளி-யே வந்தபோது ஒரு யாசகரிடம் 50 ரூபா கொடுத்தேன். வேண்ட மறுத்த அவர் இதை கொண்டுபோய் கோவில் உண்டியலில் போடு என்றார். எனக்கு மிக அவமானமாக இருந்தது. சன்னதி கோவிலில் 20 ரூபா யாசகருக்கு கொடுத்து ஏச்சும் வாங்கினேன். எங்கே நோக்கிப் போகிறது எம் இனம்?

நல்ல விடயங்களையும் பார்த்தேன். எம் இனத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றி நாம் அறிந்திருந்தோம் ஆனால் இலையான் இனம் காணாமலாக்கப்பட்டது என்பது எனக்கு அதிசயமாக இருந்தது. தும்மல் கிழவியை அனுப்பிவிட்டு இருமல் கிழவியை கூட்டிவந்தது போல இலையான் இல்லாத எம் பிரதேசமெங்கும் நுளம்பு பன்மடங்காக பெருகியுள்ளது என்பது கவலைக்கிடமான செய்தி.இந்த ஆண்டு என் தாயகப் பயணம் என் பேத்தியின்




திருமணத்திற்கானதே. இந்த திருமணம் யாழ்ப்பாணத்தில் பல திருமணமண்டபங்களுடன் அமைந்த ஒரு அழகான விடுதியில் நடைபெற்றது. அந்த விடுதியின் சுற்றாடல் மிகவும் தூய்மையாக இருந்தது. அங்கே வேலை செய்பவர்களில் சரிசமனாக தமிழரும் சிங்களவரும் காணப்பட்டனர். சாப்பாடும் இரண்டு இனத்தவரினதும் பொதுவான உணவாக நன்றாகவே இருந்தது.

திருமண ஏற்பாடுகளும் அவர்கள் பொறுப்பில் மிக நேர்த்தியாக நடைபெற்றது. இந்த மண்டபத்துக்காக பெருந்தொகைப் பணம் செலுத்தப்பட்டது. இந்த மண்டபம் எமது நாட்டின் பெரும்பான்மை இனத்தவரின் விடுதி என்பதை பின்புதான் அறிந்தேன். இது போலவே வரவேற்பு உபசார விழாவும் காங்கேசன்துறை கடற்கரை வெளியில் பிரமாண்டமான அழகான மேடையில் நடைபெற்றது. ரகரகமான உணவுகள் சைவம் அசைவம் என அழகான பெரிய உள் மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்தார்கள். அனைத்தும் சிறப்பாக நடைபெற்றது மகிழ்ச்சியே.

இத்தனையும் ஒரு தமிழரின் விடுதியில் மண்டபத்தில் நடந்திருந்தால் ? எனது மனதில் ஒரு ஏக்கம் தாயகம் செல்வதை நினைத்தாலே மனம் தயங்குகிறது. ஏன் தெரியுமா? கொழும்பு யாழ்ப்பாண பயணத்தின்போதும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு திரும்பிய போதும் இதயம் படபடக்க மிகவும் பயத்துடன் பயணித்தோம். வாகனங்களின் வேகமும் ஒன்றையொன்று முந்தியடித்துச் செல்லும் செயலும் பயங்கரமாக இருந்தது. பெரு வீதியில் ஆயிரக்கணக்கான டிப்பர் வாகனங்கள். அவற்றை பார்த்தாலே யமனை கண்டதுபோல் குலை நடுங்குகிறது. ஆங்காங்கு விபத்துகள் வேறு மனதில் பயத்தை ஏற்படுத்தியது.

ஒருபடியாக யேர்மன் திரும்பினோம். இரண்டு வாரங்களில் எம்மில் பலருக்கு மிக கடுமையான தலையிடி காச்சல் என ஏற்பட்டது. என் பேரப்பிள்ளையும் இரண்டு வாரமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இரத்தப் பரிசோதனை செய்தார்கள். மூளையை (Bacteria ) பக்ரீரியா தாக்கியிருப்பதாக கூறினார்கள். தெரிந்த ஒருவர் மரணமடைந்துள்ளார். தாயகம் சென்று சுற்றுலாவின் போது கடைகளிலும் விடுதிகளிலும் சாப்பிடுவதாலேயே இந்த பக்ரீரியா தொற்றுகிறது என்பதை பலரும் அறிவதில்லை. தாயகம் செல்பவர்கள் மிக அவதானமாக இருக்கவேண்டும் என்பதே என் ஆதங்கம்!..

# மேடைப் பேச்சாளர்களே சிறிது கவனியுங்கள்...

## செய்ய வேண்டியவை...

- உங்கள் முக்கிய கருத்தைத் தீர்மானியுங்கள் மக்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய முதன்மை செய்தி தெளிவாக இருக்க வேண்டும்.

- ஆதாரங்கள் தயாராக வைத்திருங்கள் உங்கள் கருத்தை உறுதிப்படுத்த 2-3 வலுவான காரணங்கள் அல்லது உண்மைகளை தயார்படுத்துங்கள்.

- தொடக்கம் - முடிவு வரியை திட்டமிடுங்கள் வலிமையான தொடக்கம், தெளிவான முடிவு.

- எளிமையாகப் பேசுங்கள் குறுகிய, நேரடியான வாக்கியங்கள் கடினமான சொற்கள் தவிர்க்கவும்.

- பேச்சில் பிறரை ஈர்க்குங்கள் கேள்விகள் கேளுங்கள், மற்றவர்களின் பங்களிப்பை பாராட்டுங்கள்.

- குரல் கட்டுப்பாடு சீரான சுருதி, வேகம் மற்றும் தொனி தன்னம்பிக்கையுடன் ஒலிக்க வேண்டும்.

- பொருளில் நிலைத்து இருங்கள் உரையாடல் திசை மாறினால் மரியாதை யாக மீண்டும் வழிநடத்துங்கள்.

- பிழைகள் வந்தால் தைரியமாக ஒப்புக்கொள்ளுங்கள் - குறுகிய முறையில் சொல்லி உடனே முன்னேறுங்கள்.

## தவிர்க்க வேண்டியவை

- நீளமாகச் சொல்ல வேண்டாம் முக்கியப் புள்ளியில் மட்டும் இருங்கள்.

- மீண்டும் மீண்டும் மன்னிப்பு கேட்க வேண்டாம் ஒருமுறை சொன்னால் போதும், பின் கவனம் திருப்புங்கள்.

- உரையாடலில்அழுத்தம் வந்தால் அமைதியாக இருங்கள் ஆழ்ந்த மூச்சு விட்டுப் பேசுங்கள், அல்லது உங்கள் கருத்துக்கு மீண்டும் பாலம் கட்டுங்கள்.

- நீங்கள் ஒருவரே பேச வேண்டாம் பிறருக்கும் இடம் கொடுங்கள்.









# ஒரே பிரசவத்தில் ஆறு குழந்தைகள்

வரலாற்றுச் சிறப்புமிக்க பிரசவம் ˙ கொழும்பில் ஒரே பிரசவத்தில் ஆறு குழந்தைகளைப் பெற்ற தாய் 24.9.2025தேசிய அளவில் முதன்முறையாக, கொழும்பில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சிசேரியன் மூலம் 31 வயது இலங்கைத் தாய் ஒருவர் ஆறு குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளார். இவர் மூன்று ஆண் குழந்தைகள் மற்றும் மூன்று பெண் குழந்தைகளை பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பேராசிரியர் டிரான் டயஸின் பராமரிப்பில், அதிகாலை 12:16 முதல் 12:18 வரை இரண்டு நிமிடங்களுக்குள் குழந்தைகள் பிரசவிக்கப்பட்டன. தாய் மற்றும் பிறந்த ஆறு குழந்தைகளும் நல் ஆரோக்கியத்துடன் இருப்பதாக மருத்துவமனை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# அதிசயக் கார் (மகிழுந்து)



உலகில் மிகநீளமான கார் ஒன்றை அமெரிக்கா தயாரித்து உலக சாதனை படைத்துள்ளது. இது உலகசாதனை கின்னஸ் புத்தகத்தில் பதிவாகியுள்ளது. 100 அடி நீளம் 1.5 அடி அகலம் கொண்ட இக்கார்

5.000 எடையைச் சுமக்கும் தன்மை வாய்ந்தது."அமெரிக்கன் டிரீம்" (American Dream) என அழைக்கப்படும் இக்கரில் 26 சக்கரங்கள் உள்ளன. ஏ8 ரக 2 எஞ்சின்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இக்காரில் தொலைக்காட்சி, தொலைபேசி, குளிர்சாதனப்பெட்டி, கணனி, மினிகோல்.ஃப் வசதிகள் உண்டு திருமணம் மற்றும் ஆடம்பரக் கொண்டாட்டங்களுக்கு இது பாவனைக்கு உள்ளதாம். இதன் விலை வெறும் 2.50.000 அமெரிக்க டொலர்கள்தான்.. உலகில் சாதனைகள் பலவிதம் நாம் இதில் ஒரு விதம்...



## உலகில் உயரமான காளைமாடு 1.95 மீட்டர் உயரம்...

கனடாவின் - அல்பேர்டா மாகாணத்தில் தனவந்தர் ஒருவர் தனது வீட்டில் செல்லப் பிராணியாக வளர்த்துவரும் காளைமாடு ஒன்று உலகின் அதி உயரம் கூடிய மாடாக உலக சாதனைப் புத்தகத்தில் அதிகாரபூர்வமாக அடையாளம் காணப்பட்டு இடம்பிடித்திருக்கின்றது.

பொதுவாக இறைச்சிக்காகவே கூடுதலான உணவைக் கொடுத்து மாடுகளை வளர்ப்பது உலகில் வழக்கமாகும். இது ஒரு வீட்டில் வளர்ந்த செல்லப்பிராணி என்பது குறிப்பிடத்தக்கது. 1.95 மீட்டர் உயரம் ( 6அடி 5 அங்குலம்) 1.090 கிலோ நிறையுடையது. மாதம் 1.130 கிலோ வைக்கோல், இலைகுழை, மற்றும் தானியங்கள் வழங்கப்பட்டு வந்துள்ளது.

2015ம் ஆண்டு பிறந்த இந்தக் காளைக்குத் தற்போது 10 வயது. இது அளவுக்கு மீறி வளர்ந்து இன்று உலக சாதனையை எட்டிப் பிடித்துள்ளது. தற்போது உலகில் உயிருடன் இருக்கும் காளை மாடுகளில் இந்தக் காளைதான் அதி உயரமான மாடு என அடையாளம் காணப்பட்டு உலக சாதனைபடைத்திருக்கின்றது.

இந்தக் காளையின் உரிமையாளரான ஜாஸமின் என்ட்ஸ் என்பவரால் வீட்டின் செல்லப் பிராணியாக வளர்க்கப்பட்டுவரும் காளை மாட்டுக்கு எப்படி வாழ்த்தைத் தெரிவிப்பது. ஆகவே உரிமையாளருக்கு வாழ்த்தைத் தெரிவிப்போம்...



# சாதனைத் தமிழனை வாழ்த்துவோம்!..

## 1.500 கிலே வாகனத்தை காதால் கட்டியிழத்துச் சாதனை

சென்றமாதம் இடம்பெற்ற சர்வதேச முதியோர் தின நிகழ்வில் 62 வயதான சாவகச்சேரி மட்டுவிலைச் சேர்ந்த திரு . செ திருச்செல்வம் என்பவர் 1.500 கிலோவுடைய வாகனம் ஒன்றைத் தனது காதுகளால் 50 மீட்டர் தூரம் கட்டியிழுத்துச் சாதனை படைத்துள்ளார்.

கைதடியிலுள்ள முதியோர் இல்ல முதியோரை மகிழ்விக்கும் நிகழ்வாக இச்சம்பவம் இடம்பெற்றது. முதியோர் இல்ல வளாகத்தில் இந்தச் சாதனையை செய்து காட்டியவேளை பல நூற்றுக்கணக்கான மக்கள் நேரில் பார்த்து மகிழ்ந்து வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

இந்தச்சாதனைத் தமிழன் ஏற்கனவே தனது தலைமுடி, தாடி, உடல் ஆகியவற்றில் வாகனங்களைக் கட்டியிழுத்து ஐந்து உலக சாதனைகளை "சோழன்" மற்றும் "கலாம்" உலக சாதனைப் புத்தகத்தில் பதிவு செய்திருக்கிறார்.

இந்த 62 வயது இந்த இளைஞனின் சாதனை என்பது தமிழர்களுக்கு ஒரு முன்மாதிரியான சாதனையாகக் கருதப்பட்டுள்ளது. அவரது சாதனைக்குத் துணிவும் முயற்சியும் கடும் உழைப்புமே காரண-மாகும். சாதனைக்கு வயது முக்கியமில்லை என்பதை எடுத்துக்காட்டிய சாதனை நாயகனை நாமும் வாழ்த்தி மகிழ்கின்றோம்....



# சாதனைத் தமிழன்!.. சூரன்!..

## பிரான்சிலிருந்து யாழ்ப்பாணம்வரை.... சைக்கிள் பயணம்..... 10.000 கிலோமீட்டர்......

ஐரோப்பிய நாடான பிரான்சிலிருந்து தாயகம் யாழ்ப்பாணம் நோக்கிய துவிச்சக்கரவண்டிப் பயணமான சுமார் 10.000 கிலோ மீட்டர் தூரத்தைப் வெற்றிகரமாக பயணம் செய்து சாதனை படைத்திருக்கிறார் சூரன் என்னும் பெயர்கொண்ட தமிழன்.

நல்லூரைப் பூர்வீகமாகக்கொண்ட இந்தச் சூரனுக்கு 28வயது அவன் சாதனையோ உலகத் தமிழர் சாத-னைதான். பிரான்ஸ் நாட்டில் பிறந்து வளர்ந்த இவர், இலங்கையின் மகத்துவத்தை உலகறியச் செய்யும் நோக்கமாகக் கொண்டு இந்தப் பயணம் அமைந்தது என எடுத்துக்கூறினார்.

01.09.2025 திகதி ஆரம்பித்த இந்தப் பயணம் 22.10.2025 யாழ்ப்பாணம் சென்றடைந்து உலக சாதனை படைத்திருக்கிறார் இந்தச் சூரன். இவரின் பயணத்தில் பிரான்ஸ், யேர்-மனி, ஆஸ்திரியா, ஸ்லோவாக்கியா, கங்கேரி, சேர்பியா, பல்கேரியா, துருக்கி, ஜோர்ஜியா, கஸகஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆப்கானிஸ்தான், இந்தியா என 13 நாடுகளைக் கடந்து சுமார் 10.000 கி.மீ பயணம் செய்தே சென்றிருக்கிறார்.

எத்தனையோ இடர்பாடுகள்,வேதனைகள், சோதனைகள், உயிராபத்துகளைச் சந்தித்தே இந்தச் சாதனையைப் படைத்த தமிழனுக்கு யாழ்ப்பாணத்தில் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

சாதனைத் தமிழன் சூரனுக்கு மண் சஞ்சிகையினரின் வாழ்த்துகள்!..

# யேர்மனியில் கவிதை நூல் வெளியீட்டு விழா...




யேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கம் நடத்திய மரபுக் கவிதைகளின் தொகுப்பான" தண்மலர்த் தடாகம்" நூல் வெளியீட்டு விழா 11 - 10 - 2025 அன்று யேர்மனியில் -டோட்மூண் நகரில் அமைந்துள்ள " தமிழர் அரங்கம் "என்னும் மண்டபத்தில்நிறைந்த மக்களோடு மிகச்சிறப்பாக நடைபெற்றது .மங்கல விளக்கேற்றல் நிகழ்வோடு தமிழ்த்தாய் வாழ்த்து , வரவேற்பு நடனம்வரவேற்பு உரை , மௌன அஞ்சலி செலுத்தியபின் யேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு . பொன் . சிறி ஜீவகன்அவர்கள் தலைமை உரையினை யாற்றினார் .தலைமை உரையைத் தொடர்ந்து அச்சங்கத்தின் செயலாளர் திரு . சிவவினோபன் அவர்கள் கவிஞரைப்பற்றியும் அவரின் முன்னைய நூல்கள் பற்றியும் நகைச்சுவையோடு மிக அழகாக் விமர்சித்துச் சபையோரின் பாராட்டுகளைப் பெற்றார்

முதல்பிரதியை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட புங்குடுதீவு தொண்டர் - திருநாவுக்கரசு சர்வோதய நற்பணி ஒன்றியத்தின் சர்வதேச ஒருங்கிணைப்பாளர் திரு . மகாலிங்கம் அவர்கள் பெற்றுக்கொண்டு சிறப்புரை வழங்கியதோடுகவிஞருக்கு தங்கமாலை அணிவித்துக் கௌரவித்தார் .சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட " மண்" சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் வைரமுத்து சிவராசா அவர்கள் சிறப்புரை வழங்கியதோடு கவிஞர் இரா . சம்பந்தன் அவர்களுக்கு விருதினை வழங்கிக் கௌரவித்தார்.

யேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கம் கவிஞருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்ததோடு பாராட்டுப்பத்திரமும் வழங்கியது .நூலுக்கான ஆய்வுரையை யேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் பொருளாளர் கவிச்சுடர் அம்பலவன் புவனேந்திரன் அவர்கள் சிறப்பாக வழங்கியிருந்தார் .நூலுக்கான சிறப்புப் பார்வையை இலக்கிய ஆளுமை "தமிழ் வான் அவை " நிறுவுநர் , திருமதி . சந்திர கௌரி சிவபாலன் அவர்கள் சிறப்புடன் வழங்கியிருந்தார் .

நூலாசிரியருக்கான வாழ்த்துரைகளையும் , வாழ்த்துக் கவிதைகளையும் பலர் வழங்கியிருந்தனர் . வாழ்த்துரை வழங்கிய அனைவருக்கும் நூலாசிரியர் தனது முன்னைய கவிதை நூல்களை வழங்கியமை குறிப்பிடத்தக்கது .விழாவுக்கு மெருகூட்டும் வகையில் - யேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் உபதலைவர் திருமதி . சாந்தினி துரையரங்கனோடு , இராட்டிங்கன்" தமிழாலய "நிர்வாகி திருமதி . கலையரசி லிங்கேஸ்வரன் அவர்களும் சிறப்பாக நிகழ்வினை தொகுத்து வழங்கியிருந்தார்கள் .

இந்நூல் வெளியீட்டு விழாவில் பல கவிஞர்கள் , கலைஞர்கள் எழுத்தாளர்கள் பத்திரிகை , சஞ்சிகை , வானொலி , அதிபர்களோடு பல்துறை சார்ந்த நிபுணர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது .நிகழ்வில் பலர் இரா .சம்பந்தன் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர். . வந்திருந்த அனைவருக்கும் சிற்றுண்டி கோப்பி வழங்கப்பட்டது நூலாசிரியரின் ஏற்புரையைத் தொடர்ந்து பலரது பாராட்டுகளோடு விழா நிறைவு கண்டது..

..............................................................................................................................

## கியூபா நாட்டைப்பற்றிய சிறு குறிப்பு...


- தனியார் மருத்துவ மனைகள் இல்லாத நாடு கியூபா
- தனியார் பள்ளி, கல்லூரிகள் இல்லாத நாடு கியூபா
- 6 முதல் 15 வரை கட்டாய இலவசக் கல்வி உள்ள நாடு கியூபா
- நாடு முழுக்க மாணவர்களுக்கு ஒரே சீருடை உள்ளநாடு கியூபா
- 12 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் உள்ள நாடு கியூபா

..............................................................................................................................

## உலகில் வாழச் சிறந்த நாடுகள்....

சுற்றாடல், கல்வி,வாழ்வு, வேலைவாய்ப்பு, சம்பளம் போன்ற அம்சங்களில் 2025ம் ஆண்டில் வாழச் சிறந்த நகரங்கள்....

01- வியன்னா - ஒஸ்திரியா
02- கோபன்ஹேகன் - டென்மார்க்
03- சூரிச் - சுவீஸ்லாந்து
04- கல்காரி - கனடா
05- வன்கூவர் - கனடா




# பலஸ்தீனத்தில் நிரந்தர சமாதானம் ஏற்படுமா?...

- சுவிசிலிருந்து சண் தவராஜா -

பேரழிவை ஏற்படுத்திய காஸா போர் ஒரு வழியாக முடிவுக்கு வந்திருக்கிறது. உலகம் முழுவதும் வாழும் போரை வெறுக்கும், சமாதானத்தை விரும்பும் மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தியாக இது உள்ளது. மிக முக்கியமாக, காஸா பிராந்தியத்தில் வாழும் பலஸ்தீன மக்களுக்கு நிம்மதியான ஒரு சூழல் உறுதி செய்யப்பட்டுள்ளது. போரின் அழிவுகளிலிருந்து மீண்டு அந்த மக்கள் சகஜமான ஒரு வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பக் கூடிய ஒரு சூழல் அமையுமா என்பது இன்னமும் கேள்விக்குறியாகவே உள்ளது. காஸா பிராந்தியத்தின் எதிர்காலம் என்னவாக அமையும் என்பது எதிர்வரும் காலங்களிலேயே தெரியவரும்.

இரண்டு வருடங்களாக நீடித்த போரை இஸ்ரேல் அரசாங்கம் கையாண்ட விதமும், ஜோ பைடன் தலைமையிலான அமெரிக்க அரசாங்கமும், டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான நிர்வாகமும் செயற்பட்ட விதமும் கண்டனங்களுக்கு உரியவையே. எனினும், தற்போது ட்ரம்ப் நிர்வாகம் எடுத்த முன்முயற்சியினால் போர் ஓய்வுக்கு வந்திருக்கிறது.போர் நிரந்தரமாக முடிவுக்கு வந்திருக்கிறதா என்ற கேள்விக்கு காலமே பதில் சொல்லும். இந்த ஆண்டு ஜனவரி 20 முதல் ஆட்சி பீடத்தில் இருந்துவரும்

ட்ரம்பால் தற்போது போரை முடிவுக்குக் கொண்டுவர முடியுமாக இருந்தால், இதனை ஏன் அவரால் முன்கூட்டியே செய்ய முடிந்திருக்கவில்லை என்ற கேள்வி எழுவது இயல்பானதே. "தன்னுடைய இலக்குகள் யாவும் நிறைவே-றும் வரைக்கும்" இஸ்ரேலினால் போரை நடத்த முடிந்திருக்கின்றது. என்றால், அதற்கான கால அவகாசத்தை ட்ரம்ப் நிர்வாகம் வழங்கியிருக்கின்றது என்பதே அர்த்தம்.

உலகின் பெரும்பாலான மக்களின் விருப்புக்கு மாறாக, அனைத்துக் கண்டனங்களையும், வேண்டுகோள்களையும் புறந்தள்ளியே இந்தப் போரை இஸ்ரேல் நடத்தியிருந்தது. உலக நாடுகள், மனித உரிமைநிறுவனங்கள், உலகெங்கும் வாழும் மில்லியன் கணக்கான பொதுமக்கள் ஆகியோ-ாரின் குரலை இஸ்ரேல் கணக்கிலேயே கொள்ளவில்லை. பலஸ்தீனத்தில் கொல்லப்பட்ட பொதுமக்கள் பற்றியோ தனது படையினரின் உயிர் பற்றியோ , பேரழிவுக்கு உள்ளான கட்டுமானங்கள் பற்றியோ இஸ்ரேல் கவனத்தில் கொண்டிருக்கவில்லை. காஸா பிராந்தியத்தில் பட்டினியாலும், மருத்துவ வசதி இன்மையாலும் மாண்டுபோன குழந்தைகளின் அவலம் கூட இஸ்ரேல-ிய ஆட்சியாளர்களின் மனசாட்சிக்குக் குறுக்கே வந்திருக்கவில்லை.

இஸ்ரேலின் ஒரே இலக்கு பலஸ்தீனத்தில் உள்ள ஹமாஸின் பிடியை இல்லாமல் செய்வது. முடிந்தால் தனக்கு விசுவாசமான ஆட்சியாளர்களை குறைந்தளவு அதிகாரங்களுடன் பதவியில் அமர்த்துவது. முடியுமானவரை காஸா பிராந்தியத்தில் உள்ள பலஸ்தீனியர்களை வேறு இடங்களுக்கு இடம்பெயரச் செய்வது. இவை நீண்டகாலமாக இஸ்ரேல் ஆட்சியாளர்களின் மனதில் உள்ள திட்டங்கள். ஆட்சியாளர்கள் மாறி மாறி வந்தாலும் இலக்கு ஒன்றே.

ட்ரம்ப் அவர்களால் முன்மொழியப்பட்டு எகிப்து, கட்டார், துருக்கி ஆகிய நாடுகளுடன் இணைந்து 13.10.2025ல் எகிப்து நாட்டிலே போர் நிறுத்த உடன்படிக்கை எட்டப்பட்டது. போரில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் இரண்டு தரப்பினரும் இந்த உடன்படிக்கை தொடர்பான எந்தவொரு நிகழ்விலும் நேரடியாகக் கலந்து கொள்ளவில்லை. ஹமாஸ் அமைப்பை எகிப்து, கட்டார், துருக்கி ஆகிய நாடுகள் பிரதிநிதித்துவம் செய்திருந்ததைப் பார்க்க முடிகிறது. இஸ்ரேல் நாட்டினை அமெரிக்கா பிரதிநிதித்துவம் செய்தது. இதனை வேறுவிதமாகச் சொல்வதானால் அமெரிக்காவின் சொல் கேட்டே இஸ்ரேல் ஆடுகிறது எனலாம்.

உடன்படிக்கையின் பிரகாரம் உயிரோடிருந்த 20 கைதிகளை ஹமாஸ் விடுதலை செய்துள்ளது. பதிலுக்கு 2000 வரையான பலஸ்தீனிய கைதிகளை இஸ்ரேல் விடுதலை செய்துள்ளது. கைது செய்யப்பட்ட பலஸ்தீனியர்கள் அனைவரும் காஸா பிராந்தியத்திலே கைது செய்யப்பட்டிருந்தாலும் விடுதலையான சிலர் காஸா திரும்பஅனுமதிக்கப்படாமல் நாடுகடத்தப்பட்டு உள்ளனர். அதேவேளை காஸா பிராந்தியத்தின் பல பகுதிகளில் இருந்து இஸ்ரேலியப் படையினர் வெளியேறிய இடங்களை நோக்கி ஹமாஸ் தீவிரவாதிகளும், பொது மக்களும் திரும்பத் தொடங்கியுள்ளனர்.

இந்தப் பிரதேசங்களில் ஹமாஸ் உறுப்பினர்களுக்கும், போட்டிக் குழுக்களுக்கும் இடையே மோதல்கள் நடப்பதாக அங்கிருந்து வரும்

செய்திகள் தெரிவிக்கின்றன.உடன்படிக்கையின் பின்னான காலகட்டத்தில் இருபெரும் சவால்கள் உள்ளன. முதலாவது காஸாவில் உள்ளமக்களுக்கு உணவு, மருத்துவம் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளை வழங்குவது. அடுத்து போரில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வது. புனரமைப்புப் பணிகளுக்குத் தேவைப்படும் பெருமளவு நிதியை எங்கிருந்து பெறுவது என்பது அடுத்த கேள்வி.


தற்போது போர் நடைபெற்றுவரும் உக்ரைனில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள, முடக்கப்பட்டுள்ள ரஸ்ய நிதியைப் பயன்படுத்த வேண்டும் என்பது ஐரோப்பிய ஒன்றியத்தின் கொள்கை. ஆனால் காஸா போர் முடிவுக்கு வந்துள்ள நிலையில் காஸாவின் புனரைமைப்புக்கான நிதியை இஸ்ரேல் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை ஐரோப்பிய ஒன்றியத்திடம் இருந்து இதுவரை எழவில்லை என்பதைப் பார்க்க முடிகிறது.

உள்நாட்டுப் போர் நிகழும் பிரதேசங்களில் போர் நிறுத்த உடன்படிக்கை மூலம் போர் முடிவுக்கு வந்துவிட்டாலும் மோதல்கள் முடிவடைய குறிப்பிட்ட காலம் எடுக்கும் என்பதே யதாரத்தம். காஸாவில் அதற்கான அறிகுறிகள் ஏற்கெனவே தென்படத் தொடங்கிவிட்டன. இஸ்ரேலியப் படைகள் குறிப்பிட்டளவு தூரம் பின்வாங்கி இருந்தாலும் படை நடவடிக்கைகள் வேறு வழிகள் மூலம் தொடர்வதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவே தெரிகின்றது. நேரடியாக இல்லாதுவிட்டாலும் மறைமுகமாகவேனும் இஸ்ரேல் தனது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள முயலக் கூடும்.

பலஸ்தீன மக்களைப் பொறுத்தவரை அவர்கள் சதுரங்கத்தில் நகர்த்தப்படும் பகடைக்காய்கள் போன்றே பயன்படுத்தப்படுவதைப் பார்க்க முடிகின்றது. கடந்த இரண்டு வருடங்களில் 67,000 வரையான பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 170,000 வரையானோர் காயங்களுக்கு இலக்காகி உள்ளனர். இவர்களுள் பெண்கள், குழந்தைகள், தொண்டு நிறுவனப் பணியாளர்கள், ஊடகர்கள் உள்ளிட்ட அனைவரும் அடங்குவர். இவர்கள் தவிர கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்த ஹமாஸ் தீவிரவாதிகளின் எண்ணிக்கை இதுவரை வெளியிடப்படவில்லை.

சமாதானம் என்பது வெறுமனே ஒப்பந்தங்கள் மூலமாக அன்றி மனப்பூர்வமாக எட்டப்பட வேண்டும். ஆனால் காஸா விடயத்தில் மனப்பூர்வமான சமாதானம் எட்டப்பட்டுள்ளதா என்பதில் சந்தேகம் இருக்கவே செய்கின்றது. பல பத்தாண்டுகளாக நீடிக்கும் பலஸ்தீன மக்களின் துயருக்கு இந்த ஆண்டிலாவது ஒரு நிரந்தரத் தீர்வு எட்டப்படுமானால் அது பலஸ்தீன மக்களுக்கு மாத்திரமன்றி உலக மக்கள் அனைவருக்குமே நன்மை பயக்கும் என்பது நிச்சயம்!....

16ம் பக்க
வட்டத்தின்
விடை




கண்டுபிடித்து விட்டீர்களா? படத்தின் நடுவில் ஒட்டியுள்ள 3 வட்டங்கள் ஒன்றுடன் ஒன்று சில வடிவங்கள் என தோன்றினாலும், அவற்றை வட்டங்களாக கருதப்பட முடியாது.

எனவே அவற்றை கணக்கில் எடுத்துக் கொள்ள முடியாது. அப்படியானால் 3 வட்டங்கள் உள்ளன என்று நீங்கள் கூறலாம்.

அதுவும் இதற்கான விடை இல்லை. கேள்வியை மெதுவாக படித்தால் நீங்கள் உண்மையை கண்டுபிடிக்கலாம்.

அந்த படத்தில் உண்மையாக 14 வட்டங்கள் உள்ளன. எப்படியென்றால், 3 வட்டங்களுடன் சேர்த்து, “O“ என்ற எழுத்தை வட்டமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதேபோல் “ i “ என்ற எழுத்தின் புள்ளியையும், கேள்விக்குறியின் வட்டத்தையும் கணக்கிட்டுக் கொள்ள வேண்டும். இதன்மூலம்தான் மொத்தம் 14 வட்டங்கள் கிடைக்கும். இதுவே இந்த புதிரின் சரியான விடையாகும்..

## கண்டுபிடியுங்கள் போட்டி....



| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொ | க் | கு | க | ளி | மு |
| யி | சே | றா | ல் | வ | சே |
| னா | மை | கோ | பு | ஆ | யி |
| ளி | ழி | கா | க | ந் | ல் |
| ம் | கி | மு | க | தை | யி |
| கு | கு | ல் | கு | ம் | ம |

இந்தச் சதுரத்திலுள்ள எழுத்து களைக் கொண்டு பல தமிழ்ச் சொற்களைக் கண்டு பிடிக்கலாம்.

சொற்களைக் கண்டுபிடித்து அனுப்பி வைக்கவும். ஆகக்கூடுதலான சொற்களைக் கண்டுபிடித்து அனுப்புபவர் ஒருவருக்குப் பரிசு உண்டு!..முடிவு திகதி 15.12.2025

# புரட்சித் தலைவர் மறைவில் கூட வரலாற்றுச் சாதனை...


M.G.R


17.01.1917 - 24.12.1987

யானை இருந்தாலும் பொன், இறந்தாலும் பொன் என்பார்கள் .அதேபோலத்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர் புகழ்பெற்றவர். அவரின் சாதனைகளை இன்றுவரை ஒரு முதலமைச்சரும் செய்யவில்லை என்பதே உண்மையான விடயமாகும். சிறுகுறிப்பு இது...

- புரட்சித் தலைவர் அவர்களின் இறுதி ஊர்வலம் இந்தியாமுழுவதும்டெலிவிஷனில் நேரடி ஒளிபரப்பு செய்யப் பட்ட ஒரே முதல்வர் என்ற அந்தஸ்து.
- இந்தியா முழுவதும் மத்திய அரசாங்கம் விடுமுறை விடப்பட்டது தமிழக முதல்வரான புரட்சித் தலைவர் அவர்களுக்கு மட்டும்தான். மத்திய அரசு சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலகங்களும் மூடப்பட்டன.
- புரட்சித் தலைவரின் மறைவிற்கு இந்தியா முழுவதும் உள்ள மத்திய அரசாங்க தேசிய கொடிகள் அனைத்தும் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டன.
- ஆந்திர மாநில திருப்பதி தேவஸ்தானஅலுவலகமும்,பிரபல வெங்கடேஸ்வரா பல்கலைக்கழகமும் புரட்சித் தலைவரின் மறைவுக்கு மூடப்பட்டன.
- டெல்லியில் உள்ள அனைத்து பள்ளிக்கூடங்கள் மற்றும் தமிழர்களின் நிறுவனங்கள் புரட்சித் தலைவர்க்கு அஞ்சலி செலுத்தும் வகையில்மூடப்பட்டன
- இலங்கையில் உள்ள தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் சுமார் 5லட்சம் பேர் வேலைக்கு போகாமல் புரட்சித் தலைவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் துக்கம் அனுஷ்டித்தனர்.தங்கள் வீடுகளின் கூரைமேல் வெள்ளை கொடியை பறக்கவிட்டு துக்கத்தை வெளிப்படுத்தினர்.

- இலங்கையில் உள்ள தமிழர்களின் பகுதிகள் அனைத்திலும் கடைகள் அடைக்கப்பட்டன. பள்ளி மற்றும் அலுவலகங்களும் மூடப்பட்டன. பல இடங்களில் புரட்சித் தலைவரின் திருவுருவபடத்திற்கு மாலையிட்டு அஞ்சலி செலுத்தினார்கள்.

- புரட்சித் தலைவர் பிறந்த ஊரான இலங்கை கண்டியில் புரட்சித் தலைவரின் திருவுருவம் பதித்த உருவத்தை தேர் போல அலங்கரித்து கண்டிவீதியெங்கும் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது.இதில் 10000 ற்கும் மேற்பட்டவர்கள்கலந்து

- புரட்சித் தலைவரின் ஆன்மாவின் நினைவாக தமிழ்நாட்டில் பல கோயில்களில் சிறப்பு வழிபாடுகள் நடந்தது.அதுபோல மசூதி,தேவாலயங்களிலும் வழி- பாடுகள் நடந்தன.

- சென்னை பார்த்தசாரதி கோவில் பெருமாளுக்கு சாத்தப்பட்டிருந்த பரிவட்டம் மாலை ஆகியவற்றை எடுத்து வந்து ராஜாஜிமண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த எம்.ஜி.ஆர் உடலுக்குப்போர்த்தி மரியாதை செலுத்தினர்.

- காஞ்சிபுரம்,ஸ்ரீரங்கம்,சென்னை கருமாரியம்மன் கோவில்,பார்த்தசாரதி கோவில் மற்றும் பல கோவில்களில் புரட்சித் தலைவர் ஆன்மா சாந்தியடைய கோவில்கோபுரங்களில் மோட்ச தீபம் ஏற்றப்பட்டது.

பொதுவாக நடிகர்கள் ஒரு காட்சியில் என்ன செய்ய வேண்டும் என்று இயக்குநர்கள் சொல்வதை அப்படியே செய்வார்கள். அதற்காக சிரமம் எடுத்துக் கொள்வார்கள். இதெல்லாம் அவர்கள் வாங்கும் சம்பளத்திற்கான உழைப்பு. அதற்காக அவர்களைப் பாராட்டலாம்தான். ஆனால், அதற்கெல்லாம் மேலாக வாங்கும் சம்பளத்துக்கு மட்டுமே நடிக்காமல், உடன் நடிப்பவர்கள் நலன் பற்றியும் சிந்தித்து தன்னைச் சுற்றியிருப்பவர்கள், பொதுமக்கள் எல்லார் மீதும் அன்பு காட்டி எல்லாரும் நன்றாக இருக்க வேண்டும் என்று செயல்பட்டதால்தான் எம்.ஜி.ஆர். அவர்கள் மக்கள் திலகம்!

## இந்தியாவின் துணை ஜனாதிபதியாக தெரிவான தமிழர்





இந்தியாவின் துணை ஜனாதிபதியாக தேசிய ஜனநாயக கூட்டணியின் வேட்பாளர் சி.பி.ராதாகிருஷ்ணன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.இந்தியாவின் 16-வது துணை ஜனாதிபதியாக இருந்த ஜெகதீப் தன்கர் கடந்த ஜூலை மாதம் 21-ம் திகதி பதவி விலகினார். இதையடுத்து வெற்றிடமான அந்தப் பதவிக்கு தேர்தல் நடைபெற்றது.

தேசிய ஜனநாயக கூட்டணியின் வேட்பாளர் சி.பி.ராதாகிருஷ்ணன், எதிர்க்கட்சிகள் அடங்கிய “இந்தியா“ கூட்டணியின் வேட்பாளர் சுதர்சன் ரெட்டி ஆகிய இருவரும் தேர்தலில் போட்டியிட்டனர். பிஜூ ஜனதா தளம், பாரத் ராஷ்ட்ரிய சமிதி ஆகிய கட்சிகள் இந்த தேர்தலை புறக்கணித்தன.இந்நிலையில், வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது. இதில் சி.பி.ராதாகிருஷ்ணன் 452 வாக்குகள் பெற்று இந்தியாவின் 17-வது துணை ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட சுதர்சன் ரெட்டி 300 வாக்குகள் பெற்றார். இந்திய துணை ஜனாதிபதியாக தேர்வான சி.பி.ராதாகிருஷ்ணனுக்கு பலரும் வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

# Nobel - நோபல் பரிசு - 2025


வருடாவருடம் வழங்கப்படும் உலகின் அதி உன்னத பரிசான நோபல் பரிசு வழங்கும் முறை 1833ம் ஆண்டில் பிறந்தவர் சுவீடனைச் சேர்ந்த அல்பிரட் நோபல் (Alfred Nobel) அவர்களின் நினைவாக வழங்கப்படுகின்றது. பரிசுவழங்கப்படும் ஆறு துறைகளில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு தனது சொத்தின் 94 சதவீதத்தைப் பரிசாக அளிக்க வேண்டும் என்று அவர் உயில் எழுதி வைத்தார்.

இந்த உயிலின்படி 1901ம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்தவருடம் இது 123வது வருடமாகும். பரிசுபெறுவோர் விபரங்கள் ஐப்பசி மாதம் அறிவிக்கப்பட்டது. மொத்தமாக 10 மில்லியன் சுவீடிஸ் குறோனர் (9.20.000 (யூரோ) பகிர்ந்தளிக்கப்படுகின்றது. ஒவ்வொருவருக்கும் 24 காரட் தங்கமுலாம் பூசிய பதக்கங்கள் அணிவிக்கப்படும்.

மருத்துவம், இயற்பியல(பௌதீகம்), வேதியியல் (இரசாயனம்), இலக்கியம்,பொருளாதாரம், சமாதானம் என 6 பிரிவுகளில் வழங்கப்படும் இப்பரிசானதுபுதிய கண்டுபிடிப்புகள், பொருளாதாரம், மற்றும் சமாதானத்திற்காக பாடுபட்டுஉழைத்தவர்கள் அல்லது உழைத்த தாபனங்களுக்கு வழங்கப்படுவது வழமையாகும்.இந்தத் துறைகளில் சாதனை படைத்தவர்களை இனங்கண்டு அவர்களுக்குச் சான்றிதழ்களும் பணப் பரிசும் வழங்கிக் கௌரவிப்பது சர்வதேச நோபல் கமிட்டியின் செயற்பாடாக இருந்து வருகின்றது

வெற்றிபெறும் ஒவ்வொருவருக்கும் பணப்பரிசாக 20 கோடி ரூபா வழங்கபபடுகின்றது.இந்தமுறை 7 நாடுகளைச் சேர்ந்த 12 பேருக்கு இப்பரிசுகிடைத்திருக்கின்றது. இதில் 10 பேர் ஆண்கள் 2 பேர் பெண்களாவர்.- அமெரிக்கா,பிரித்தானியா,தென்கொரியா, யப்பான், பிரான்ஸ், ஜோடான்,, கங்கேரி, வெனிசூலா நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

6- அமெரிக்கர் - 1- கங்கேரியர்
1- பிரித்தானியர் - 1- ஜோடானியர்
1- யப்பானியர் - 1- வெனிசூலாவியர்
1- பிரான்ஸ்ஸியர்

## 2025ம் ஆண்டின் நோபல் பரிசு வெற்றியாளர்கள்


Medicine (மருத்துவம்)



Mary E Brukkow - Fred Ramsdell - Shimon Sakaguchi

France USA Japan

Literature (இலக்கியம்)



Läszlo Krasznahorkai

Hungary

Physice பௌதீகவியல் (இயற்பியல்)



John Clarke - Michel Devoret - John M Martinis

USA USA USA


Chemistry (இரசாயனம்)



Omar Mwannes Yaghi

Jordan

Economic (பொருளாதாரம்)



Joel Mokyr - Philippe Aghion - Peter Howitt

USA UK USA

Peace (சமாதானம்)



Maria Corina Machado

Venezuela

## தாயகச்செய்திகள் சில...

31.10.25- நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலையால் 18 மாவட்டங்கள் பாதிப்பு 8.000 குடும்பங்களைச் சேர்ந்த 31.000 பேர் பாதிப்பு 5பேர் உயிரிழப்பு. 900 வீடுகள் சேதம்.

01.01.2025-31.10.2025 வரை போதைப்பொருள் தொடர்பில் 1.87.682 வழக்குகள் பதிவு, 1.90.938 பேர் கைது. 2.539கிலோ ஐஸ்போதைப்பொருள், 14.434கிலோ கஞ்சா, 482 கிலோ ஹரோயின், 33கிலோ கொக்கெயின், 575 கிலோ வேறு போதைப்பொருட்கள், 3 லட்சம் போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸ் அறிக்கை தெரிவித்துள்ளது.

31.10.25- நாட்டில் திருமணம், பிறப்பு வீதம் குறைவடைந்துவருகின்றன. 2024ல் 1.39.290 திருமணங்களும் 2.20.761 பிறப்புக்களும் நிகழ்ந்துள்ளன.

29.10.25- 01.01.2025 - 31.10.25வரை 2.107 விபத்துகளும் 2.237 உயிரிழப்புகளும் நாட்டில் இடம்பெற்றுள்ளது.

28.10.25- நாட்டில் தற்போது 80.000 பேர் பாலியல் தொழிலில் ஈடுபட்டிருப்பதாக பேராசிரியர் பிரதிபா மஹானாமா தெரிவித்தார்.

26.10.25- 25வயதிற்கு மேற்படஇடவர்களில் 4பேரில் ஒருவருக்கு பக்கவாத நோய் அபாயம் இருப்பதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

23.10.25- 01.01.2025 - 30.09.2025 வரை கட்டுநாயக்கா, மத்தள, பலாலி விமான நிலையங்கள் ஊடாக 75.6 லட்சம் பயணிகள் பயணித்திருப்பதாக விமான போக்குவரத்துத் துறையினர் அறிவித்தனர்.

22.10.25- தற்போது நாட்டிலுள்ள 52லட்சம் குடும்பங்களில் 43 லட்சம் குடும்பங்கள் அரச உதவிகளைப் பெற விண்ணப்பித்துள்ளனர்.

19.10.25- நாட்டிலுள்ள சனத்தெகையில் 10வீதமான மக்கள் மனநோய்களால் பாதிப்பு 2024ம் ஆண்டில் 37.000பேர் மனநோயால் சிகிச்சை பெற்றனர்.

15.10.25- நாட்டிலுள்ள 10.102 பாடசாலைகளில் 3.000 பாடசாலைகள் மிகவும் கஸ்டமான பாடசாலைகளாக கல்விஅமைச்சு அடையாளப்படுத்தியுள்ளது.

12.10.25- நாட்டிலுள்ள அனைத்து சிறைச்சாலைகளிலும் 34.765 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக சிறைச்சாலை தணைக்களம் அறிவித்துள்ளது.

10.10.25- இந்த ஆண்டு செப்டெம்பர்வரை யானை-மனித மோதல்களில் 314 யானைகளும் 113 மனிதர்களும் பலி. 2024ல் 388 யாகைள் 155 பேர் பலி

08.10.25- நாட்டில் எயிட்ஸ் நோய் அதிகரிப்பு 2021ல் 411 பேர், 2022ல் 607பேர், 2023ல் 697பேர், 2024ல் 824பேர் அடையாளம். இதுவரை நாட்டில் 6.740 பேர் அடையாளம் காணப்பட்டிருக்கிறார்கள்

ஜ06.10.25- நாட்டில் பிறப்பு வீதம் குறைவடைந்து வருகின்றது. 2020ல்3.01.706,2021ல் 2.84.848, 2022ல் 2.75.321, 2023ல் 2.47.900, 2024ல் 2.20.761

06.10.25- 06.10.2025 (06.10.1975) யாழ் பல்கலைக்கழகம் பொன் வழாவைக்(50) கொண்டாடியது.

05.10.25- நாட்டில் ஒவ்வொரு நாளும் 100 புதிய புற்றுநோயாளர்கள் அடையாளம் வருடாவருடம் 35.000 புற்றுநோயாளர்கள் அடையாளம் காணப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. ஆண்டு தோறும் சுமார் 200 சிறுவர்களும் இந்நோயினால் இறப்பு.

04.10.25- 01.01.2025 - 30.09.2025வரை 17.25.497 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்குள் வந்திருக்கிறார்கள்.

03.10.25- நாட்டிலுள்ள அனைத்து நல்நடத்தை நிலையங்களிலும் 9.000 குழந்தைகள், சிறுவர்கள் தற்போது அரசால் பராமரிக்கப்படுகிறார்கள்.

02.10.25- மதுப்பாவனையால் தினசரி 50பேர்வரை இறப்பு. வருடாவருடம் 20.000 பேர் இறப்பு. மொம்தச் சனததொகையில் 21 வீதம்பேர் மதுவுக்கு அடிமையாகியுள்ளனர் என போதைத் தடுப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

01.10.2025- நாட்டின் சனத்தொகையில் 64 வீதம் கணனி பற்றிய அறிவைக் கொண்டிருக்கவில்லை. 5பேரில் 2பேருக்கே கணனி பற்றிய அறிவு தெரியும்.

24.09.25- ஜனாதிபதி அனுரா திஸநாயக்கா ஐக்கியநாடுகள் சபையின் உரையாற்றியுள்ளார். 27 - 29 திகதிவரை யப்பானில் நடைபெற்ற"எக்ஸ்போ2025" நிகழ்விலும் கலந்து கொண்டார்.

20.09.25- பிச்சைஎடுத்தல், பாலியல் துன்புறுத்தல், பிறதுன்புறுத்தல்களால் 1.1.25 - 31.7.25வரை 5.461 முறைப்பாடுகள். சிறுவர் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

18.09.25- நாட்டில் மார்பகப்புற்று நோயால் தினமும் 15 புதிய நோயாளர்கள் அடையாளம். தினமும் சராசரியாக 3பேர் இறப்பு. ஆண்டுதோறும் 800 - 900பேர்வரை இறப்பு என சுகாதாரப் பகுதியினர் அறிவித்தனர்.

10.09.25- தற்போது இஸ்ரேலில் 2 லட்சம் இலங்கையர்கள் கடமைபுரிகிறார்கள் இவர்களில் 5.000 பேர் விசா இன்றி இருப்பதாக இலங்கைத் தூதுவர் தெரிவித்தார்.

01.09.2025- ஜனாதிபதி அனுரா திஸநாயக்காவும் அமைச்சர்களும் சேர்ந்து மண்டதீவில் சர்வதேச கிரிக்கட் மைதானத்துக்குக்கான அடிக்கல் நாட்டி வைத்தனர். மயிலிட்டித் துறைமுகம் கட்டிடம், யாழ் கச்சேரி கடவுச்சீட்டு அலுவலகம் திறந்து வைத்தார். யாழ் பொது நூலகத்தைப் பார்வையிட்டார். கச்சதீவுக்குத் தனது குழுவினருடன் சென்று அங்குள் படைத்தரப்பினருடன் கலந்துரையாடிவிட்டுக் கொழும்பு திரும்பினார்.

# உலகச்செய்திகள் சில...

31.10.25- யப்பான் நாட்டின் வரலாற்றில் முதன்முதலாகப் பெண் பிரதமர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். 64 வயதுடைய இவரின் பெயர் சனே டகாய்ச்சி. இவர் யப்பானின் இரும்புப் பெண்மணி என்று அழைக்கப்படுகின்றார்.

28.10.25- பிரான்சின் முன்னாள் ஜனாதிபதி நிக்கலஸ் சாக்கோஸி இலஞ்ச ஊழல் விடயமாக 5 ஆண்டுகள் சிறைத்தண்டனைக்காக சிறைக்கு அனுப்பப்பட்டார்.

25.10.25- இந்தியா -அயோத்தியில் 2.128 அர்ச்சகர்கள் நடாத்திய தீபாவளிக்கொண்டாட்டத்தில் ஒரே நேரத்தில் 29 லட்சம் விளக்குகளை ஏற்றி உலகசாதனை நிலைநாட்டப்பட்டது.

30.09.25- பிலிப்பைன்சில் புயல் 100 பேர்வரை பலி 4லட்சம்பேர் இடம்பெயர்வு

27.09.25- தமிழ்நாடு கரூர் மாவட்டத்தில் நடிகர் விஜய் கலந்துகொண்ட பிரசாரக்கூட்ட சன நெரிச்சலில் 41பேர் பலி 100 பேர்வரை காயம்.

25.09.25- மதுபானம், புகைத்தல், போதைப் பாவனைகளால் ஆண்டுதோறும் 2.6 மில்லியன் மக்கள் இறப்பு. ஐ.நா.சுகாதாரப்பகுதி தெரிவிப்பு.

22.09.25- இஸ்ரேல் - பாலஸ்தீனப் போரால் காஸாவில் 2 வருடங்களில் 60.000பேர் பலி. தற்போது அமைதி ஒப்பந்தத்தில் இரு தரப்பினரும் முன்வந்தாலும் ஆங்காங்கே சில மோதல்கள் நடைபெற்று வருகின்றன.

20.09.25- ஆபிரிக்கநாடான கொங்கோ குடியரசில் இரண்டு படகு விபத்துக்களில் 200 பேர்வரை பலி.

15.09.25- இந்தியாவின் 15வது துணை ஜனாதிபதியாக தமிழரான சி.பி இராதாகிருஸ்ணன் தெரிவாகியுள்ளார்.

10.09.25- நேபாளத்தில் இடம்பெற்ற அரசு-பொதுமக்கள் போராட்டத்தால் 51பேர் பலி 1.300பேர் காயம். அரசு கவிழ்ப்பு புதிய பிரதமராக முன்னாள் தலைமை நீதிபதி சுசீலா கார்க்கி பதவி ஏற்றுள்ளார்.

08.09.25- சூடானில் ஏற்பட்ட நிலச்சரிவில் 1.000 பேர்வரை உயிரிழந்துள்ளனர்.

06.10.25- ஆப்கானிஸ்தானில் நிலநடுக்கம் 1.500 பேர்வரை இறப்பு. 2.000 பேர்வரை காயம். 1000 வரையிலான வீடுகள் சேதம்.

05.09.25- 2வது உலகப்போர் முடிவடைந்து 80 ஆண்டுகள் நிறைவை நினைவுகூர்ந்து மாபெரும் அணிவகுப்பு நடைபெற்றது. ரஷ்ஷிய அதிபர் புடின் உட்பட 28 நாடுகளின் தலைவர்கள் கலந்துகொண்டனா. படையினரின் சாகஸ் நிகழ்வுகளும் சிறப்பா இடம்பெற்றது....

Good Shepherd Child Development center,
Mullai Road, Mankulam,
Srilanka.
E-mail – mankulamcdc@gmail.com
Tel. No. – 0212060077/+94 775924582

Date: 09.09.2025

அன்பின் மண் சஞ்சிகை உறுப்பினர்கள் அனைவரையும் நன்றியுணர்வுடன் இறையாசி வேண்டி நினைவுகூருகின்றோம்

எம் பிள்ளைச் செல்வங்கள் கல்வியில் உயர நீங்கள் ஆற்றிவரும் பேருதவி எமக்கு மிக்க பலமாக உள்ளது. தொடர்ந்து நீங்கள் ஆற்றி வரும் சேவைக்களுக்கு நன்றி கடனாக எம் பிள்ளைகளின் கல்விச் சாதனைகள் தொடரும்.

2025.08.27 திருமதி மேரி விஜயகுமார் திருமதி மங்கையற்கரசி சிவராசன் அவர்கள் மண்சஞ்சிகை அமைப்பினூடாக அனுப்பிவைத்த ரூபா 136978.00 (400 யூரோ) எம்கரம் கிடைத்தது. இந்நிதியை எம் இல்லத்தில் இருந்து கல்வியை தொடரும் மாணவர்களின் மேலதிக வகுப்புகளுக்காக பயன்படுத்துதினோம்.

இந்த வருடம் 7 மாணவிகள் க.பொ.த சாதாரண பரீட்சைக்கு தோற்றுகின்றனர் உங்கள் உதவியினால் அவர்களுக்கு நடைபெறுகின்ற மேலதிக வகுப்புக்கள் பிள்ளைகளின் கல்விக்கு உதவியாக உள்ளது.

உங்கள் மக்கள் பணி என்றும் வளர உங்களின் உதவிக்கரம் பலம் அடைய இறைவன் உங்கள் குடும்பங்களையும் உங்களையும் ஆரோக்கியத்துடன் வாழ வழி செய்து காத்திட வேண்டும் என்று தொடர்ந்து மன்றாடுகின்றோம் என்று கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி.

இப்படிக்கு
என்றும் உங்கள் அன்பு சேவையை மறவாத
பிள்ளைகள் மற்றும் அருட்சகோதரிகள்.

Sr. Sumithra

Manager.
Good Shepherd Child Development Center,
Mankulam.

## மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும் கல்விச்செலவுகளைப் பொறுப்பேற்று உதவும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம். எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்து உதவலாம். இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

1-3 திருமதி பிங்கலை செந்திலன் - Kitzingen - 600-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய் - முல்லைத்தீவு

உதவி பெறுவோர்.. - தியாகராசா டிலினிசா (பி.தி 10.04.2014)
செல்வகுமார் சதுமிகா (பி.தி 12.11.2010)
றொனி டிலக்சனா

(பி.தி 28.10.2015)

.......................................................................................................................

4-5 திருமதி சிவதர்சினி பிராங்ளின் - Viersen - 480-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய் - முல்லைத்தீவு
உதவி பெறுவோர்.. - றமணன் பிலோமினா (பி.தி 08.04.2012)
- மகேஸ்வரன் அர்ச்சனா(பி.தி 19.05.2009)

.......................................................................................................................

6- திரு பொ மகாலிங்கம் - Oberhausenen - 480-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய்
உதவி பெறுபவர் - சுரேஸ்குமார் மனோறஞ்சனி (30.08.2004)

.......................................................................................................................

7- திரு திருமதி ஜெய்டா கீதன் - Oberhausenen - 480-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய்
உதவி பெறுபவர் - சிவகுமார் சிரோமி (பி தி 30.08.2014)

.......................................................................................................................

8-9 திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Bonn - 480-00 யூரோ
அமுதசுரபி அறக்கட்டளை - வவுனியா
உதவி பெறுவோர்..செல்வி சிற்பவானந்தராசா டேன்சிகா பிதி

10- செல்வன் பிரணவன் யோகராசா - Düsseldorf - 240-00 யூரோ
இந்து ”அன்பகம்” சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா

உதவி பெறுவோர்.. சிவராசா பவிதா ( பி.தி 05.09.2011 ) ..

.........................................................................................................................................

11- Johannas Grüendler - Köln - 480-00 யூரோ
இந்து ”அன்பகம்” சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. தட்சாயினி கபிசா ( பி.தி 01.09.2012)

.........................................................................................................................................

12- திருமதி ஸ்ரெவ்வானி இம்மானுவல் - Essen - 480-00 யூரோ
இந்து ”அன்பகம்” சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. அஸ்வினி சுனில்சாந்த் ( பி.தி 09.06.2012)

.........................................................................................................................................

13 திருமதி அஜந்தி பத்மநாதன் - London - 480-00 யூரோ
செபமாலை இரக்கத்தின் இல்லம் - தலைமன்னார்- மன்னார்
உதவி பெறுவோர்.. - சுரேஸ் சுஜந்தினி (பிதி 23.10.2013)

.........................................................................................................................................

14- திருமதி சாந்தினி துரையரங்கன் - Essen - 480-00 யூரோ
சிறீ சண்முகா பெண்கள் இல்லம் - திருகோணமலை
உதவி பெறுபவர் நல்லரெட்ணம் துர்க்கா பிதி 25.11.2003

.........................................................................................................................................

15- திரு, திருமதி சண்றா கீர்த்திக் - Duisburg - 480-00 யூரோ
சிறீ சண்முகா பெண்கள் இல்லம் - திருகோணமலை
உதவி பெறுபவர் நிசாந்தன் லதுமிக்கா பிதி 23.02.2015

.........................................................................................................................................

16- திரு ரகுப்பிரியன் ஏகானந்தராசா - Duisburg - 480-00 யூரோ
ஞானசம்பந்தர் குருகுலம் - மட்டக்களப்பு
உதவி பெறுபவர் சத்தியசீலன் சாயிரிதன் பிதி 07.06.2010

.........................................................................................................................................

17- மேரி விஜயகுமார் + மங்கை சிவராசன் - Bietigheim - 2.400-00யூரோ
நல்லாயன் சிறுவர் இல்லம் - மாங்குளம்(1200-00 +1200-00)
உதவி பெறுபவர் இல்லப் பிள்ளைகள் அனைவரும்

-----------------------------------------------------------------------------------------------------------------.

**பொறுப்பெடுத்தவர்கள் 14 பேர்.. (ஜேர்மனி, லண்டன்)**

**உதவி பெறுவோர் 16 பிள்ளைகள் + மாங்குளம் நல்லாயன் சிறுவர் இல்லம் (தாயகம் - சிறீலங்கா)**

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு..

ஆரம்ப இருப்பு 01-09-2025 **(மேலதிகச் செலவு)** - 520-54

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Viersen + 120-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
02. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 120-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
03. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Weeze + 120-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
04. திரு. Johannas Gruendler - Köln + 120-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
05. திருமதி பிங்கலை செந்திலன் - Kitzingen +150-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு-
06- திரு பொ மகாலிங்கம் - Oberhausenen +120-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
07- திரு திருமதி ஜெய்டா கீதன் - Oberhausenen +120-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
08- திரு, திருமதி சண்றா கீர்த்திக் - Duisburg +120-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
09- திரு ரகுப்பிரியன் ஏகானந்தராசா - Duisburg +120-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
10- மேரி விஜயகுமார் + மங்கை சிவராசன் - Bietigheim+ 400-00
(நல்லாயன் சிறுவர் இல்லம் கல்வி மேம்பாட்டு மாதாந்த உதவி)
" " " " டிசம்பர் 2025 " " + 400-00
11- திருமதி சாந்தினி துரையரங்கன் - Essen + 480-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற வருடாந்த அன்பளிப்பு)
12- திருமதி அஜந்தி பத்மநாதன் -London + 480-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற வருடாந்த அன்பளிப்பு)

------------------

+ 2.870-00+2.870-00

---------------

+2.349-46.

13- திரு பரமானந்தன் பிரபாகரன் - Oberhausen + 150-00
(தந்தையாரின் நினைவு உதவி)
14- திருமதி மீரா நித்தியானந்தன் - Essen - + 342-90
(தாயாரின் நினைவுநாள் + பிள்ளைகளின் பிறந்தநாள்அன்பளிப்பு)
15- திரு கிறிஸ்ரி அமலதாஸ் - London + 200-00
(மகனின் பிறந்தநாள் அன்பளிப்பு))

------------------------------------------------

+ 692-90 + 692-90

-------------

+ 3.042-36

முற்பக்கப்படி + 3.042-36

**அனுப்பியது...**

ரூபா யூரோ

1) ஒளிரும் இல்லம்”மல்லாவி-துணுக்காய் -1.00.000-00 - 284-90
(நி.மீரா அன்பளிப்பு- Mülheim)

2) ஒளிரும் வாழ்வு இல்லம்-புதுக்குடியிருப்பு- 20-000-00 - 58-00
(நி.மீரா தாயார் நினைவுஅன்பளிப்பு Mülheim))

(அமல் மைத்துனர் நினைவு - London) - 32.472-13 - 100-00

3) நல்லாயன் சிறுவர் இல்லம் - மாங்குளம்1.37.276-88- 400-00
(23.10.2025 மேரி + மங்கை கல்வி நிதி உதவி)
(15..12.2025 ” ” ” ” ” - 400-00

4) சாந்தோம் முதியோர் இல்லம் - மன்னார்- 36.066-68 - 150-00
(பிரபா தந்தையார் நினைவு)

5) செபமாலை இரக்கத்தின்இல்லம்- மன்னார்- 32.472-1 - 100-00
(அமல் மகள் பிறந்தநாள்அன்பளிப்புLondon )

(அஜந்தி வருடாந்தநன்கொடை- London) -1.67.213-02 - 480-00

6) அன்பகம் சிறுவர் இல்லம் வவுனியா - 1.65.228-52 - 480-00
(23.10.25 வருடாந்த நிதி உதவி)

7) சிறீசண்முகா பெண்கள் இல்லம்-திருகோணமலை
சாந்தினி துரை வருடாந்த நிதி உதவி- 1.67.213-02 - 480-00

---------------.

- 2.932-90 -2.932-90

-----------------

+ 109-46

மண் சஞ்சிகை வக்கிக்கணக்கு வங்கிவரி

01.09.2025 - 30.09.2025 - 16-29
01.10.2025 - 31.10.2025 -21-19.................................... - 37-48

-----------------------

31.10.2025 மீதி கையிருப்பு + 71-98

------------

# SEBAMALAI MARIYANNAI HOUSE OF COMPASSION
## செபமாலை மரியன்னை இரக்கத்தின் இல்லம்

டோமினிக்கன் கன்னியர் மடம்,
துள்ளுகுடியிருப்பு,
பேசாலை,
இலங்கை
023-2050095

Dominican Convent,
Thullukudiyiruppu,
Pesalai,
Sri Lanka
023-2050095

20.10.2025

மண் சஞ்சிகை
ஜெர்மனி,

அன்புடைய மண் சஞ்சிகை அங்கத்தவர்களுக்கு

கடந்த 16.10.2025 அன்று லண்டனில் வசிக்கும் செல்வி ஜூலியா கிறிஸ்ரி அமலதாசன் அவர்களின் பிறந்தநாளையொட்டி எம்முடைய இல்ல சிறார்களுக்கான மதிய உணவையும், தீபாவளி திருநாளுக்கான ஆடைகளையும் பெற்றுக் கொடுப்பதற்கு தாங்கள் 32472 ரூபாவை எமது வங்கிக் கணக்கிற்கு அனுப்பியிருந்தீர்கள். அதன்படி அருட்சகோதரிகளான நாங்கள் 20.10.2025 அன்று அவர்களுக்குரிய மதிய உணவையும் புதிய ஆடைகளையும் பெற்றுக் கொடுத்தோம். இதற்காக உங்களுக்கு எங்களுடைய மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்

உங்கள் அனைவருக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்

நன்றி

Sr. M. M. Joseph

அருட்சகோதரி மேரி மெக்டலின் ஜோசப்

முகாமையாளர்

**Sisters of Charity**

*"Shanthom"*
*Home for the Elders*
*Pattim, Mannar.*
*Sri Lanka.*

20/10/2025

திரு. வைரமுத்து திவாகரன்,
பிரதம ஆசிரியர்,
மண் சஞ்சிகை,
ஜேர்மனி.

அன்பின் ஐயா,

நீங்கள் எங்களுக்கு செய்து வரும் அனைத்து உதவிகளுக்கெல்லாம் மிகவும் நன்றி உடன் கடமை பட்டு இருக்கின்றோம். தீபாவளி நாள் முன்னிட்டு 50025.63 (150.00 Euro) மண் சஞ்சிகை ஊடாக எமது இல்லத்திற்கு அனுப்பி உள்ளீர்கள் மிகவும் நன்றி உங்களுக்கும் மண் சஞ்சிகை நிர்வாகத்திற்கும் உங்கள் பணி சிறக்க என்னாளும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

நன்றி
இப்படிக்கு
Sr. Consa.

**Sister Incharge**
Santhom Home For Elders
Sisters of Charity
Pattim- Mannar.

ஒளிரும் வாழ்வு-புதுக்குடியிருப்பு பிரதேசம்

**Olirum Vaalvu- Puthukudiyiruppu Division**

உடையாயர் கட்டு
கிழக்கு, உடையார் கட்டு
புதுக்குடியிருப்பு

Udaiyarkaddu east
Udaiyarkaddu
Puthukudiyiruppu

**Reg No:- MU/PKI/DS/VSSO/25**



**தலைவர்**

திரு.இ.அம்பிகைபாலன்

BA.Hon, Dip in coun

தொ.பே 07778491233

**செயலாளர்**

திரு.கு.அகிலன்

சமாதான நீதவான்

தொ.பே 0772049344

**பொருளாளர்**

திரு. ச.தவசிங்கம்

தொ.பே 0772890659

**உப தலைவர்**

திரு. சி.உதயகுமார்

**உப செயலாளர்**

**திருமதி வ.செல்வராணி**


**எனது இல :- OV/NG/T.LET/O1**

**திரு திருமதி கிறிஸ்ரி அமலதாஸ்**

**லண்டன்**

**பிரதம ஆசிரியர்**

**மண் சஞ்சிகை ஊடாக**

**அன்புடையீர்**

**நன்றி கூறுகின்றோம்.**

எமது ஒளிரும்வாழ்வு அமைப்பின் ஞானக்குழந்தைகள் பகல் பராமரிப்பு நிலையமானது புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உள்ள ஒரேயொரு மனவிருத்தி பாடசாலையாகும். இங்கு 32 மனநல உடல்நல பாதிப்பிற்கு உட்பட்ட மாற்றுத்திறனாளி குழந்தைகள் கல்வி கற்கின்றார்கள். இவர்கள் அனைவரும் மிக வருமானம் குறைந்த குடும்பங்களிலிருந்தே வருகின்றார்கள்.

நாளாந்தம் அவரவர் வீடுகளிலிருந்து பாடசாலைக்கு பேருந்தில் பாதுகாப்பாக அழைத்து வரப்பட்டு மதியத்துடன் பாதுகாப்பாக வீடுகளில் சேர்க்கப்படுகின்றார்கள் இவ் இடைப்பட்ட நேரத்தில் அவர்களுக்கான செயற்திறன் கல்வி, பேச்சு பயிற்சி, இசை நடனப் பயிற்சி, தொழிற்பயிற்சி என்பவற்றோடு காலை உணவு, மதிய உணவு, என்பன வழங்கப்படுகின்றன.

இவை அனைத்திற்கும் மாதாந்தம் ரூபாய் ஏழு இலட்சம் வரை செலவுகள் ஏற்படுகின்றன. இச் செலவினங்களை பல உறவுகளின் வீடுகளில் இடம்பெறும் மகிழ்வான தருணங்களை எங்கள் பிள்ளைகளோடு கொண்டாடுவதன் ஊடாகவே ஈடு செய்ய முடிகின்றது.

அந்த வகையில் தங்களது *குடும்ப உறவினரான அமரர் திரு சிவசுப்பிரமணியம் குணசீலன்* அவர்களின் முதலாவது ஆண்டு நினைவு தினத்தினை முன்னிட்டு மண் சஞ்சிகை ஊடாக

தாங்கள் வழங்கிய *முப்பத்து இரண்டாயிரத்து நாநூற்று எழுபத்து இரண்டு ரூபா பதின் மூன்றுசதம்* கிடைக்கப்பெற்றது என்பதை மகிழ்வோடு அறியத்தருகின்றோம்.

மிகப் பெறுமதியான உதவிகளை வழங்கி அன்பு உறவின் நினைவு சுமந்து எமது பிள்ளைகளுக்கு உணவு வழங்கியமைக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு எமது இதய அஞ்சலிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

R.AMBIKAIPALAN
President
Olirum Valvu
Puthukkudiyiruppu.
077 849 1233

**நன்றி**

**இ.அம்பிகைபாலன்**
**தலைவர்**

**கு.அகிலன்**
**செயலாளர்**


**E-mail :- olirumvaalvu@gmail.com** **Phone No :- 0094778491233**
**Web:- www.olirumvaalvu.org** **Face book :- olirumvaalvu puthukudiyiruppu**

# ஆவணப்படுத்தல் முயற்சியில் (6) ஆறு மில்லியன் பக்கங்களைக் கடந்த ஈழத்து எண்ணிம நூலகம்'

இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் எழுத்தாவணங்களை எண்ணிமப்படுத்தி ஆவணப்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்ற நூலக நிறுவனம், 31.055.2025 இன்றுடன் ”6,069,660” பக்கங்களை ஆவணப்படுத்தியிருக்கிறது.

நூலகம் மற்றும் பல்லூடக நூலக வலைத்தளங்களில் ஆவணப் பாதுகாப்பை முன்னெடுத்து வரும் நூலக நிறுவனத்தின் செயற்பாடுகளில், இதுவரை 6 மில்லியன் பக்கங்களை எண்ணிம வடிவில் பதிவுசெய்து பாதுகாத்திருப்பது என்பது ஒரு மிக முக்கியமான விடயமாகும்.

2005 ஆம் ஆண்டிலிருந்து 122 செயற்றிட்டங்கள் வாயிலாக இத்தனை ஆவணங்களையும் ஆவணப்படுத்தியிருப்பதுடன் சிறப்புச் சேகரங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள், பிராந்திய சேகரங்கள் என தனது செயற்றிட்டங்களை பல கோணங்களில் நகர்த்திச் சென்று தற்போது 14 தொடரும் செயற்றிட்டங்கள் மூலமாக தனது ஆவணப்படுத்தற் பணியை முன்னெடுத்துச் செல்கிறது.

இந்த அடைவினை எட்டுவதில் நிதி வழங்கல், இடவசதி ஏற்பாடு, உபகரணங்கள் வழங்கல், தொழில்நுட்ப உதவி, ஆலோசனை, ஒருங்கிணைப்பு, மற்றும் சமூக விழிப்புணர்வு ஏற்படுத்தல் என எல்லா விதத்திலும் தங்களது ஒத்துழைப்பை வழங்கிய நூலகப் பங்களிப்பாளர்கள், நூலக பணியாளர்கள், மற்றும் தன்னார்வலர்கள் அனைவருக்கும் நூலக நிறுவனம் தனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றது.

மேலதிக தகவல்களுக்கு : www.noolaham.org

**மேலும் விபரம் 80ம் பக்கத்தில்.....**

**குறிப்பு:-**

நூலக சேவையினரின் அரிய பணி சிறப்பானது... வாழ்த்துகள்!..

யேர்மனிவாழ் எழுத்தாளர்களே!..படைப்பாளிகளே!. உங்களால் எழுதப்பட்ட நூல்களை இந்த நூலக நிறுவனத்துக்கு அனுப்புங்கள். PDF வடிவத்திலும் கணனி மூலம் அனுப்பலாம்..

காலாதி காலம் அங்கே கணனிமயப்படுத்தி வைக்கப்படும். நாம் இல்லாமல் போனாலும் அங்கே வரலாற்றுப் பதிவாக பல நூற்றண்டுகளுக்குப் பத்திரப்படுத்தி வைக்கப்படும் ஆகவே உங்கள் படைப்புகளைத் தாமதியாமல் அனுப்பி வையுங்கள்!... மண் சஞ்சிகையின் வெளியீடுகளை நூலக இணையத்தில் (www.noolaham.org) பார்வையிடலாம்...**ஆசிரியர்......**




## மேலதிக விபரங்கள் 79 ம் பக்கத்தில்

யேர்மனி – ஒபகௌசன் நகரில் வசிக்கும் எமது வாசகர் திரு ப பிரபாகரன் அவர்களின் நிதி உதவியால் தந்தையாரின் 5வது ஆண்டு நினைவாக புதுக்குடியிருப்பிலுள்ள ஒளிரும் வாழ்வு இல்லத்தில் வசிப்போருக்கு உணவளித்தல் 20.10.2025

லண்டன் நகரில் வசிக்கும் எமது வாசகர் திரு கிறிஸ்ரி அமலதாசன் அவர்களின் நிதி உதவியால் அவரது மகளின் பிறந்தநாளையொட்டி தலைமன்னாரிலுள்ள செபமாலை இல்லத்தில் வசிப்போருக்கு உணவளித்தல் 20.10.2025

Wissen, Kultur & Literatur – கல்வி, கலை, இலக்கிய, சமூக இருமாத இதழ்

# ERDE (ERDE)

Nov/Dez-2025

Germany / Ausgabe 234




வாசகர்கள் அனைவருக்கும்

இனிய நத்தார்-புதுவருட நல் வாழ்த்துகள் 2025-2026

வருடசந்தா ஜேர்மனி 20 யூரோ

ஏனையநாடுகள் 25 யூரோ